

புது எழுத்து

12

ஆசிரியர் மனோன்மணி

ஐப்பசி 2005

அஞ்சலி

கே.ஆர். நாராயணன்

1922-2005

மக்கள் குடியரசுத்தலைவரின்
மறைவிற்கு புது எழுத்து அஞ்சலி

ப. துரைசாமி

தமிழகத்தொல்லியலுக்கு
அரிய பங்களிப்பு செய்த
ஆசிரியர் துரைசாமியின் மறைவு
பேரிழப்பாகும்.

மார்கழி 2005

விலை ரூ.30 (தபாலில் ரூ.40)
இணைப்பு இதழுடன் சேர்த்து

புது எழுத்து 12

ஆசிரியர்
மனோன்மணி

ஆசிரியர் குழு
சிபிச்செல்வன், ஜி. குப்புசாமி

பதிப்பாசிரியர்
ஆர். சுகவனம்

ஆர்ட் எடிட்டர்
தி. முரளி

ஒளி அச்சு
தே. சங்கர்

அச்சகம்
செந்தில் அச்சகம், தருமபுரி

அனைத்துத் தொடர்புகளுக்கும்
மனோன்மணி
39 ஜே.கே.சி. தெரு
காவேரிப்பட்டணம் 635 112
தொலைபேசி: 04343 252665
செல்: 98426 47101
email: puduezuthu@yahoo.com

கவிதைகள்

பழனிவேள் 2
ஸ்ரீநேசன் 8
கரிகாலன் 12
விஸ்வநாதன் கணேசன் 15
அஜயன் பாலா சித்தார்த்தன் 26
ரிஷி 34
பெருந்தேவி 40
ஸமீரா 46
கலாப்ரியா 6
ரெங்கநாயகி 10
பொன் இளவேனில் 13
யவனிகா ஸ்ரீராம் 16
பா. தேவந்திரபூபதி 32
அய்யப்ப மாதவன் 36
குலசேகரன் 42

சிறுகதைகள்

நவீனாவும் புறநகர் குடியிருப்பில் சில அசைவுகளும் 48
யவனிகா ஸ்ரீராம்
தேடல் 51
சத்யானந்தன்
ன்யாக் 54
குமார் அம்பாயிரம்
இரண்டு சைக்கிள்கள் 66
எஸ். செந்தில்குமார்

மதிப்புரை

செம்பருத்தி பூத்த வீடு சேகு 83
குறிஞ்சிப்பாட்டு; காலமும் கருத்தும் 88
வ.கீதா

கட்டுரை

தெற்குப் பசிபிக் தீவுஆதிக்குட்டை மனிதர்
சு.கி. ஜெயகரன் 98
தி லிட்டில் ரிவ்யூ
ஆர். சிவகுமார் 107
தகடூர் நாட்டுச் சுடுமண் பொம்மைகள்
ர. பூங்குன்றன் 112
கேள்
சந்ரு

அஞ்சலி

சுந்தர ராமசாமி 126
அமிர்தா ப்ரிதம் 127
நிர்மல் வர்மா 128



பக்கங்கள்

பழனிவேள்
கவிதைகள்

பேய் முலைச்சி

அவளது நர்த்தனத்தில்
சிந்திய சாண்டையில் கருஞ்சிறுத்தைகள்
வெளியேறுகின்றன

இரவின் அடர்த்திக்குள்
அவள் சிறுவிளக்கை கொளுத்த
ஜாமங்கள்
மடிக்கப்படுவதும்
பிரிக்கப்படுவதுமான
சரசரப்பு கேட்கிறது

எதன் மீதும் பிடிப்பற்று
அகாலத்தைக் கொண்டையில்
முடிச்சிடுகிறாள்

அசைவில்
சிறுகோட்டில் ஒட்டியப் பெரும்பழ
முலைகள் குலுங்கி
துணப்பூட்டுகிறது

காம்பில் மின்னும்
வீழ்ந்தணைந்த எரிகல்

கல்காலத்து பால் குடியில்
மயங்கியவன் உறக்கத்தில்
பறித்தப் புதிய கனவை நீட்டுகிறான்

அவள் அதனை
வாய்ச்சுவைக்காக
மெல்லுகிறாள்

ப ழ னி வே ள்
க வி தை க ள்

பென்பைப் வாச்சியம்

அகலசாலையின் ஒருபுற நடைமேடையில்
பூக்காரியின் கூடையில்
சுருளான பூப்பந்துகள் பல
வண்ண மனங்கசிகின்றன
வாங்குவாரற்று
இருபுறமும் வாகனங்கள் யாரும்
கேளா ஒலிகள்
பூக்காரியின் குடும்பம்
பிரிக்கும் உணவைப் புறக்கணித்த
இளைய மகள்

இனாமாக கிடைத்த பென்பைப்
வாச்சியத்தை ஊதுகிறாள்

சரிசா மமபதநீ என்றவுடன்
வேனிற்கால வெயில்
பருவமடைந்து விட்டது

பருவத்தின் உக்கிரத்தில்
வாகனவாசிகள் நிழல்தேடி
அலைகின்றனர்
சாலையில் நிழலின் சாயைக்கூட இல்லை

ஆனால் அவளது வாச்சியத்தின்
சாய்கோணத்தில் நிரம்ப நிழலுள்ளது

அவள் கடைசிவரை
ஊதவில்லை நிழலை.

வாச்சியம் - வாத்தியம்

பழனிவேள்
கவிதைகள்

பொன் வயல்

சூரியனின் ஆரஞ்சு விளைந்த
கரம்பில்
ஓடத்துவங்கினேன்

பைத்தியம் பிடிக்க

அகப்படாமல் போகிறது
இன்னதென அறியாமல்
நாயும் உடனோடி வருகிறது
கண் கூசும் நிராதரவில்

தணித்துக் கிடந்த காளியை
பாழில் இருந்து கரம்பில் கிடத்தி
ஆரஞ்சின் மஞ்சளைப் பூசி
புணர்ச்சியில் ஓர்மைப்படுகிறான்
ஒருவன்
அவன் முகத்தை
மஞ்சள் மறைக்கிறது

ஓடுகிறோம்
நாயும் நானும்
கொட்டும் கானலை நக்கிக் குடித்து

நாங்கள் ஓடிவந்தது
வெடிப்பற்ற தங்கப்பாளங்கள்
என்று
திருப்தியோடு திரும்புகிறோம்.

பழனிவேள்
கவிதைகள்

ஊசி-பாசி

பித்தத்தின் தீயில்
வெளிறிக் கிடக்கும் முகத்தை
முதல் பார்வையிலேயே
அக்குறத்தி கண்ணுற்றாள்

மிகமதியவேளை
மிக குழந்தையாக்கி
அம்மணத்தில் சுடரும்
தீயின் பிழம்புகளை
கூர்ந்த ஊசியால்
மெல்ல களைகிறாள் உடலெங்கும்
பச்சைக் குத்தத் துவங்கி

வலிதாளா உடல் வனப்பூட்டும்
யௌவன சேணங்களை விடாது
பொருத்துகிறாள்

முனகல்கள் ஓய்ந்தும்
இன்னும் மீளாத குழந்தையின்
ஆசையோடு
தண்ணீரில் முகம் பார்க்கிறேன்

தாவரச் சங்கமமொன்று
நீரில் அசைந்தாடுகிறது

கலாப்ரியா

ajit seal

எல்லாம் கலந்த காற்று

1.

இரையாகி
இறந்து கிடந்தவனை
மறுபடிக் கடக்கும்படி
அமைந்தது பயணம்

மிருகக் கூர்மைக்குத் தப்பிய
கடைசித் துணுக்குகளை
அரித்துச் செழித்துக்கொண்டிருந்த
புழுக்களைப் பார்த்தபடி

குகை கண்டதும்
தங்கிக்கொண்டாள்/ன்

மரணவாசனை
அழுகல் நெடி எலும்புரு
நினைவு மொய்க்க
கல்லாயுதத்தால்
கோட்டோவியம் செதுக்கினாள்/ன்

* * *   * * *   * * *

சொற்கள் இழுத்துவரும்
வார்த்தைகளுக்கு முன்னும்
பின்னும்
வெளி பூராவும்
வாழ்க்கை கிடக்கிறது
எல்லாம் கலந்த காற்றாய்

2.

வரிகளில் மறைந்து
ஜீவித்துக் கொண்டிருந்த
உன் கவிதை இன்றைய பசிக்கு
உணவாக விரித்துக் கொண்டது

அங்கீகாரம் யாசிக்கும்
அலங்காரப் பனிச்சர்க்கரை
இல்லையதில்

எனினும்
தனிமை மறக்கடிக்கும்
தன்மையுடன்
உண்ண முடிந்தது

நாட்குறிப்பெழுதிய
நாளின்
சோர்வின்
முடிவில் நிகழ்ந்தது இது

3.

இனம்புரியாது
மனம் நிறைந்த பரிதவிப்பை
மௌனத்தை
பதிவு செய்துவிட்டு
வெற்றிடத்தை நிரப்பிக் கொள்
என்கிறாய்

மேல் கீழாக ஆதிக்கம் செலுத்திய
உடலுறவின் பாதியில்
கீழிறங்கி விச்ராந்தியாக
ஏதேனும் உன் கற்பனை போல்
எனும் உடல் மொழி வழி
* * * * * * * * *
லயிப்பில் அமிழ்கிறார்கள்
ஆண் பெண்
பெண் ஆண்
சுற்றி பால இருள்
தீர்க்கமான பால சூர்யன் போல்
பால இருளில்
உறங்கும் குழந்தைகள்

4.

பெயர்ச் சொற்கள்
உற்பத்தி செய்யும்
உலகில்
வினை புரிகிறாய்

உன் வினை
உன் வினையல்ல
ஊழ்வினையால்
மூன்று மனிதர்களுடன்
நான்கு சிங்கங்களுடன்
பிணை பட்டிருக்கிறாய்

கோட்டைக் கொடியின்
பட படப்பு
உன் வியர்வைக்கு ஒரு போதும்
விசிறி வீசாது

உறுப்புநலன் காட்டி
புலவோர்களை
அரசியும்
சாமரம் வீசும் பெண்களும்
தொந்தரவு செய்கிறார்கள்
அவ்வப்போது

மெய்க்கீர்த்திச் செய்யுள்
பாடவிடாமல்.

பணியிடம்

ஆயுள் நிரம்பிட
உடல் சிறுத்துக் கூன்குறுகி மண்தொட
பார்வையும் கெட்டணையும் வயதில்
பாட்டிக்கு என் பணியிடத்தைக்
காணும் ஆவல்
கடைசி விருப்பமென மதித்துப்
பணியிட வாயிலுக்கு
இட்டு வந்தேன்
உள்ளே வர மறுத்தது
இங்கேயே காத்திரு
ஆபத்து வந்தால் எதிர்க்காதே
பணிந்துவிடு எனச் சொன்னேன்
ஓரமாய் போய் அமர்ந்து கொண்டது
மாலை
பணி முடித்துத் திரும்புகையில்
செத்துக் கிடந்தது
தோள் மீது சுமந்து இல்லம்
திரும்பினேன்
இனி
தினம் தினம்
திரும்புகையில்
பாட்டியின் பிணத்துடன்தான்
திரும்புவதாய் இருக்கும்.

suhas bahulkar

ஸ்ரீநேசன்

மிதந்து வந்த முலைகள்

இளம்பெண்ணின் மார்பளவு உயரத்தில்
அந்தரத்தில்
இரு முலைகள் மிதந்து வந்தன.
கணந்தோறும் மாறியபடி மிதந்தன அவை
உலகத்தில் தோன்றிய
தோன்றுகின்ற தோன்றும்
எல்லாவித முலைகளின் வடிவெடுத்துக் கொண்டிருந்தன
முலைவளராப் பெண்ணொருத்தி
காழ்ப்புடன் காண
அவை மறைந்தன
மூதாட்டி இளம்பருவ நினைவில் தொட
சுருங்கிப் போயின
சிறுமிகளுக்கோ
கனவு போல காட்சியளிக்கிறது
பின் தொடர்ந்த வக்கரித்த
இளைஞர் கூட்டத்தில் ஒருவன் சீண்ட
பலூனாய் வெடித்துச் சிதற
அலி ஒன்று காண
மயிர் முளைத்தடர்ந்து வசீகரிக்கும்
பழக்க வேட்கையில்
பற்றி நான் உறிஞ்ச
ரத்தமாய்க் கரித்துக் குமட்டியது
எதிர்வந்த அன்றீன்ற கன்றொன்று
தாவிப் பருக
அதன் தாடைப் புறங்களில்
வழிகிறது தாயின் பால்.

கவிதைகள்

Thomas Brill

ரெங்கநாயகி

மகாப் பொழிதல்

நிற கன பரிமாண
வேறுபாடு நீங்கலாய்
எல்லாம்
ஒரே மாதிரியான
வார்ப்பு தான்
என்ற போதிலும்
கிளையிலை நுனிக்கொழுந்தாய்
பொறி பறக்கும்
உடல்மொழி
வேறு வேறு
அசை அழுத்தத்துடன்
பேசப்படுகிறது என்பதை
பதிவு செய்கிறது புலன்
இதே போலத்தான்
வகை செய்யப்படுகின்றன
வழிமுறைகள் ஒரேயொரு

மகாப்
பொழிதலினின்று

ரெங்கநாயகி

கவிதைகள்

அகாலங்கள்

இந்த அகால மழையை ஏற்றுக்கொண்டு
நனைய மறுக்கிறது மனம்
திட்டமிடப்பட்டிருந்த அத்தனை கடப்பாடுகளும்
தேங்கிவிட்டன
என் ஞாபகம் மறந்து போகும் முன்னரே
வீடு சென்றடையும் பரபரப்பில் நான்
பிராரப்த கர்மம் போல
ஏதோவொரு சேய்மை புகைக்
கூண்டிலிருந்து திரித்திரியாய்
கீழிறங்கிக் கொண்டிருந்தன
மேலே
திரும்பிச் செல்வதற்கான வழி
மறத்தார்போல, என்னை
மறித்து நின்ற
நீர்த்தாரைகள்
எதிர்பாராத மோதலில்
தேகமிரண்டும் குளிர்ந்து
சிலிர்க்க
ஒரே கணத்தில் என்
உடையுறுவிக் கொண்டது
அகாலம் என்றாயினும்
தன்மை தொலைத்திடாத மழை
ஓட்டைக் குடிசைக்குள் சொட்டிக்கொண்டிருந்தது
தண்மை
என் ஞாபகம் மறந்து போகும் முன்னரே
வீடு சென்றடையும் பரபரப்பில்
மீண்டும் நான்
வந்து சேர்ந்திருந்த என்
வீட்டு முற்றத்தில்
காத்துக் கொண்டிருந்தது மழை
எனக்கு முன்பே

Thomas Brill

ஈகிள் ஐ - கரிகாலன்

கைகால்களில் ரோமங்களடர்ந்த ருதுவான பெண்கள்
காணாமல் போய்க்கொண்டிருக்கின்றார்கள் நகரில்
வன்புணர்ச்சிக்குப் பிந்தைய சடலங்கள்
பரபரப்பான கதைகளுடன் பிரசுரமாகின்றன 'ஈகிள் ஐ'யில்
அகன்ற கீழுதடுகளைக் கொண்ட அவ்விளம் பெண்களின்
செழித்த பின் பகுதியையும் மறைவிட மச்சங்களையும் கூட
துல்லியமாக வர்ணிக்கின்றனர் அதன் நிருபர்கள்
வஞ்சககுணம் கொண்ட ஜோசஃப்தான் இக்காம குரோதங்களை
நிகழ்த்துவதாக யூகிக்கிறது அந்த 'நெம்பர் 1' புலனாய்விதழ்
முன்பாகவே அவன் பிரபல மர்ம நாவலாசிரியரான
மைக்கேல் இன்பராஜின் வெளிவரவிருக்கும் துப்பறியும் புதினத்திலிருந்து
தப்பித்துவிட்ட ரகசியத்தையும் வெளியிடத் தவறவில்லை அவ்விதழ்
அது அவிழ்க்கப் போகும் மர்ம முடிச்சுகளுக்காக
வாரமிருமுறை திகிலோடு காத்திருக்கிறது நகர்
நகரின் கவனத்தை திசைதிருப்பும் இதழைப் புறக்கணிக்க
விநியோகிக்கப்படுகின்றன புரட்சி குழுக்களின் துண்டு பிரசுரங்கள்
இதழ் வாசிப்பதை நிறுத்தியவர்களின் கைகள் நடுங்குவதும்
வாய் குழறுவதும் கண்டு குழம்புகின்றனர் மருத்துவர்கள்
விற்பனையை அதிகரிக்கும் உத்தியாக சிற்றாடை அணிந்த இளம்மாது
வரும் இதழுடன் இலவசமென்கிறாள் கையடக்க பிஸ்டல் ஒன்று
முன் பதிவு செய்பவர்களின் நடுக்கமும் குழறலும் நிற்பதுகண்டு
இயல்பு நிலை திரும்புகிறார்கள் மருத்துவர்கள்.

நிலை குலைக்கும் பிரபஞ்சம்

அவரவர்
அவரவர் கிளிகளை
அனுப்பியிருக்கிறோம்

அவை அடங்கா வேட்கையுடன்
முடிவற்ற இப்பிரபஞ்சத்தில்
ஓயாது அலைகிறது அது

ஒரு தேவதைக்காகவோ
ஒரு தேவனுக்காகவோ
காத்திருக்கிறோம்.

நாம் பிரார்த்தனைகளில்
ஒரு பகுதி கிளிகளுக்காகவும்
மறு பகுதி தேவ/தேவதைகளுக்காகவும்
முழுமை அடைகிறது.

பின்னபட்ட சூத்திரங்களின்
அறைகளெங்கும் கிடக்கின்றன
சிலந்தியென சடலங்கள்

பொம்மையென நிலைத்துவிட்ட
இப் பால்வெளியெங்கும்
சாம்பல் மௌனம்

என் நிலைகுலைக்கும்
இப்பிரபஞ்சம் பன்றியென
சதா உறுமிக்கொண்டே
இருக்கிறது என்கிறேன்
அவ்வளவுதான்.

பா. வெங்கடேசன்

வலியில் வரிகள்

ஓவென அலறியது
முதல் வரி
காயத்திலிருந்து வடிந்த குருதி
கடைசி வரி வரை
துளி நம்பிக்கையின் அடி
இந்த இடியென
குழுமியிருந்த வரிகளிடம் புலம்ப
ஆறுதலானது
மற்றயெல்லா வரிகளும்
பிசுபிசுப்பைத் தடவியபடி
கடைசி வரி
முதல் வரியாய்
எழுதியது
அன்றன்றைக்கு
அன்றன்றைய கல்.

பொன் இளவேனில்

கவிதைகள்

நானும் அவளும் / அலைக்கழியும் இருப்பு

மின்விசிறிக் காம்பு
அதன் முலைகள் போல்
அலைவதில்லை
என்று புரிந்து
காதல் புகுந்தேன்
வெப்பமோ குளிரோ
எல்லாம் அசுர
வீச்சுகளில்
என்றுணர்ந்த
எனைக் காமம்
புணர்ந்தது
முன்னெப்போதும் இலா
வெளிச்சங்கள்
நண்பர்கள் நல்கினர்
பரிவுப் பரிகாசம்
அன்பு அக்கறையென
உறவும் உடன்
வரும்
என் சாதி
சமூகத்தார் நாகரீகம்
காத்தனர் அவர்
பார்த்த நவ நாகரீக
இம்மாந்தனுக்காய்
இப்படியாய் இருப்பு
அலைக்கழிக்கையில்
பெண்ணும் அவளின்
முலைகளும்
காம்புகளும்
நானும்
அவலமும்.

விஸ்வநாதன் கணேசன்

ஆகவே நண்பா குடிப்போம்

எனக்கேயான வாழ்க்கையை
உலகம் உனக்கேயும்
செய்திருக்கலாம்
நீ நான் நிகழ்
சந்திப்பின் ஒப்ப
முடியுமோ அதை
ஆகவே நண்பா
குடிப்போம்
கனவு மேகம்
மழை தருமேவென்ற
எதிர்பார்ப்புகளோடு
வென்றவர் போல்
தோற்றமளிப்பவர்
நீயும் நானும்
அற்றவர் ஆவார்...
வெற்றி உலகம்...
வெளி உலகு...
எப்படிச் சொன்னாலும்
குடிநெடி
அற்ற வேளைகளில்
விருந்தாளியாய் வாழ்க்கை...
சிவன் சித்தம்
பெருமாள் கடாட்சம் என்று
மற்றும் பெரிய
மலைகள் பல
மரணம் வெல்வர்
வாழ்க்கை கொன்று.



கே. ஏ. சுந்தரேசன்

கவிதைகள்

யவனிகா ஸ்ரீராம்

கவிதைகள்

உலகம் இசக்கியை உழைக்கவே வைக்கிறது

முட்டாளும் விறகு உடைப்பவனுமாகிய இசக்கி
ஒரு மோசமான அதிகாலையில் இனி ஒருபோதும்
தான் உழைப்பதில்லை எனச்சொல்லி ஆவேசத்துடன்
கோடாரியை விட்டெறிந்தான்
அகன்றுபோன தன் கால்களுக்கிடையில்
முகம் புதைத்து உறங்கும்
அவனுக்கு எப்படித் தெரியும்
இந்த அருமையான அதிகாலையில்
உலகம் முழுவதும் அதே முடிவை எடுத்திருப்பது பற்றி
எனவே முதல் பத்துநாள் அவரவர் கையிருப்பை
தின்று தீர்ப்பது என முடிவாயிற்று
அடுத்த பத்து நாள் மீச்சமீதி அனைத்தையும்
வழித்து வாயில் போட்டுக்கொள்ள
தலைதூக்கிய இசக்கிக்கு பசி கண்ணை மருட்டியது
பரிதாபமாய் கோடாரியைத் தூக்கி
தோளில் போட்டுக் கொண்டு தனது
வளைந்த கால்களால் நகர்ந்து செல்லத் தொடங்கினான்.

ஆயுள் முழுவதும் அடிமை

பிறந்த குழந்தைகளை
உயிருடனோ பிணமாகவோ
குப்பைத் தொட்டியில் போட்டு விடுபவர்கள்தான்
நாய்களுக்கு நல்லவகையான
புரதசத்துக் கிடைக்க உதவி செய்கிறார்கள்
நாக்கைத் தொங்கவிட்டவாறே
தலைகுனிந்தபடி நெடுஞ்சாலையில்
ஓடிக்கொண்டிருக்கும் நாய்
நகரமயமாகும் சூழலில்
அந்நியமாதலைக் குறிக்கிறது எனலாம்
நாய் வளர்ப்பவர்கள் இரவில்
மெலிதான போதை ஏற்றிக்கொண்டு
அதன் பின்புறத்தை கால்களுக்குள் வைத்து
காமதுனம் செய்துவிட்டால்
தரைதோய முகம்பதித்து கால்நக்கி
ஆயுள் முழுதும் நமக்கு அடிமையாய்
இருப்பதைக் காண முடியும்
வலுத்த மரத்தடியினால் அதன் மூளைப்பகுதியில்
ஓங்கி அடிக்கும் போது
காதுகளில் இரத்தம் வடிய
செத்துப்போகும் நாயானது
பந்துகளை எடுத்துவர குட்மார்னிங் சொல்ல
ஆளைக் கண்டு குறுக்கு நெடுக்குமாய் ஓடி
வாலாட்டி முனங்குவது வகையிலான
பாவ்லாக்களையெல்லாம் நம்மை
ஏமாற்றவே செய்து காட்டுகிறது
நள்ளிரவில் சோடியம் போன்று நாயின் கண்கள் ஒளிர்ந்தால்
அது கானகத்தின் அமானுஷ்யத்தைக் காட்டி
நம்மை அச்சுறுத்துகிறது என்று அர்த்தம்
சிலசமயம் கத்தியால் நம் கைவிரலில்
காயம் ஏற்படும்போது
சொட்டும் ஒருசில இரத்தத் துளிகளை
மௌனமாய் நக்கிவிட்டுப் போகும்
நாயை என்ன செய்வது.

நினைவுகளோடு நீளும் காலம்

தாடைகள் நடுங்கும் இந்த வாடைக்காற்றில்
என்வீட்டு குளிர்பதனப் பெட்டியைத் தட்டிவந்தவன்
துருவப்பனியில் இருந்து ஒழுகி நீண்டவனாகத்தான் இருக்க வேண்டும்
என் மனைவியை அவன் வசீகரித்துக் கொண்டிருந்த காலை
வெளியே குளிர் சிறிய ஓடைகளில் சீறிச்செல்கிறது
தேனீரகம் மற்றும் உணவு விடுதிகள் அருகே
பழம் நினைவுகளோடு மனிதர்கள் நீளும் காலத்தில்
அனுசரிக்க வேண்டியதைப் பற்றி ஆழ்ந்து
கதைத்துக் கொண்டிருந்தார்கள்
மெல்லிய பனிமூட்டம் தாழ்ந்து போகிறது
காட்டு மொச்சைகள் முதிரும் பருவத்தில்
வன்குளிர் வீசும் இந்த காலையானது
ஓய்வுடன் நீண்ட உறக்கத்தையும் கோருகிறது.
சந்தேகமேயில்லை
அவன் ஒரு பனிமனிதன்தான்
மிதவெப்ப மண்டலத்தைச் சேர்ந்த என் மனைவியோ
அழகிய தேம்களுடன் அபரிமிதமான
உடல் சூடும் கொண்டவள்
மேலும் அவள் குளிர்கால அனுசரணங்களை
எனக்குச் சொல்லித்தரும்போது
அன்றாடம் பனிவிழும் பாதைகளை
எப்படிச் செப்பனிடுகிறான் என்பதையும்
எனக்களித்த மென்மயிர்த் தொப்பிகள்
எந்த விலங்கால் ஆனது என்பதையும்
கரை உருளும் சீல்கள் மனிதர்களை நம்புவது குறித்தும்
தெரிந்து கொள்ள முடிந்தது
ஒரு கவளம் பச்சை வெண்ணெய் பெற்றுக்கொண்டு
மலைகளுக்கும் கடலுக்குமிடையே
கொஞ்சம் புழங்கு நீர் ஊடாடும் பூமியில்
கரடிகளைப் போல் விச்ராந்தியாய்
மீன் பிடித்துக்கொண்டிருப்பதைத் தவிர
பெரிய பிரபஞ்ச இரகசியம் என்ன இருக்கிறது என்றான்
நீண்ட காலமாய்ப் பல்துலக்க ஒருநார்க்குச்சியை
நம்பாத நான் என் துர்நாற்றம் பிடித்த வாயால்

Thomas Brill

சில நியாயங்களைச் சொல்லத்தான் செய்தேன்
ஆயினும் இந்த குளிர்காலத்தில்
ஒரு படுக்கையையும் வாய்ப்பாக
இன்னொருவனையும் என்மனைவி எடுத்துக்கொண்டிருக்கிறாள்
ஒரு தயவற்ற கோடையில்
கொஞ்சம் இனக்கொதிப்புடன்
சொந்தமான யாவற்றையும் செப்பனிட்டு
மனஉறுதி செய்துகொள்ளப் பகைக்கும் நாளில்
ஓரளவு புழங்கு நீரை பனிக்கட்டிகளாக்கும்
அவசியத்திற்கென தான் துருவத்திலிருந்து
மீண்டும் வரவேண்டியிருப்பதாகக் கூறிய
அந்தப் பனியன் மெல்ல கதவிழுத்து
முட்டைகள் மிளகாய்க் குழம்பு தயிர்
மற்றும் கொத்துமல்லித் தழைகளை
நசுக்கிவிடாமல் உறைதட்டில் இறுகிக்கிடக்கும்
வெளிர்சிவப்பு மீன் துண்டங்களின் வழியே
கிளைகளற்றுப் பனிசொரியும் நீண்ட மரங்கள்
நிறைந்த தனது பள்ளத்தாக்கினுள் சென்று
உறைந்து போனான்
ஏனோ இந்த வன்குளிர் வீசும் கூதிற்பருவத்தில்
என்மீது மனைவியின் காதல்
அபரிமிதமாய் இருந்தது.

“அவர்கள் நேரடியாகவே படைக்கப்படுகிறார்கள்”

ததும்பும் சின்னஞ்சிறு முத்தங்களோடு
நாங்கள் உணவு தயாரித்துக் கொள்கிறோம்
சாளரங்கள் வழியே உள்நுழையும் சூரியக்கதிர்கள்
எப்போதும் எங்கள் அந்தரங்க உரோமங்களை
உலர்த்திப் போகிறது
பழந்துணிகளாலும் உள்ளாடைகளாலும் நாங்கள்
ஒரு படுக்கையைத் தயார் செய்திருக்கின்றோம்
அது எங்கள் உடம்பின் வாசனையை நிதம்பமாய்
நிறைத்துக் கொண்டிருக்கிறது
முதல் பாவத்தை தவறாகத் துவங்கிவிட்ட கடவுளிடம்
எங்களுக்கு எந்தப் பிரார்த்தனையும் இல்லை
உடலோடு எல்லா இடைவெளிகளையும் கவனமாய்
அடைத்துக்கொள்வது அவருடைய இயலாமையின்
கண்கணைத் தவிர்க்கத்தான்
இப்போதும் தாவரங்கள் பூக்கின்றன
விலங்குகள் எல்லாம் புணர்கின்றன
நீங்களும் இருக்கிறீர்கள்
நாங்களும் நடனமாடுகின்றோம்
எங்கள் ஏதேன் தோட்டமோ பாம்புகளின்
வேதமற்று அமைதியாய் நிலவுகிறது.

வெற்றுத் தொழிற்கூடம்

சாம்பல் நிறக் கண்களுடன்
வினிகரில் கலந்து அடித்த சுடுமுட்டைக் குழம்பினை
உறிஞ்சிக் கொண்டிருக்கிறான்
புறவழிச்சாலையில் சுங்கச்சாவடியின்
ஓய்வு மேசையின் கீழ் மழைஈரம்
மெல்லிய வாசனைகளை எழுப்புகிறது
அவன் போகக்கூடும்
சிறிய மார்பகங்களுடன் அவனை
ஏமாற்றித்திரியும் ஒரு பெண்ணின்
வெற்றுத் தொழிற்கூடத்திற்கு
கடற்காற்று வீசும் நகரங்களில் ஆணும் பெண்ணும்
குழந்தைகளுடன் அலுப்பூட்டுகிறார்கள்
அவன் பென்சில் போன்ற ஒரு சிகரெட்டை
பற்றிக் கொண்டான்
ஃபைபர் இழையொத்த மெல்லிய நகத்தினடியில்
ரோஜா நிறத்தில் இரத்தம்
தூய்மையாய் இருப்பதைப் பார்த்தேன்
அவனை எனக்குத் தெரியும்
கிழிந்த டயர்களும் நெளிந்த பானட்டுகளும்
தாறுமாறாய் கிடக்கும் வாகனப் பழுதகத்தில்
ஒரு டின் பியரைக் குடித்துவிட்டு
உதட்டில் முத்தமிட்டிருக்கிறேன்
அவன் என் துடைகளின் ஆடும் கொடி முந்திரி
என் கதவின் உள்தாழ்ப்பாள்
அவனை நேசிக்கிறேன் இனிய நாட்களில்
சிவந்த முட்டைக் காளான்கள்
பரிமாறப்படும் போதெல்லாம் எனக்கு
அவன் ஞாபகம்தான்
உண்மையில் அவனைக் காதலிக்கிறேன்
இந்த நகரத்தில் அவன் திரிவது
கடவுளின் நடமாட்டத்தைப் போன்றது
இப்போது அந்தி நிறத்திலான ஆடைகளை இருவரும்

அணிந்து கொண்டிருக்கிறோம்
மெல்லிய கவிச்சி மணம்வீசும்
சுடுமுட்டைக் குழம்பினை ருசிக்கும்போது
அப்படியே துழாவி முத்தமிட்டுக்கொள்வது
எத்தனை கிளர்ச்சியானது
யாருக்குத்தான் தெரியாது கடற்காற்றில்
ஆண்கள் முத்தமிட்டுக் கொள்கிறார்கள் என
துணியும் ஒரு வாய்ப்பின் பரவசத்தை உடலோடு
பற்றிக் கொள்ளவும் கூட
மேலும் இந்நகரம் அநாவசியமாகத்தான் கூச்சலிடுகிறது
லோரிகள் தாமதித்து நகரும்
சுங்கச்சாவடியிலிருந்து விடுமுறைக்கு
நீர்த்தாவரங்கள் அடர்ந்து
செங்கால் நாரைகள் வந்திறங்கும்
ஒரு சிறிய தீவிற்கு பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

துளையிட்ட மூங்கில்

இப்போதெல்லாம்
இந்த உலகின் எந்த மூலைக்கும் சென்று
நடமாடித்திரிய முடியும் என நான்
கற்பிதம் கொள்வது விசித்திரமானது ஒன்றுமில்லை
அங்கு சந்திப்பவன் ஒருவெள்ளைத் தோலனாய் இருக்கும்போது
சிறிய மீன் தூண்டிலையும் அவன் தரும்
மலிவான பியர் குப்பிகளையும் பெற்றுக் கொள்ளலாம்
நகரத்தில் நாடோடிகள் அதிகம் ஊடுருவிவிட்டதாய்
அவன் சொல்லும்போது நீலநிறக் கண்களால்
ஒருவன் என்னை முறைக்கவும் கூடும்
அதுவே ஒரு மஞ்சள் நிற மனிதனின் பிரதேசமாக
இருக்கும் பட்சத்தில்

ஐஸ் க்யூபுகள் நிறைந்த ஒரு உறாலோ பெட்டியை
அவனுடன் சுமந்து சென்று கொண்டிருக்கலாம்
காய்கறி மார்க்கெட்டின் அழுக்குத் தரையை
நீர்விட்டுக் கழுவும்போது என்னைப் பாராட்டி
அவன் சில உள்ளூர் நாணயங்களை பரிசளிக்க வாய்ப்பிருக்கிறது
மேலும் நான் அதிக கருமைநிறத் தோலையும்
சங்கு போன்ற பற்களையும் உடைய மனிதர்கள் வசிக்கும்
மரவீடுகளுக்கு பக்கத்தில்
சுட்ட மாமிசத்திற்காகக் காத்திருக்கும்போது
நீண்ட கொங்கைகளுடைய பெண்கள்
தங்கள் கறுத்த குட்டிகளுக்கு
பாடம் சொல்லித்தருமாறு வேண்டுவார்கள்
ஒரு துளையிட்ட மூங்கிலை இசைக்குமாறு என்னிடம்
முதியவர் ஒருவர் புன்னகைப்பார்
நீண்ட சடைமுடிகளுடன் செங்கருப்புச் சந்நியாசிகள்
திரியும் புராணிக தேசத்தில் கை மாற்றிய
கஞ்சாச் சுருட்டை கண்கள் பொங்க
நான் வலிக்கும் போது
பாசிபடர்ந்த கோயில் சுவற்றோரம்
சுக்கிலம் கசியக் கிடக்கும் குஷ்டரோகியைப் பார்ப்பேன்
ஒரு விவசாயி வறண்ட ரொட்டியை
என்னுடன் பகிர்ந்துவிட்டு
தனது எருது பூட்டிய வண்டியுடன்
தொலைவில் நீரெடுக்க வந்தால்
இரவு உணவும் கொடுப்பதாக வாக்களிப்பான்
என் குலத்தின் தலைக்கட்டு வரிக்காக
எப்போதும் ஒருவன் என்னைத் தேடியலையும்
என் நீண்டகால வசிப்பிடத்திற்கு திரும்புவதுதான்
முற்றிலும் விசித்திரமானது
முதிர்ந்த பெண்ணொருத்தி என் பொறுப்பற்ற செயல்களுக்காக
கண்ணீருடன் கோபித்தபடி இருப்பாள்
ஒருவன் என் மகனெனச் சொல்லிக்கொண்டலைவான்
எளிய கடன்காரர்கள் நெடுநாளாய் நான்
ஏமாற்றித் திரிவதாய்ப் புன்னகைத்துக் கருவுவார்கள்.

ஆண்டறிக்கை

ஆண்டு முழுவதும் மிகச் சில நிமிஷங்களுக்காக
யாருடன் எதற்கு இருப்பது யாரும் இன்னும் பலரும்
ஒருபோதும் விசுவாசமாய் இருக்க முடியாது யாரும்
இன்னும் சிலரும் பலரும்
அது ஒரு கடற்கரை அல்லது
மழைதூறும் வனத்தினுள் நெருப்பெரியும் குடிசை
அவனுக்கு மட்டுமில்ல அந்த முத்தம்
ஈரம் காயாமல்
அவனுக்கும் அவனிடமிருந்து இவளுக்கும்
இவனிடமிருந்து அவனுக்கும் கூட
அவன் இவனுடன் இவன் அவளுடன்
எவனுடனாவது எவளாவது இருக்கத்தான் வேண்டும்
எப்படி எப்படி இருக்க முடியும்
அலகு செருகப்பட்ட வாயைப்போல
அது ஒரு ஹால் அல்லது அடைக்கப்பட்ட புல்வெளி
அல்லது சுழலும் பூமியின் ஒரு இடம்
அங்கு காரமிட்டு மொறுமொறுத்த கடலலைகள்
ஈரம் மினுக்கும் உடல்த்தசைகள்
மீன்தொட்டிகள் மேலும் இசையொலி
ஒரு ஆண்டறிக்கை வாசிக்கப்படுகிறது
குற்றம் காண முடியாத ஆண்டறிக்கை
யாருடன் யாருடனும் பேசிக் கொண்டிருப்பது போல
குறைகாண முடியாது யாரும்
தொட்டியின் நீர்ப்பரப்பில் முணுமுணுக்கும்
மீன் குட்டியின் உதட்டில் முத்தமிடுவது யார் இன்னும் சிலரும்
அது ஒரு சேமியாக்களை உறையிலிடும் தொழிற்சாலை
அல்லது விளம்பர படப்பிடிப்புத்தளம்
இதுவரை மோட்டார் விபத்துகளில்
பலியான இளம் பையன்கள் பற்றியதும்
புனிதச் செலவுகளின் அவசியம் குறித்த
ஆண்டறிக்கையுடன் ஒரு பந்தயத்திடல் வருவதற்கு
ஒருசில நிமிஷங்களே இருக்கிறது
மேசைக்கடியில் தொட்டுக் கொண்டிருக்கும்
உணர்ச்சிகளை விலக்கி
சேமியாக்களின் சூப்பை அருந்த வேண்டும்
ஆண்டு முழுவதும் மிகச்சில நிமிஷங்களுக்காக.

மிரண்டவெளி

அது ஒரு மின்வேலியிட்ட புதிய குடியிருப்புப் பகுதி
வாயு விளக்குகள் மஞ்சளாய்க் கசிந்து கொண்டிருக்க
மரங்களுக்கிடையே தொடர்வீடுகள்
மௌனமாய் அமிழ்ந்து கிடந்தன
முன்னிரவு
உட்சாலையொன்றில் விடலையொருவன்
தன் பைக்கில் சாய்ந்தபடி
மூன்றாவது புளோக் பெண்ணை புட்டத்தில் தட்டி நிறுத்துகிறான்
அவளோ அவனது அரை டிரவுசரில் கையைவிட்டு
நீ நன்றாக சாப்பிட வேண்டும் ஜக்
என்கிறான் கவலையுடன்
கல்பலகைகள் அறுக்கும் அருகாமைக் குவாரியில் எழுந்து
வானில் பெரும் தூசுப்படலம் கருமையாய்த் திரள்கிறது
அது ஒரு நட்சத்திர மண்டலத்தையே மறைந்திருக்க வேண்டும்
வெளி ஒரு கணம் திடுக்கிட்டு தனக்குள் கூர்மையாய் ஒடுங்கியது
அவமானமடைந்த ஜக் அவள் தலையைப் பிடித்திழுத்து
முகத்தில் எச்சிலைத்துப்பி அப்படியே முத்தமிட்டான்
காயடிக்கப்பட்ட பன்றியே எனச் சீறியவள் அவன் அடிவயிற்றில்
ஓங்கி ஒரு உதைவிட
தடுமாறி விழப்போன ஜக் தனது கரத்தை
குலுக்குவதுபோல காட்டி நீ இதற்குத்தான் லாயக்கு
என்கிறான் ஏகத்தாளத்துடன்
முட்டாளே உன் தகப்பனின் முன்பு போய்
அதைச்செய்து காட்டு என்றவள் உனக்கு வரும் மனைவி
ஒரு கூட்டுப் புணர்ச்சிக்காரியாகத்தான் இருப்பாள்
என்றபடியே ஓடவும் தொடங்கினாள்
தூசுப்படலம் கிழித்து விமானம் ஒன்று அடிவயிற்றில்
மினுங்கிப் போக
தூவென சூயிங்கத்தை துப்பிவிட்டு
ஜக் தனது ஜிப்பினை மேலிழுத்துக் கொண்டான்
காலங்கருதித் தயங்கியபடியே வந்த நிலவு
பளீரென தலைகாட்டியதும்தான் எதுவும் நடவாதது போல்
ஆசுவாசமடைந்தது சற்றைக்கு முன் மிரண்டுபோயிருந்த வெளி.

◆

david rosenbloom

டிங்கோ புராணம்

1. செருப்புத் திருடன் 'டிங்கோ'வின் வீட்டிற்கு
என் காதலியுடன் ஒரு மாலையில் சென்றிருந்தேன்

வயதான பாட்டிமார் இருவர்
வாசலில் அமர்ந்தபடி
டிங்கோ உனது செருப்பைத் திருடவில்லை
எனப் புலம்பியதை
நானும் அவளும் பொருட்படுத்தவில்லை

முந்தின இரவு
குறிசொல்பவனின் வீட்டில்
அவளது செருப்பு தொலைந்திருந்தது

அஜயன் பாலா சித்தார்த்தன்

‘டிங்கோ’வின் அம்மா
பலவண்ணக் காலணிகளை
எங்கள் முன் கடை பரப்பினாள்

பச்சை நீலம் சிவப்பு
ஊதா மஞ்சள் கருப்பு
குதிகால் உயர்ந்தது, வார் வைத்தது
அல்லாமல்
செருப்புகளால் நிரம்பிய அறையொன்றினையும்
எங்களுக்குத் திறந்து காண்பித்தாள்

டிங்கோவின் தங்கை
மரத்தூணின் மறைவிலிருந்து
குரங்கு காட்டினாள்
பாட்டிகளின் சாபம் பின்தொடர
ஏமாற்றத்துடன் நாங்கள்
படியிறங்கி வெளியில் வந்தோம்

தெருவில்
டிங்கோ
ஐஸ்க்ரீம் வண்டிக்கருகே
நின்றுகொண்டிருந்தான்
அருகிலிருந்த குருட்டுப் பெண்ணின்
கால்களில் என்
காதலியின் செருப்பு
நானும் அவளும்
எதுவும் பேசாமல்
அவர்களைக்
கடந்து வந்தோம்

2. இம்முறை
இரண்டு நாட்களுக்குப்பின்
டிங்கோவை
கடைவீதியில் பார்த்தேன்
மிகவும் அவசரமாய் இருந்தான்
தலையில்
குல்லாய் இருந்தது
கைகளில் ஒரு ஜோடி செருப்பு

டிராமில் நகர்ந்து கொண்டே
டிங்கோ நீ ஒரு கவிஞன் என
உரக்கக் கூவினேன்
டிங்கோ
அதிர்ச்சியில் உறைந்து நின்றான்
காலம் கடந்து செல்லும்
ஒரு சிலை போல

3. டிங்கோவின்
முதல் கவிதை பிரசுரமானபோது
அவன் முழுவதுமாக செருப்பு திருடுவதை
கைவிட்டிருந்தான்

ஒரு தச்சுக்கூடத்தில் அவனை
பணியாளனாக சேர்த்திருந்தேன்
மதிய இடைவேளையில்
அவனது பிரசுரமான
கவிதையைக் காண்பித்தேன்
கண்களில் நெகிழ்ச்சி
சற்று தொலைவில்
ஒரு பாம்பு எங்களைக் கடந்து சென்றது

4. டிங்கோவின் பாத்ரூமில் ஒரு வாசகம்
'தீமைகள் கவிஞனிடம் அச்சம் கொள்கின்றன'
டிங்கோவின் வரவேற்பறையில்
தீமை ஒரு மரத்தின் பின்னிருந்து
கவிஞனை ஏளனம் செய்கிறது
டிங்கோவின் கவிதையில் ஒரு வரி
'நான் தீமைகளின் அரசன்'

5. யாருமற்ற வீதியில்
டிங்கோ நடந்து செல்கிறான்
ஒரு போர் வீரனைப் போல

உலகையே உறைய வைக்கும்
மகத்தான சொல்லை
கண்டுபிடித்துவிட்ட மமதை

அவனது கற்பனையில்
நெரூடாவும், லோர்காவும்
தாகூரும், பாரதியும்
இன்னபிற மகாகவிகளும்
செத்துக் கிடந்தனர்

சட்டென பீதியுற்றவனாக
கடவுளிடம் மன்றாடினான்
போனால் போகட்டும்
அவர்கள்
உயிர் பிழைக்கட்டும்
என்று சொல்லி

6. புறாக்கள் நடனமாடும் வீதியில்
நானும் டிங்கோவும்
நடந்து கொண்டிருந்தோம்

டிங்கோ
அந்த வீதியில்தான்
மரியாவை முதன்முதலில்
பார்த்ததாக என்னிடம் சொல்லியிருந்தான்

தெருவில்
குறுக்கும் நெடுக்குமாக
எங்கு பார்த்தாலும் பறவைகள்

டிங்கோ
தூரத்தில் மரியா நடந்து வருவதாக
என்னிடம் கை நீட்டுகிறான்

கண்களில் ஒளி வெள்ளம்
வீதி சட்டென யாருமற்றதாக
இருண்டது
நான் மட்டும் தனித்திருந்தேன்
நீர் வடிந்த மண்ணில்
கால் தடம் போல

அது ஒரு கனவு
மீண்டும் என்னை பயமுறுத்துகிறது

7. கடற்கரையில் ஒரு கவிதையை
பின் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறேன்

ஆச்சர்யம்
நான் கடல் மேல் நடந்தபடி

காற்றில் பறந்த காகிதம்
ஒரு கப்பலுக்குள் சென்றுவிட்டது
பாரம் தாளாமல்
கப்பல் மெல்ல மூழ்கிக் கொண்டிருப்பதை
வெறுமனே வேடிக்கை பார்க்கிறேன்

பீதியுற்றவனாக
மீண்டும் கடற்கரை நோக்கி
ஓடிவருகிறேன்

காலையில் ஒரு தகவல்
டிங்கோ
அரசு மருத்துவமனையில் கவலைக்கிடம்

8. டிங்கோவின்
சவ ஊர்வலம் போன்ற அழகை
யாரும் பார்த்திருக்க முடியாது

தூறல்களுக்கு நடுவே
யாருமே கேட்க முடியாத
அதன் சிம்பொனியை
நான் மட்டும் ரசித்தேன்

பெட்டியைச் சுற்றி
பலவண்ண வளைவுகளில்
ஐஸ் க்ரீம்களும்
சாக்லெட்டுகளும்
புதை குழியில் அடுக்கப்பட்டன

கடைசி வரையிலும்
மரியா அங்கு வரவேயில்லை.

பிறகொருநாள் கோடை

அய்யப்பமாதவன்

வாழ்வனுபவம எனபது மானுட உணர்வின் பகிர்ந்துகொள்ளப்படும் பொது அம்சம்.

கலாச்சாரம் பால் அடையாளம் மொழி இனம் இவற்றைக் கடந்து நாமெல்லாம் ஒன்று என்ற உச்சரிக்கப்படாத பொது ஒப்பந்தத்தின் ஷரத்து என்பது கட்டுரையின் வாதங்களில் ஒன்று.

தன்னுடையதல்லாத வாழ்வனுபவத்தைக்கூட கவிஞனால் கைளாள முடிவது இந்தப் பொது ஒப்பந்தத்தின் விளைவாகவே

இந்தப் பொதுமையை படைப்பாக்கத்தில செறிவாக மேற்கொண்டதன் அடையாளம் அய்யப்பமாதவனின் கவிதைகள்

சுகுமாரன்

அகரம்

மனை எண்:1, நிர்மலா நகர்

தஞ்சாவூர் – 613 007 விலை ரூ.50

பா. தேவந்திரபூபதி

பழைய ஏற்பாடு

பணிவற்றுப்போன உன் இதயத்திலிருந்து
எனக்கான காதல்
ஒரு கட்டளையைப் போல் வந்தடைகிறது
உறுதிமிக்க மழையின் வாசகம் போல
நான் நிலத்தில் துளிர்க்கிறேன்
உனக்கான மலரை எனது கிளைகள் இரகசியத்தில் பூக்கின்றன
துணிவற்றுப் போன உலகத்தின் முன்
நம் நாடகம் இவ்வாறு சொல்மறந்து பரிதவிக்கிறது
மோசேவின் கட்டளைகளைப் போல
என் இருப்பைச் சூழ்ந்து விட்டதடி உன் காதல்
உனது முதல் முத்தமும்
கருத்தற்ற எனது வெற்றிடமும்
நிரப்ப முடியாத ஆதிப்பாவத்தின் கிண்ணத்தில்
மஞ்சள் ஒளியை நிரப்புகின்றன
எல்லாக் கட்டளைகளின் முன்பும் பணிவற்று
எனது கிளையில் உனது தேவமலர்
ஒரு நட்சத்திரத்தைப் போல ஜொலிக்கிறது
ஆனாலும் போதாதுதான் இந்த பழைய ஏற்பாடு.

நிகழும் எதிர்பார்ப்புகள்

இரவெல்லாம் கோப்புகள்
பார்க்கச் சம்மதித்தபோதும்
அதிக வேலையாட்கள்
அலுவலகத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறார்கள்
சதா ஒலியெழுப்பிக் கொண்டிருக்கின்றன
அயல் வீட்டு நாய்கள்

காலம் வீணாகிறது ஒரு சாலையோர
கடைக்காரனின் தேவையற்ற விசாரிப்புகளில்
எரிபொருளைக் குடிக்கும் வாகனச் செலவிற்கு
ஒரு வீடே கட்டிவிடலாம்

நிகழ்ந்துவிடும் எதிர்பார்ப்புகளில் இருந்து
இடமாறுதல் உத்திரவும் வந்து விடுகிறது
காலி செய்வது ஒரு இடம்
களை கட்டுவது மற்றொரு இடம்

சராய்களின் விளிம்பில் புழுதிபடிகிறது
காலத்தின் இருதயத்தில் மின்விசிறியின் சுழற்சி
மனிதர்களால் மிதக்கும் இந்த நகரத்தின்

சிக்னல்களில் சுவாசிக்கிறது எனது வாகனம்
வளைவிற்கு திசைகாட்டும் என்
விரல் முனையில் துளிர்க்கிறது ஒரு பச்சை நிறத் தாவரம்
அவர்கள் கோப்புகளுடன் வந்து கொண்டிருக்கிறார்கள். ◆

david rosenbloom

பூவின் பூக்கள்

பூவின் ஒவ்வொரு இதழையும்
மலராய்க் கண்டு
பூக்கள் என்கிறோம்.
ஒருமை பன்மை தெரியவில்லை என்று
பிரம்படி தரப் புறப்பட்டு
வந்திருக்கிறீர்கள்.
பிரிய தொல்காப்பியரே!
திரும்பவும் சொல்கிறோம்
நாங்கள்தான் என்றும் நான் என்றால்
நீயாகி விட மாட்டீர் நீங்கள். ஏனென்றால்
நாகரீகம் தெரியாதவரல்லவே
நவீன தமிழ்க் கவிஞர்கள்!

ரிஷி

மரணத்தின் ஒப்பனைக்காரர்களுக்கு

ஒருவரின் கடைசி மூச்சுத்துளியின் மீது
உங்கள் கவிதையைக் கட்டமைத்திருக்கிறீர்கள்
திருத்தமாய்
இருவிழிகளும் நீர் சொரிந்த வண்ணமே நீங்கள்
அந்த வேலையை செய்து முடித்திருக்கலாம்
படிமப் பட்டுக் குஞ்சங்களோடு கூடிய
பளபளாச் சொற்களைக் கொண்டு
நேர்த்தியாய் புத்தாடை கட்டிவிடுகிறீர்கள்
பாடையேறியவர்களுக்கு. மறவாமல்
அவரை சேர்த்தணைத்தவாறு நீர் எடுத்துக்கொண்ட
புகைப்படத்தை
குறியீடாக்கித் தருகிறீர்கள் வரிகளில்
வார்த்தைகளை இடம் மாற்றிப் போட்டுக்
காட்டுகிறீர்கள் சாவை '70 எம்.எம்.'இல்
கண்ணைக் கூச வைக்கும் வெளிச்சத்தில்
கைத்தட்டல் காதைப் பிளக்கலாம்
சுற்றம் திருஷ்டி கழிக்கலாம்
போற்றிப் பாடலாம் விமர்சனப் பிதாமகர்கள்
நேற்றிலிருந்து உங்கள் தலையைச் சுற்றி
ஒளிவட்டம் தெரிகிறது
இரட்டிப்பு லாபத்திற்கு அல்லவா விற்றிருக்கிறீர்கள்
இறப்பை!
எனில் -
மரணம் பற்றிய ஒரு மெய்யான கவிதையில்
சரிவர நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சாவின் விலை.

அய்யப்ப மாதவன்

பேய்கள் ஒளிந்துள்ள மோனிகாவின் மரம்

மோனிகா
தினமும் சொல்லி
பயமுறுத்திக்கொண்டிருக்கிறாள்
மரங்களில்
பேய்கள் ஒளிந்திருப்பதாய்
மரங்கள் எப்பொழுதுமே அதிசயமானவை
சிறுவயதில் மரங்களுடன்
மிகவும்
நெருங்கியிருந்தேன்
கிளைகளின் வழியாய்
உச்சிக்குச் சென்று
கீழாக உலகைக் கண்டு
கேலியாய் சிரித்திருக்கிறேன்
பூக்களிலிருந்து மேலெழும்பிய வாசம்
மனதை
நெகிழச் செய்யும்
தூய்மையானதொரு உலகில் இருப்பதாக
பெருமைப்பட்டுக் கொள்வேன்
சில பூக்களை உணவாக உட்கொண்டிருக்கிறேன்
அப்பொழுது மிக ஆரோக்கியமாய்
இருந்திருக்கிறேன்
கொழுந்து இலைகளைக்கூட கிள்ளி
பசித்த பொழுதுகளில் தின்றிருக்கிறேன்
(சில்லறைக் காசுகள் கிடைக்காத சமயம்)
காய்கள் பழங்கள் கொட்டைகள்
விதவிதமாய் சுவைத்திருக்கிறேன்
பன்னீர் மரப்பூக்கள்
ஊதும் இசைக்கருவியாய்

மாறியிருந்தன
இந்த மரத்தில்
பேய்கள் நடமாடுவதாகக்கூறிக்கொண்டிருக்கிறாள்
அவள் சொல்வது போல்
பேய்கள் இருக்கிறதா என்று ஓர் இரவில்
மரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்
மரங்கள் காற்றில்
தலைவிரித்தாடுவது போல் இருக்கிறது

வர்ணப்புலிகள்

நகரத்தின் குகைக்குள்ளிருந்து
வர்ணப்புலிகளை விற்றுக் கொண்டிருக்கிறேன்
உடம்பெல்லாம் சிறிதும் பெரிதுமான கோடுகளால்
கட்டங்களால் நிறைந்த புலிகள்
வால்களை ஆட்டிக் கொண்டு
சாதுவாய் இருக்கின்றன
சில புலிகளின் கண்களில் வெளிச்சம் கொட்டிக்கிடக்கிறது
சில சோர்வாய் தளர்ந்து கண்கள் மூடிக்கிடக்கின்றன
ஒன்றின் மேல் ஒன்று அன்பு பீறிட படுத்துக்கிடக்கின்றன
தேநீருக்காகவும் சிகரெட்டுக்காகவும்
உணவுக்காகவும் வீட்டுவாடகைக்காகவும்
புலிகளை விற்றுக்கொண்டிருக்கிறேன்
வெளியூரிலிருந்து முத்திரை குத்தப்பட்டு வரும்
புலிகளுக்கு இந்நகரத்தில் கிராக்கி இருக்கிறது
வர்ணங்கள் கட்டங்களின் அளவு தோலின் தரம்
பிடிக்காதவர்கள் நிராகரித்துச் செல்கிறார்கள்
சொல்லும் விலையைவிட மிகக்குறைவாய்க் கேட்கிறார்கள்
தரக்குறைவான புலிகளென்றும் வர்ணிக்கிறார்கள்
எனக்கு பாலூட்டும் புலிகளை
தரக்குறைவானது என அவர்கள் கூறும்பொழுது
மிகுந்த கோபத்துக்குள்ளாகிறேன்
மேற்கொண்டு புலிகளைத் தொட்டோ தடவியோ

பார்க்காதே என்று ஆத்திரத்தில் கூறுகிறேன்
வேறு வாடிக்கையாளர்கள் வரக்கூடுமென்று
அவர்களின் பார்வைக்காகப் புலிகளை
குகைக்குள் திரிய விட்டிருக்கிறேன்
திறந்து கிடக்கும் குகைவாசலில்
சேர்ந்திருக்கும் புலிகளைப் பார்த்துக் கொண்டு
அமர்ந்திருக்கிறேன்
வர்ணங்கள் பூக்கின்றன எனது உடலில்

ஒரு வான்கோழியின் ஊரில் ...

வான்கோழியைப் போன்று நீண்ட கழுத்துடன்
காதுகள் பெரிதாய்த் தொங்க வளர்த்திருக்கிறான்
தெருவெங்கும் சிறகசைத்து கொக்கரித்து
பார்வைகளில் இரை தேடுகிறான்
காலை வெளியின் இதத்தில் ஆற்றங்கரையில்
வெறும் உடல் நனைத்து குளிக்கும்
பெட்டைக் கோழிகளை முழுவதும் ரசிக்கிறான்
அக்கோழிகள் அவனுருவம் பார்த்து
சமிக்ஞைகள் செய்கின்றன
மதியப் பொழுதின் பச்சைமரக் காற்றில்
பெருத்த குறட்டை சப்தத்துடன்
மரத்தினடியில் பெட்டைக் கோழிகளுடன்
உறங்கிக் கொண்டிருக்கிறான்
மாலைப்பொழுதில் மன்மதன் போல்
ஆடையுடுத்தி மிரட்டும் குரலில் மீசை முறுக்கி
விடைக்கோழிகளின் வாசம் பிடித்து
தடித்த இறகுகளால் வருடுகிறான்
கறுத்த இரவுகளின் மெல்லிய வெளிச்சத்தில்
தலைகுனிந்து வெட்கிச் சிரிக்கும்
கோழிகளின் தோலுரித்து வரிசையாய்
விருந்து உண்கிறான்
விருந்து முடிந்து பெரும் சோர்வில்
இறக்கைகள் பரப்பி உடல் சுருங்கிக் கிடக்கிறான்
அடை காக்கும் கோழிகளின் முட்டைகளில்

அவன் சாயல்கள் படிந்திருக்கின்றன
அச்சிறு நகர் முழுக்க
வான்கோழி உருவங்கள் நடந்து திரிகின்றன
கொஞ்சம் சிறகுகள் உதிர்ந்து
தடித்துவிட்ட தோல்களுடன்
கனத்துவிட்ட குரலுடன் கோழிகள் படைசூழ
நடந்து கொண்டிருக்கிறான்
கோழிகள் அவனைச் சூழ்ந்து கொண்டு
கொத்தத் தொடங்குகின்றன.

புதிரான புலியின் வால்

வாலை மட்டுமே தொட அனுமதித்திருக்கிறது புலி
வாலிலிருந்து
அவனுக்கான வீடு தோன்றுகிறது
மனைவி தோன்றுகிறாள்
குழந்தைகள் தோன்றுகின்றனர்
வசதியான பள்ளிக்கூடங்கள் தோன்றுகின்றன
சொந்தங்கள் தோன்றுகின்றன
நண்பர்கள் தோன்றுகின்றார்கள்
இரவுகளில் மதுவிடுதிகள் தோன்றுகின்றன
மயக்கும் மங்கைகள் தோன்றுகின்றார்கள்
அவன் ஒரு செழிப்பான
செல்வம் நிறைந்த ஆளாகின்றான்
சொர்க்கத்தில் அவனுலகம் சுழல்கின்றது
வாலில் தொங்கும் அவன் கீழ்
மிகப்பெரிய பாதாளம்
வாய்திறந்து காத்திருக்கிறது
இறுகிக்கொண்டிருக்கும் வாலின் பிடியை
ஏதோ ஒன்று அசைக்கப்பார்க்கிறது
அவன் வாலின் மேல்
மிகுந்த கவனத்துடன் இருக்கப் பார்க்கிறான்
இப்பொழுது
வாலைவிட்டு
புலியின் கழுத்தை நெறிப்பது
அவனின் நோக்கமாகிக் கொண்டிருக்கிறது.

பிறகொரு நாள் கோடை தொகுப்பிலிருந்து.

பெருந்தேவி

கவிதைகள்

இக்கோப்பைகள் நிரம்பத் ததும்பி வழிகின்றனர் இவர்கள்

இன்னமும் இருட்டவில்லை
கண்டமாத்திரத்தில் சொற்கீற்றை
அடையாளம் காண முடியாத அளவுக்கு.

இருப்பவர் மூவர் -
ஒருத்திக்குத் தன் காதே வயலினாக வேண்டும்
என விருப்பம்.
இன்னொருத்திக்கு நகைப்பதே மறுப்பது.
அடுத்தவள் பித்தம் தலைக்கேறாது
வாதிப்பதில் வல்லவள்.

அவள் பேச இவள் நகைக்க இவள் கேட்க
அவள் மறுக்க இவள் விழைய அவள் தொடர
அவள்களும் இவள்களும்
அவன்களையும் இவன்களையும்
அருந்துகின்றனர்
சுடச்சுடச்சுட
தானொத்தப் பொழுதுகளையும் சமிக்ஞைகளையும்
நினைவூட்டி
நான்காவதாக அமர்ந்து
அவர்களைக் குளிர்விக்கிறது இரவு
(ஆண்/ பெண் பேதம் அறியாது)

இப்பூங்கா

நகராத முள்ளோடும் நேரத்தை
நூற்றுக்கும் மேலும் உணர்ந்தாயிற்று
இருதூண் கொண்ட
இருக்கையாகும் முன்னமே.
தற்கொலையேற்ற கால்கள்;
(இக்கடிகாரம் என் சிலையென்று
இன்னமும் அறியப்படவில்லை?
இறைத்தூதர்களால் நிரம்பி வழியும் உலகில்
எக்காத்திருத்தலும்
எப்படி அர்த்தம் கொள்ளும்?)

எனக்கின்னும் நேரம்
உண்டு /
இல்லை
எனாத வாக்குறுதியைப்
பரிசளித்தபடி நிற்கிறது
/ இல்லாத நிறைபொழுது
(எப்போதுமே குறைபட்ட / குற்றஞ்சாட்டும் கவிதைக்கு
எப்படி இதைப் பரிமாற்றம் செய்வது?)
என்னைப் பதிலீடு செய்யும்
கைப்பேசியை
எப்போதோ அணைத்தும்விட்டேன்.

அது மட்டுமே.

கவிதைகள்

குலசேகரன்

Roy

ஒய்வு நாள்

விடுமுறை அளிக்கப்பட்ட நாளின்
சூரியன் நடுவானில் ஒளிருகையில்
அந்தத் தொழிற்சாலையின் வழியே
அவன் பேருந்தில் பயணிக்கிறான்
உயரமான சுவர்களால் சூழப்பட்டு
சிறைச்சாலைக் கட்டிடம் போல்
அது ஜன்னலில் தென்பட்டது
நீண்டகாலம் பழகியதாக இல்லாமல்
புதிய இடமாகத் தோன்றியது
அவன் இயக்கும் இயந்திரங்கள்
இப்போது உள்ளே ஓய்ந்திருக்கின்றன
வெளிப்புறமாக சீருடைக் காவலர்கள்
அந்த மாபெரும் இரும்புவாயிலை
துடைத்து மெருகேற்றிக் கொண்டிருக்கிறார்கள்
அவன் கடந்த பின்னும்
வெளியேப் பார்த்தவாறிருக்கையில்
அவர்கள் இன்னும் சுத்தம் செய்கிறார்கள்
உள்ளே யாருமில்லை
கதவு இறுகவே மூடியிருந்தது
இன்று முழுக்க நினைத்துக்கொண்டிருக்கும்.

இரகசிய அறை

யாருமற்ற வீட்டின் தனிமையில்
அவன் நடமாடிகொண்டிருந்தான்
அவளின் மூடுண்ட அறை
அவன் கண்களில் விழுந்ததும்
ஆவலில் தள்ளித் திறந்தான்
அவள் மணம் தங்கியிருந்தது
பலவண்ணப் பூக்களைப் போன்ற
அவளின் ஆடைகளை உரசி
உள்ளே வேகமாக நடந்தான்
சூரியக் கதிர்கள் கூசிய
ஆபரணங்களிடம் சற்றுத் தயங்கினான்
அவள் சிறுவயதிலிருந்து சேர்க்கும்
அற்புதப் பொருட்களினூடே நகர்ந்தான்
அவளைப் போன்ற மென்மையான
நாட்குறிப்பு இடிக்க நின்றான்
அவள் கிழித்திருந்த நாட்கள்
காற்றில் ஒவ்வொன்றாக விரிந்தன
யாரோ ஒருவன் அன்பில் தந்திருந்த
ரோஜாப்பூ உயிரோடு ஒட்டியிருந்தது
இரு பக்கங்களுக்கிடையில் மறைந்து
இருவரும் பிணைந்திருந்தார்கள்
அதை மேலும் பார்க்க முடியாமல்
அப்படியே வைத்துவிட்டு
அவன் கதுவகளை மூடிக்கொண்டு
அவசரமாக வெளியில் வந்தான்

குலசேகரன்

கவிதைகள்

கவிதைகள்

குலசேகரன்

இருள் பூச்சிகள்

பகல்களின் பின் ஒளிந்திருக்கும்
கரப்பான் பூச்சிக்கூட்டம்
வீட்டில் இரவு நிரம்பியதும்
அவளுக்கு முன்னால் தோன்றுகின்றன
முதலில் கழிவுநீர்ப் பாதையின்
சிறு ஓட்டையைத் திறந்து
அவள் கைகால்களில் ஊர்ந்து
ஒவ்வொன்றாக ஏறி வருகின்றன
காற்றில் சுற்றிப் பறந்து
அவள் பார்வையில் பரவுகின்றன
நாலு சுவர்களிலும் அமர்ந்து
அவளின் அந்தரங்க உறுப்புகளைக்
கண்டு மயிர் சிலிர்க்கின்றன
தினம் சமைக்கம் தீயணைந்ததும்
அவள் உடலை மொய்க்கின்றன
அவள் அருவெறுத்து உதறுகையில்
எதிர்ப்புக் காட்டாமல் இறக்கின்றன
வெளியில் தள்ளி மூடினாலும்
உயிர்ப்புடன் உள்ளே நகர்கின்றன
அவள் களைத்து வீழ்ந்ததும்
கீழே சுடி நிறைந்திருக்கும்
அவை மேலேப் படர்கின்றன
படுக்கையில் ஆழப் புதைந்த
அவளின் தூக்கம் பிடிக்காத கண்களில்
அவற்றின் மீசைகள் துடிக்கின்றன.

ஆழ் வளை

அதன் மேலுள்ள கடைசித் துரும்பை
நீக்கிய பின்னும் தப்பிக்காமலிருக்கிறது
உங்களின் நெருங்கும் காலடியோசைகளில்
அது எச்சரக்கையுற்று
மீண்டும் உள்ளேப் புகுந்தது
நீங்கள் நுனியைக் கண்டீர்கள்
கைகளில் எரியும் விளக்குகளோடு
அந்த இடத்தை சூழ்ந்தீர்கள்
அது மேலும் உட்புறமாக
நுளைத்துச் சென்று கொண்டிருக்கிறது
உங்களின் வசைக் குரல்கள்
காற்றில் நிறைந்துப் பரவுகின்றன
திரும்ப முடியாத தூரங்களில்
அது நகர்கிறது
உலகம் முழுவதையும் அழிக்க
உங்களுக்கு வன்மம் கூடுகிறது
ஒரு தேர்ந்த வேட்டைக்காரனுக்கு
உயிரோடு பிடிக்கும் ஆசை
ஆழமானத் தேடுதல்
அதலபாதாளங்களுக்குச் செல்கிறது
அதில் ஒன்றிப் போயிருக்கிறீர்கள்
அதை முடிவில் கண்டடைந்தீர்கள்
இறந்து வெகுகாலமான
அதைக் கொன்று கொண்டிருக்கிறீர்கள்.

குலசேகரன்

கவிதைகள்

david rosenbloom

அகங்காரம்

எனக்கு எனது தொப்புள்குழி
பிடிக்கும்
எனக்கு உனது தொப்புள்குழியும்
பிடிக்கும்
எனக்கு எல்லோர் தொப்புள்குழியும்
பிடிக்கும்
எல்லோர் தொப்புள்குழியும்
ஒன்று சேர்ந்தொரு
பெரும் தொப்புள்குழியாகி
என்னில் இணைந்தது

நான்
அளவிலா
அகன்ற நீரில்
மல்லாந்து மிதக்கிறேன்

மாபெரும் கண்ணால் பார்த்தேன்
மாபெரும் தொப்புள் குழிக்குள்
செந்தாமரைகள் பூத்திறங்கின

ஒவ்வொரு மர மலரிலும்
உயிர்கள் ஊசலாடின

நீயும்
ஒன்றில்
அமர்ந்துகொள்.

எனக்கு எனது கண்கள்
பிடிக்கும்
எனக்கு உனது கண்களும்
பிடிக்கும்
எனக்கு எல்லோர் கண்களும்
பிடிக்கும்
எல்லோர் கண்களும்
ஒன்று சேர்ந்தொரு
பெருங்கண்ணாகி
என்னில் இணைந்தது

அக்கண்ணைத் திறந்து பார்த்தேன்
பூமியில் ஒருவருக்குமில்லை
கண்கள்

ஸமீரா

கவிதை

சினிமா காலாண்டிதழ்

தனி இதழ் ரூ. 25
ஆண்டு சந்தா ரூ.100
வெளிநாட்டு சந்தா ரூ.400

முகவரி
134-ஏ/1, குருதேவ் அடுக்ககம்
மூன்றாவது சாலை
சதாசிவம் நகர் மடிப்பாக்கம்
சென்னை 600 091
தொலைபேசி: 044 55487540
email.sevvaham@rediffmail.com

நவீனாவும் புறநகர் குடியிருப்பில் சில அசைவுகளும்

யவனிகா ஸ்ரீராம்

vancaulaert

குறிப்பு : 1

இந்தக் காலத்தில் கம்ப்யூட்டர் தெரியாவிட்டால் என்ன? பெண் பிள்ளை கற்றுக் கொடுப்பதற்குள் அபிஷேக் ரொம்பவும் தான் அலட்டிக் கொள்வான் துடைகளில் உரசும் அவன் குதிகால்களில் தெரியாதவன் போல யாகூவின் ஃபோர்னோவை ஆன்செய்யும் திருட்டுத்தனத்தில் எப்போதும் குற்ற உணர்ச்சி கிடையாது திடீரென வீல்சேரில் அழுத்தி சிகரெட் புகை மணக்க முத்தமிட்டுப் போய்விடுகிறான் உடம்பெல்லாம் உஷ்ணமேற அந்த குட்டிமிருகத்தின் பின்புறக் கேசங்களை ரசித்துக் கொண்டிருப்பேன் போகன்வில்லாச் செடிகளும் கனிந்த சீத்தாப்பழங்களும் அடர்ந்த சென்டரின் பின்புறம் குளியலறையில் அவனை ஒருமுறைகூட இன்னும் நான் அனுமதிக்கவில்லை முடியாது என் செல்லமே! என்னை விட்டு அகலாது சுவர் கண்ணாடிகளின் வழி என் பிம்பங்களை நீ தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும் இப்போதெல்லாம் அவன்தான் எனக்கு நாப்கின் பண்டல்களை வாங்கித்தருகிறான் சிலநேரம்

இறைச்சியிட்ட புலவு தோழிகளுடன் ஊர்சுற்றிவிட்டு வீடுதிரும்ப மொபைல் செய்தால் போதும் வீதிமுனையில் விட்டுப் போவான் மத்திய தர குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு ஒட்டுப்போடும் வயது தயவு செய்து கொஞ்சநாள் இப்படி இருந்து கொள்கிறேனே ப்ளீஸ் எனக்காக என் வருங்கால கணவனே பெறப்போகும் என் அருமைக் குழந்தைகளே அக்கறையுள்ள என் அரசாங்கமே ப்ளீஸ் எனக்காக.

குறிப்பு : 2

நான் சமையலறையில் இருந்தேன் சன்னலில் வேப்பங்காற்று வீசியது காலம்கெட்டு விட்டது மழைபெய்யாது என்று சொல்லிவிட்டுப் போனாள் மேல்வீட்டு முதியவள் மிளகுத்தூள் குப்பியை உணவு மேசையில் பார்த்ததாக ஞாபகம் ஹாலில் யூஜின் அயர்ந்து உறங்குகிறான் மின் விசிறி சுழல்கிறது மெதுவாய் அவனருகில் சென்று முத்தமிட்டேன் மேலும் கைகளை ஊன்றி அவனது உதடுகள் மீது என் மார்புகளை ஒற்றினேன் எவ்வளவு அப்பாவியாக உறங்கிக் கொண்டிருக்கிறான் கதவு தட்டப்பட்டது நவின் வீடு திரும்பும் நேரம் அவன்தான் வந்தவன், முன்புறமாக என்னைத்தூக்கி முகத்தை மார்புகளில் அலையவிட்டான் யூஜின் இருக்கிறான் என்றேன் அவன் இன்னும் வீட்டிற்குப் போகவில்லை என்றவன் உணவு உண்டபின் என்னை நெட்டிப் படுக்கையறைக்குள் தள்ளினான் யூஜின் விழித்துக் கொண்டிருக்க வேண்டும் செருமல் சத்தம் கேட்கிறது கொல்லைப்புறக் கதவில் எப்போதும் வரும் பூனையின் பிறாண்டல் சத்தம் வேலை கிடைக்காலும் அதிக நண்பர்களைக் கொண்ட நவீனையே மணந்துகொண்டேன் யூஜின்தான் பாவம் பகலெல்லாம் என்னிடமே கிடக்கிறான் நவீனுக்கு பேண்ட் ஜிப்பையும் நானே பூட்ட வேண்டும் அவன் போனதும் சட்டென ஒரு கடிகாரக் குருவிபோல அறைக்குள் எட்டிப்பார்த்தான் யூஜின் ஏய்... நான் குளிக்கணும் என்று கத்தினேன் நோ ... என்ற பாய்ந்தவனைத் தடுக்க முடியவில்லை அசிங்கம் பிடித்தவன்.

குறிப்பு : 3

நள்ளிரவில் எனது கல்லூரித் தோழியுடன் மார்க்கட்டில் காய்கறி வாங்கிக் கொண்டிருந்தோம் கூட நவீனும் வந்திருந்தான் அவனுக்கு அவள் மீது ஒருகண் என்று எனக்குத் தெரியும் விடுதியில் நானும் அவளும் வேறுமாதிரி இருந்தவர்கள் புரிகிறதா கொழுத்த தர்பூசணிப் பழம் ஒன்றை நவீன் வாங்கினான் அவளுக்கு ஒரு பாட்டில் பியர் போதுமென்றாள் எனக்கு சிகரெட்டும் நவீனுக்குமாய் சேர்த்து அரைபாட்டில் வோட்காவும் வாங்கிக்கொண்டோம் ஏதோ புதிதாகச் சொல்வதுபோல மொத்தம் இருநூற்றி ஐம்பது ரூபாய் என்றான் நவீன்

அவள் அவனைக் கேலி செய்தாள் தூங்குமூஞ்சி மரங்கள் அடர்ந்த இருளில் குடியிருப்பிற்கு நடந்தோம் நவீன் நடுவில் எங்கள் இருவரின் இடையிலும் கை கோர்த்திருந்தான் நாங்கள் பின்புறம் அவன் சட்டைவழியே கைநுழைத்து முதுகைப் பிடித்துவிட்டுக் கொண்டிருந்தோம் இருவரையும் தான் முத்தமிட்டான் அன்றிரவு மேற்படிப்பிற்கான பரிட்சைக்கு நான் தயார் செய்ய வேண்டியிருந்தது அவர்கள் அறையில் இருந்தார்கள் நான் சில தர்ப்பூசணித் துண்டுகளை எடுத்துக்கொண்டிருந்தேன் வெகுநேரம் கழித்து அவள் மட்டும் வந்தாள் இருவரும் படுக்கைக்குப் போனோம் அன்று நிம்மதியாக உடல்குளிர்ந்து உறங்கினேன் நான்.

குறிப்பு : 4

நவீனின் தூரத்து உறவினன் ஒருவன் எப்போதும் இரு சக்கர வாகனத்தில் பயணிக்க விரும்புவன் மலைச் சாலையில் பயணிக்க எங்களை ஒருமுறை அழைத்தான் அதன் முடிவில் ஒரு கோடை வாசஸ்தலம் இருக்கிறது எங்கள் திருமணத்திற்குக்கூட அவன் வரவில்லை மிகவும் வற்புறுத்தினான் வேலை இருப்பதாகச் சொல்லி நவீன் என்னை உடன் போகுமாறு அன்புடன் பணித்தான் இருட்டுவதற்குள் திருப்பிவிடுவோம் என்றது அந்தப் பைத்தியம் எனக்கென்ன ஊர்சுற்றுவதற்குக் கேடு அழகான மலைப்பிரதேசத்தில் அந்த பைக்வாசி என்னை ஒரு டெலிபோன் பூத்திற்குள் வைத்து கண்ட இடத்தில் தொட்டான் ஒரு கொத்து காரட்டும் குளிர்கம்பளி ஒன்றும் வாங்கிக் கொண்டோம் வழியெல்லாம் அவனுக்கு முத்தம் கொடுத்தே ஓய்ந்துவிட்டேன். குளிர்ந்த காற்றில் அவனது பைக் மலைச்சாலை வழி தாவர மணத்தோடு இறங்க மிக ரம்மியமாக உணர்ந்தேன். அவன் முதுகில் என் மார்புகள் குத்துச்சண்டை போடுவதுபோல அப்படித்தான் அவன் பைக்கை பழக்கியிருந்தான் எங்களிடம் அவன் கண்சிமிட்டி விடைபெற்றுப் போனதும் ரொம்பவும் இம்சை அவனோடு என்று நான் சலித்தேன் நீ வேறு அவன் வீட்டில் அவன் மனைவியை நான் மடியில் இழுத்துப்போட்டுக் கொள்ள வேண்டுமானால் நான் ரொட்டியில் வெண்ணை தடவி வைக்கட்டுமா என்பான் என் அருமை தம்பி என சிரிக்கிறான் நவீன் சரிதான் போ நல்ல அண்ணன் தம்பிகள் என்றேன் நான்.

◆

david rosenbloom

முதலில் ஒரு சிறிய நீர்க்குமிழி. அது பெருத்துக் கொண்டே போய் பல குமிழிகளாய் வெடிக்கிறது. திரை முழுவதும் அவை ஒன்றோடு ஒன்று மோதி அலைகின்றன. பின் மறுபடி அதே காட்சி சிவப்பு வண்ணத்தில். பின் பச்சை, மஞ்சள் என மாறிக்கொண்டே இருக்கிறது. செகந்தராபாத் கம்பெனி சரக்குகளை எந்தத் தேதி வரை என்ன விலைக்கு தர சம்மதித்து என்ற விபரம் கம்ப்யூட்டருக்குள் இருக்குமிடத்தைத் தேடிக் கொண்டிருந்தேன். ஒரு நிமிடத்துக்கு மேல் ''மௌ"ஸை அல்லது ''கீ'' போர்டை இயக்காவிட்டால் திரையில் நீர்க்குமிழிகள் வரும்படி செய்தது ராஜன்தான். வெகு நேரமாகத் தேடிக் கொண்டிருக்கிறேன். பொடுகும் விரட்டிக் கொண்டிருக்கிறார்.

அவருக்குப் பொடுகு என்று பட்டப் பெயர் வைத்ததே சுந்தரராஜன்தான். ''ஹெட் கிளார்க்'' தலைக்கு மேல் அரித்து எடுக்கும்போது பொடுகு என்ற பெயர் பொருத்தம்தானே. கிட்டத்தட்ட எல்லா முக்கியமான விபரங்களையும் கம்ப்யூட்டரில் அவன் தான் ஏற்றி வைத்திருந்தான். கேட்கும் போது அதை எடுத்துக் கொடுப்பான். அவனது முக்கியத்துவத்தை உதாசீனம் செய்து தனது அதிகாரத்தைக் காட்டுவார் பொடுகு.

''ஸார்... சாய்...'' குரல் கொடுத்தபடியே மேசையை விட சற்றே உயரமான ஒரு சிறுவன் ஒரு பிளாஸ்டிக் குப்பியில் தேனீரை வைத்து

விட்டுப் போனான். எடுத்து உறிஞ்சினேன். இது மேசைக்கு வரும்போது தான் காலை பதினோரு மணி ஆனதே தெரியும். விரட்டு விரட்டு என்று விரட்டுவார் பொடுகு.

ஒரு உறிஞ்சு உறிஞ்சி இருக்க மாட்டேன். பொடுகு ரப்பர் செருப்புத் தேயும் ஒலியோடு வந்துவிட்டார். "கம்பூட்டர் பிரிண்ட் அவுட் எடுத்தியா?"

"நிறைய சப் டைரக்டரி இருக்கு. ராஜன் என்ன பேருல 'சேவ்' பண்ணியிருக்குன்னு தெரியல"

"சரி விடு. அந்த 'கொடேஷன்' போன செப்டம்பர்ல வந்தது. செப்டம்பர் மாச கடுதாசி இருக்குமே. 9/04 ஃபைல் அதுல தேடு" வந்த வேகத்திலேயே மேனேஜர் அறைக்குப் போய்விட்டார்.

ராஜனை படிய வைக்க பொடுகு மேனேஜர் அறையிலிருந்து அவனைக் கூப்பிட்டு அனுப்புவார். கட்டளை தூள் பறக்கும். சிலசமயம் அவன் வெளிப்படையாகப் பேசுவதை மேனேஜர் ரசித்து அவனைத் தட்டிக் கொடுத்து அனுப்புவதும் உண்டு.

மதிய உணவு இடைவேளை வரை தேடினேன் 9/04 போட்டு நான்கு ஐந்து ஃபைல்கள் இருந்தன. சொல்லி வைத்த மாதிரி செகந்தராபாத் கம்பெனிக் கடிதம் சிக்கவில்லை.

மதிய உணவை ஒரு வாய் மென்றிருக்க மாட்டேன் 'டெஸ்பாட்ச்' ஆழ்வார்சாமி வந்தார். "தம்பி அந்த லெட்டர் மேனேஜர் ரூம்ல அவரோட பீரோல இருக்கணும். அதெச் சொல்றதுக்கு ராஜன் ஒத்தனுக்குத்தான் துணிச்சல் உண்டு. குடுத்து வெச்சவன் காக்கடுதாசி கொடுத்துட்டுப் போயிட்டான்" என்றார்.

"மின்னே ஒருதடவை அவளைத் தேடினாங்களே ஞாபகம் இருக்கா?" என்றார். கோயம்புத்தூரில் பெரிய தொகை பாக்கி வைத்த ஒரு புது ஏஜண்ட் திடீரென முகவரி இல்லாமல் காணாமற் போய்விட்டான். மூன்று லட்ச ரூபாய் நிலுவை. அந்த ஆள் 'ஆர்டர்' கொடுத்து சொற்ப தொகை முன் பணமாகக் கொடுத்த ஓரிரு நாட்களில் ராஜன் விசாரித்து விட்டு ஆள் கோயம்பத்தூருக்கே புதுசு" என்று எச்சரித்தான். நிச்சயம் அந்த ஆள் கிடைக்க மாட்டான் என்று தெரிந்ததும் ராஜனைத் தேடத் துவங்கினார்கள். ராஜனை எப்படியும் தொடர்புகொள்ளும் வேலை எனக்கு ஒப்படைக்கப்பட்டது. என்னிடம் இருந்தது அவனுடைய மொபைல் எண் 9818166511. தற்போது உபயோகத்தில் இல்லை. நிம்மதி. இத்தோடு விட்டு விடுவார்கள். ஆனால் பொடுகு விடுவதாக இல்லை. "மாலதிகிட்டே கேட்டுப்பாரு" என்று கண் சிமிட்டினார்.

மதிய உணவு இடைவேளையில் தயங்கி மாலதி இருக்கைக்குப் போனேன். "நெட்"டில் ஏதோ தமிழ் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தாள். என்னுடைய "ஹலோ"வுக்கு அவள் கண்ணசைவில் பதில் சொன்னாள். "வந்த விஷயத்தை நீயே சொல்லு" என்னும் ஒரு

தோரணை பெண்களிடம் தென்படும். எப்படி அதை பிடிக்கிறார்கள். அம்மாவிடமிருந்தா? தோழிகளிடமிருந்தா? ராஜனைப் பற்றி என்னிடம் ஏன் கேட்கிறாய் என எரிந்து விழுந்தால்? வாய்ப்பு அதிகமில்லை. ஏனெனில் ஒரு முறை இருவரும் அவனது இரு சக்கர வாகனத்தில் போவதை நான் பார்த்திருக்கிறேன். மதிய உணவு இடைவேளையில் இருவரும் பேசுவதை அடிக்கடி எல்லோருமே பார்த்திருக்கிறோம்.

அவளிடமிருந்து ஒரு "லேன்ட் லைன்" எண்தான் கிடைத்தது. அது ஒரு வீட்டு எண். வெகு நேரம் கழித்து ஒரு நடுவயதுப் பெண் குரல் கேட்டது. ராஜன் இங்கே இல்லையே என்றார். நீங்க அவருடைய அக்காவா என்றதற்கு அண்ணி என பதில் வந்தது. அந்த அம்மாள் ராஜனுடைய அண்ணனின் அலுவலக எண்ணைக் கொடுத்தார் முதல் முறை "ஆபரேட்டர்" ஒரு "எக்ஸ்டென்ஷனு"க்கு இணைத்தார். அறுந்து போனது. பிறகு மறுபடி முயல இணைப்பு கிடைத்தது. அந்த அண்ணன் இருக்கையில் இல்லை.

அதற்கு மேல் துரத்த என் பொறுமை இடம் கொடுக்கவில்லை. "கிடைக்கல சார்" என்று கைகழுவினேன்.

இன்றும் எப்படியும் ஒப்பேற்ற வேண்டியதுதான். ராஜன் பொடுகை மட்டுமில்லை என்னையும் மதித்து எந்த விவரமும் சொன்னது கிடையாது. அதிகம் விடுப்பு எடுத்ததில்லை அவன். அதனால் அவன் ராஜினாமா வுக்குப் பிறகு ஒரிரு விஷயங்கள் இது போல் குழம்பித் தவித்தன.

மதியம் 4 மணி வரை தேடுவதாகப் போக்குக் காட்டினேன். நான்கு மணிக்கு மேல் மேனேஜர் அறைக்குப் போன பொடுகு திரும்பி வரவேயில்லை.

அன்று மாலை பேருந்து திருவான்மியூரைத் தாண்டும்போது "பஸ் ஸ்டாண்ட்" எதிரிலுள்ள மதுக்கடையில் ராஜன் நுழைவதைப் பார்த்தேன். நான் கூப்பிட்டாலும் கேட்க முடியாத தூரம், வாகன இரைச்சல்.

அன்று இரவு பிடித்த மழை மறுநாள் காலைவரை நன்கு அடித்துப் பெய்தது. அலுவலகம் வர எல்லோருக்குமே தாமதமாகிவிட்டது. அன்று மேனேஜர் அலுவகத்துக்கே வரவில்லை. பொடுகு "உம்"மென்று இருந்தார். எனக்கு அப்படி ஒன்றும் வேலை இல்லை. கம்ப்யூட்டரில் ஒவ்வொரு ஃபைலாகத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தேன். "பயோடேட்டா" என்ற ஒரு ஃபைலில் ராஜனின் எல்லா விவரங்களும் இருந்தன. புது மொபைல் எண், முகவரி, லேண்ட் லைன் எண் எல்லாமே. நானாக எதற்குப் பொடுகு இடம் இதை சொல்ல வேண்டும்? அப்போதைக்கு என்னை விட்டு வைத்தவரை போதும். அடுத்து வந்த விவரங்களில் பெரிய இம்சை எதுவும் இல்லை. பொடுகுக்காகவா அவன் ராஜினாமா செய்தான்? அதிகம்.

ஒரு நாள் காலை 7 மணி போல் என் வீட்டுக்கு தொலைபேசி அழைப்பு. ராஜன்தான். அவன் உறவினர் ஒருவருக்கு இதய அறுவை சிகிச்சை என்றும் என்னை ரத்த தானம் தரச் சொல்லியும் வேண்டினான். ◆

"ஸ்யாக்"

குமார் அம்பாயிரம்

நான் ஆவிகளோடு பேசவும் நட்பு கொள்ளவும் தொடங்கியதிலிருந்து மனிதர்களுடனான எனது உறவை நான் முறித்து கொள்ளு முன்பே, தங்கள் பாதையில் அவர்கள் விலகி சென்றார்கள். எனது ஒரே நண்பன் வெள்ளைப் புறா வில்ஸனின் 13 புறாக்கள் வலுவான காற்றை எதிர்த்துப் பறந்ததைப் போல வெம்மையாலும் காற்றின் சீற்றத்தாலும் சிறகுகள் எல்லாம் உதிர்ந்து வயிறு கிழிந்து வட்டமான கண் விழி திறந்தே சிதறி இறந்து கிடந்தன. திறந்திருக்கும் புறாக்களின் விழிகளில் பாழடைந்த இரவுகளின் கருநீலம் நொறுங்கிக் கிடக்கிறது. காலை இளம் காற்றில் வில்ஸனும் நானும் புறாக்களின் மரணத்தைக் கண்டோம். புறாக்களைக் காகித கூடையில் சேகரித்து நகரின் தெற்கேயுள்ள இலுப்பை மரத்தோப்பில் ஒரே குழியில் இட்டுப் புதைக்கும்வரை மட்டுமே என் நண்பன் என்னோடு நட்பாக இருந்தான். கோபத்தாலும் கண்ணீராலும் அவன் உடல் பதறிக் கொண்டிருந்தது. மண் தள்ளி மூடி இறுதியாக சவக்குழியின் தலைமாட்டில் கல்லை நட்டதும் என்னிடம் விடைபெறாமல் பிரிந்து சென்றான். அவனுடைய புறாக்கள் இறந்ததற்கு நான்தான் காரணமென்று உறுதியாகவும் நம்பிக்கையின்றியும் நம்பினான். புறாக்களின் புதை குழி மேல் நட்ட கல்லே எங்களது பிரிவின் அடையாளமாக நிற்கிறது.

அவனொரு பாதையில் போனபின் நானொரு வழியில் விலகிச் சென்றேன். இங்கே இரண்டே வழிகள்தான். வருவதற்கு ஒரு வழி, போவதற்கொரு பாதை. வந்த வழியில் திரும்பிப்போக முடியாது. போன பாதையில் திரும்பி வரமுடியாது. கட்டில் காலின் கீழிருந்து துவங்கும் இந்த நகரின் பாதைகளில் ஒன்று சூர்யோதயத்தை நோக்கிச் செல்கிறது. மற்றொன்று சூர்ய அஸ்தமனத்திலிருந்து திரும்பி வருகிறது. சூரிய அஸ்தமனத்திற்குக் கீழேதான் எல்லா இடுகாடுகளும். தினமும் நான் இடுகாடு வரை சென்று திரும்புவேன். பேய்களுக்காகப் பூத்திருக்கும் கள்ளிச் செடிகளும், சூரை முட்களில் மாட்டிக் கொண்டு காற்றில் கிழித்து வா வா எனப் பறந்தது. அழைத்துக் கொண்டிருக்கும் சவத்தின் மேல் போர்த்தப்பட்ட கோடித்துணிகளும். தாலாட்டி எறியப்பட்ட பாடைகளும் சூழ்ந்த கோலம் கொண்டிருக்கும் இடுகாடு வரை தினமும் உலாவச் சென்று மாலைப் பொழுதுகளைக் கழித்து திரும்புவேன் - என் நண்பனின் புறாக்கள் இறப்பதற்கு முன்.

நகரத்திற்கும் இடுகாட்டிற்கும் இடையில் நீளும் சாலையின் நடுவில் தேநீர் விடுதியொன்று இருக்கிறது. கேட்பாரற்று இறந்து போய் அழுகிக் கொண்டிருக்கும் எருமை மாட்டின் தோலாலும், எலும்புகளைப் போன்ற மூங்கில்களாலும் தூக்கி நிறுத்தப்பட்ட கூடாரம் அது. உலாவலுக்கு இடையில் தேநீர் அருந்தவும் புகை பிடிக்கவும் அங்கு செல்வேன்.

தேநீர் விடுதியை நடத்திவரும் கிழவனைப் பற்றி பல்வேறு விதமான கதைகள் - கிழவன் அபின் விற்பான், கஞ்சா குடிப்பான், இரவில் பெண்களோடு வருபவர்களுக்கு இடம் தருவான்... முட்டையை அடுப்பில் வைக்காமல் கைகளில் வைத்திருந்தே குஞ்சு பொரிக்கச் செய்திடுவான் என கதைகள். ஆனால் கிழவனைப் பார்த்தால் குழந்தையாக - பிறக்கும் போதே கிழவனாகப் பிறந்தவன் போல் இருப்பான் - வயோதிகமாகவும் குழந்தையைப் போன்றும்.

எனக்கும் கிழவனுக்கும் நட்பு நேற்றிரவு நிகழ்ந்த விபத்தைப் பற்றிய உரையாடலிலிருந்து தொடங்கியது. ஒரு காரும் ராட்சத நெல் அறுவடை இயந்திரமும் மோதிக் கொண்டதில் மூன்று இளைஞர்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். அறுவடை இயந்திரம் பலமாக சேதமடைந்தது. அதிவேகத்திலும் அளவுக்கு மீறிய போதையிலும் வாகன ஓட்டி இருந்ததால், விபத்து நிகழ்ந்தது. நகரத்தினுள் இவ்விபத்து நிகழ்ந்திருந்தால் அவ்விளைஞர்கள் பெருந்தொகையான மக்களைக் கொன்றிருப்பார்கள் என செய்திகள் கூறின.

கிழவன் என்னிடம் நேற்று நடந்த விபத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய் எனக்கேட்டான். உண்மையில் விபத்து நிகழ்ந்தது போல் இல்லை. யாராலோ நிகழ்த்தப்பட்டது போன்றதொரு வேகத்தில் நிகழ்ந்திருக்கிறது என்றேன். நீ கூறுவது உண்மையே. இப்பகுதியிலேயே பல காலமாக

உலாவிக்கொண்டிருக்கும் ஆவியினால் தான் இவ்விபத்து நிகழ்த்தப் பட்டது. இவ்விபத்து நிகழ்ந்ததே பல விபத்துகளை தடுக்கத்தான் என்றான். பல தொழில்கள் செய்து இறந்து போனவன் ஆவி அது. அவன் முன்பு சிறந்த வாகன ஓட்டியாகவும் இருந்திருக்கிறான்.

நாம் நமது உரையாடலிடையே ஆவி என நேராகப் பொருள் தரும் வார்த்தையைப் பயன்படுத்துவது சகலத்தையும் பலவீனப்படுத்திவிடும். பழங்களைப் பெயர் சொல்லி அழைப்பதினால் அவை சீக்கிரமாக அழிந்துவிடுகின்றன. கானகத்தில் சில இலைகள் பெயர் சொன்னால் தம் இயல்பை இழந்து விடுகின்றன. ஆகையால் இனி ஆவிகளை ஆவி என்றுரைக்காமல் - "ன்யாக்" என்று வேறு மொழியில் அதே வார்த்தை தரும் வார்த்தையால் அழைப்போம் என்றான் கிழவன்.

ன்யாக்குகளில் எனக்குப் பல நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களோடு சிநேகம் எளிதுதானென்றும், திசையின்று நியதியின்றி பூமிக்கு மேலே காற்றினூடாக ஓடிப் பிடித்து விளையாடும் விளையாட்டைப் போல்தான் ன்யாக்கின் மீதமிருக்கும் வாழ்க்கை. எனது வாடிக்கையாளர்களிலேயே நீயே இதை பகிர்ந்து கொள்வதற்கு சரியானவன் என்று நான் நினைப்பதாலும் உன்னிடம் இதை கூறுகிறேன் என்றான்.

நானும் "ன்யாக்"கோடு நட்பு கொள்ள முடியுமா என்றேன். சிறிது நேரம் என்னை ஆழ்ந்து நோக்கிக் கிழவன் மௌனமாக இருந்து விட்டான். அன்று முதல் கிழவனின் தேநீர் விடுதிக்கு நான் இரவு வேளையில் செல்லத் துவங்கினேன்.

முன்னிரவுக்கு முன்பாக நான் தேநீர் விடுதிக்கு வந்தவுடன் கிழவன் நீண்ட மூங்கிலோடு இணைத்து கருட்டி வைத்திருக்கும் சாக்குப் பையை இறக்கி கடையை அடைத்து விட்டு, என் முன்னால் கருப்பு நிறப்பலகையை எடுத்துவைப்பான். பலகையில் குறுக்கும் நெடுக்கும் பவள நிறத்தில் மங்கலாக கட்டங்களும் கோணங்களும் வரைந்திருக்கும். கூடாரத்தின் மையத்தில் மேலேயிருந்து கீழ்நோக்கி தொங்கவிடப்பட்டிருக்கும் இராந்தலின் திரியைத் தூண்டிவிட்டு கரும்பலகையைப் பிரகாசமடையச் செய்வான். இருவருக்கும் இடையில் இருக்கும் கரும்பலகையில் அவனது சுருக்குப் பையிலிருந்து கூழாங்கல்லைப் போலவும் பல்லியின் முட்டையை போலவுமிருக்கும். எதிர் காலத்தின் கடவுளிடமிருந்தோ கடந்த காலத்து மூதாதைகளிடமிடருந்தோ கிழவன் பெற்றிருக்கும் மழாங்கற்களை கரும்பலகையின் கட்டங்களிடையே பரப்புவான்.

ஒரு எதிர்வினையை சிறு சமிக்ஞையை மனதில் நிறுத்தி பட்சிகளின் குரல்களால் பின்னிரவு கலையும்வரை பரப்பப்பட்ட மழாங்கற்கள் அசைகிறதா எனப் பார்த்தபடி அமர்ந்திருப்போம். இடையில் மூன்று நான்கு கோப்பைகள் தேநீர் போட்டு வைப்பான். பல இரவுகள்

அக்கரும்பலகை முன் இருந்தாலும் மழாங்கற்களை உற்று நோக்கத் தொடங்கியவுடன் எனது எண்ணங்கள் என்னை அங்கிருந்து வேறெங்காவது எடுத்துச் சென்றுவிடும். ஒரு நாள் கிழவன், உனது கண் எதைப் பார்க்கிறதோ அதன் மீதே உன் கவனத்தை நிறுத்தி நில் என்றான்.

மழாங்கற்களை கரும்பலகையின் மங்கிய பவள நிறக்கோடுகளினூடே உற்று நோக்குவதின் மூலம் என் கவனிப்பை ஒருமுகப்படுத்தினேன். என் கவனத்தின் மூலம் கவனமின்மையை அடைந்தேன், கவனமின்மை எங்கும் நிறைந்து என்னை மிதக்க வைத்தது நான் மிகத் தாமதாமாகப் புரிந்து கொண்டேன்: ஒன்றை கற்றுக் கொள்வதென்று ஏதுமில்லை. பவளநிற கட்டங்களினூடாக கவனிப்பதின் மூலம் என் எண்ணங்களை சிந்தையை நகர்த்தி கொள்வதுதான் அல்லது நாம் எதுவாக வேண்டுமோ அதுவாகவே மாறிவிடுவதுதான். கரும்பலகையும் கிழவனும் எனக்கு இதையே மௌனமாகப் போதித்தனர். தாமதமாக நான் புரிந்துகொண்ட பல இரவுகளுக்கு பின் கிழவன் என்னிடம் கேட்டான். சற்று நேரத்திற்கு முன் நம்மோடு "ன்யாக்" ஒன்று இருந்ததை நீ உணர்ந்தாயா என்றான். நானொரு ஆழ்ந்த மனநிலையில் இருந்தாலும் "ன்யாக்" வந்ததையும் எங்களோடு இருந்ததையும் உணரவில்லை என்றேன்.

இன்று வந்த ''ன்யாக்'' புதியது அல்ல என்றாலும் ஏற்கனவே பரிச்சயமற்றதுதான் அவர் விட்டுச் சென்ற தடயத்தை மட்டும் உனக்கு காட்டுகிறேன்.

கிழவன் எப்போதும் எங்களுக்கு இரவில் தேநீர் போடும்போது மூன்று நான்கு கோப்பைகளாகத்தான் போடுவான்.

இந்தா இது உனது, இந்த கோப்பை என்னுடையது மூன்றாவதாய் இருந்த கோப்பையை என்னிடம் நீட்டினான். அவன் நீட்டிய கோப்பையில் கோப்பை நிறைய தேநீர் அப்படியே இருந்தது. இதைக் குடித்துப் பார் என்றான். அக்கோப்பையிலிருந்து சிறு மிடறு குடித்தேன். இரவின் ஆழங்களால் பின்னப்பட்ட எனது உணர்வுகளின் உறைநிலை நொறுங்குவதாக உணர்ந்தேன் சர்க்கரையின் இனிப்போ தேநீர் தூளின் உவர்ப்போ இன்றி ஒன்றுமில்லாததைப் போல் சுவையற்றிருந்தது.

கோப்பையிலிருந்த உள்ளீடற்ற தேநீரை விடுதியின் பின் வளர்ந்து தேநீர் விடுதியை பெரும் கருங்குடை போல் கவிழ்ந்து காத்து நிற்கும் மரத்தின் வேர்களில் ஊற்றினான். இதற்கு முன்பும் கிழவன் அக்கரிய மரத்திற்கு தண்ணீர் ஊற்றாமல் எப்போதும் தேநீரையே ஊற்றுகிறான்.

மழாங்கற்களை உற்று நோக்கத் தொடங்கியதும் கட்டங்களில் தானாகவே நகரத்துவங்கிவிடும் எனது விழிகள் இங்கிருந்து அங்கும் அங்கிருந்து வேறெங்குவதுமாக அலைய கற்கள் கட்டங்களினூடாக நகர துவங்கும்

வார்த்தைகளற்ற உணர்வுகளால் கிழவனுக்கும் எனக்குமிடையே ஆழ்ந்த மௌனம் நிறைந்து விட்டது.

எனக்கும் ஒரு வார்த்தைக்கும் இன்னொரு வார்த்தைக்கும் இடையில் கணங்கள் மறைந்து பொழுதுகள் வளர்ந்து பகல் இரவுகள் பெருக்கெடுத்தன. வார்த்தைகளிற்றிருக்கும் என்னுள் வார்த்தைகள் கைவிட்ட வெற்றிடத்தில் தசையால் உருகிய குளம் உருவாகத் தொடங்கியது.

நிறமற்ற குரல்களாகவும் நீராகவும் நெருப்பாகவும் ரூபமடையத் துடிக்கும் தீயின் உயர்வாகவும் தண்ணீரின் சலனமாகவும் எழுந்து கலைந்து அமிழ்ந்தன. உள்ளே அதன் கரைகளின் மோதியபடி இருந்தன. ''ன்யாக்''குகளுக்கு வண்ணம் இல்லாததாலும் ''ன்யாக்''குகள் வண்ணங்களை விரும்பாததாலும் நீரின் நிறமற்ற இயல்பிலும் தீயின் நிலையற்ற ரூபத்திலும் என்னை என் இதயத்தைப் பற்றிக் கொண்டன. ன்யாக்குகளின் விருப்பத்திற்கு என் இதயத்தை விட்டுவிட்டேன்.

எப்போதும் என்னுடனிருக்கும் ன்யாக்கை முதன் முறையாக கண்ணாடியின் குறுக்கே வழியும் நீர் ஒழுக்கைப் போல் கண்டேன். நீர் ஒழுக்கு கண்ணாடியை பின்னமடைய செய்வதால் "ன்யாக்" ஒரே நாளின் பல பொழுதுகளில் தோன்றி மறைவதாக உணர்ந்தேன். ஆனால் அது எப்போதும் என்னுடனே இருந்தது. மொத்த ஆயுளை வாழ்ந்து கழிக்காமல் தம் உடலை மட்டும் அழித்துக்கொண்டு அழிக்கப்பட்ட தங்கள் வாழ்வின் ஆற்றலை வாழ்ந்து வெளியேற்றி கொள்ளாத உள்ளுக்குள் அலறி கொண்டிருக்கும் மனிதர்களின் அழிந்த உடல்களின் ஆன்மாக்களே ன்யாக்காக ஆகின. தன்னைத்தானே தூக்கிலிட்டு இறந்து போன பெண் ன்யாக் இடம் என்னுடன் இருந்த பல நாட்களின் இடைவெளியில் கேட்டேன் :

நீ ஏன் இறந்தாய்?

அன்பின்மையால் நான் இன்னும் இறக்கவில்லை.

அவன் உன்னை நேசித்தான் நீ

நான் தீவிரமாக நடித்தேன் ஆனால் இப்போது அவனைத் தேடுகிறேன்.

எங்கே அவன்?

அவன் இருப்பான் இங்கேதான், பூமியின் மேலேயோ பூமியின் உள்ளேயோ.

நான் வேறு பலரோடு உரையாடினாலும் தன்னைத்தானே தூக்கிலிட்டுக் கொண்ட ன்யாக்தான், எப்போதும் என்னுடனிருந்து கதகதப்பான

போர்வையைப் போல நான் விரும்பும் சிநேகித உணர்வை எனக்கு அளித்தது. மிதமான காற்றால் சுமந்து செல்லப்படுபவனைப் போல் உணர்ந்தேன்.

இந்த ஸ்யாக் உள்ளுணர்வைப்போல் உடனிருந்து வழிநடத்தும் நெரிசல் மிகுந்த பேருந்தில் பயணிக்கும் போது, அதோ அந்த மஞ்சள் நிறச்சட்டை இறங்கப் போகிறார், அவர் அருகில் செல் என்றொரு உணர்வு என் முதுகை நிறைக்கும். அவர் இறங்கிச் செல்வார், நான் அமர்ந்து செல்வேன். தொலைதூர ஊர்களிலிருந்து பேருந்துகள் கொண்டு வரும் அசதியான தூக்கம், பேருந்தில் நான் அமர்ந்தவுடன் என்னைப் பற்றிக் கொள்ளும், இதனால் நான் இறங்க வேண்டிய நிறுத்தம் தாண்டிப்போய் வேறு ஊர்களை அடைந்திருக்கிறேன், ஆனால் இப்போது எனது கழுத்தை மயிற்பீலியால் யாரோ நீவியது போல் உணர்ந்து கண் விழித்தால் நான் இறங்கும் இடம் வந்திருக்கும். சில வேளை எனது நிறுத்தத்திற்கு முன்னமே இறங்கிவிடு என என் இதயத்தருகே கிசுகிசுக்கும், இறங்குவேன். நான் நகர தெருக்களில் நடக்கும் போது ஐந்தடி பின்னால் போய் மூன்றடி பக்கவாட்டில் நகர்ந்து மீண்டும் முன்னால் போ என என் மார்பில் கைவைத்து நேசத்துடன் தள்ளிவிடும். மேலும் எதிரே வருகிறானே நீலநிற ஜீன்ஸும், ஜிப்பாவும் அணிந்து வருபவன் உன்னை கடப்பதற்குள் இந்த சந்தில் திரும்பி விடு. பூட்டிய கதவுகளின் முன்னால் நீண்ட நேரம் நிற்காதே, பௌர்ணமையென்பதால் இரவில் கண்ணாடி பார்க்காதே, காற்றில் உயர்ந்து தாழும் மரக்கிளையைப் பார்த்துக்கொண்டிரு. நில் என்றொரு சொல்லும் திரும்பிச் செல் என்றொரு குரலுமாக என்னை வந்தடையும் ஸ்யாக்கின் சமிக்ஞைகளை நான் பின்பற்றியபோதெல்லாம் வஸ்துகளெல்லாம் திடத்தன்மை அழிந்து நான் மிதப்பதான நிலையில் மகிழ்ச்சியானவை களே எனக்குக் கிட்டின. எனது தீர்மானங்களையும் என்செயல்களையும் என் வாழ்வோடு பிணைந்த சகலத்தையும் ஸ்யாக்கிடம் விட்டுவிட்டேன். எல்லோரும் தம் வாழ்வை ஸ்யாக்கிடம் விட்டுவிட்டால் இந்த உலகமும் நமது வாழ்வும் மென்மையானதாக மாறிவிடும். மனிதர்களிடமிருந்தும் கோட்பாடுகளிடமிருந்தும் இவ்வுலகை விடுவித்து ஸ்யாக்குகளின் வசம் ஒப்படைக்கும் காலம் வரும். தீவிரமாக வாழ்ந்து நிராசையோடு இறந்தவர்களால்தான் ஒவ்வொருவரின் தனி நியதியை எல்லோருக்கும் பொதுவாக மாற்றாமல் ஆன்மாக்கள் ஆசைகளிலிருந்து உருப்பெறாமல் ஆசைகள் அதன் இயல்பிலேயே நியதிகளாக மாறாமல் ஆசைகளே ஆன்மாவாக வரமுடியும். ஏற்கனவே இறந்தவர்கள் மனித நியாயங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். மனித நியதிகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்றாலும் நினைவின் நிழலை அறிந்து சில தாந்திரீகவாதிகள் ஸ்யாக்குகளை கட்டுப்படுத்தினார்கள் என்பதை விட, மனிதர்களிடமிருந்து ஸ்யாக்குகளை சமாதிகளை மறைத்து நிற்கும் புட்புதர்களுக்கப்பால் மின்னலால் கிழிபடும் மேற்கு வானின் தூரம் வரை விரட்டு மட்டுமே

முடிந்தது. தாந்திரிகவாதிகள் ன்யாக்குகளைக் கண்டு மனிதர்கள் அஞ்சுவதையும் வெறுப்பதையும் உணர்த்த எறுக்கம் குச்சியால் அடித்து எரியும் அதன் கண்களில் சாம்பலை வீசி விரட்டினர். சாம்பலிலிருந்து மீண்டெழுந்த ன்யாக்குகள் தங்கள் மேல் மீண்டும் சாம்பல் படிவதை விரும்பாமல், எதுவுமற்ற தங்கள் பிரதேசங்களுக்கு விலகிப் போயின. நான் கிழவனிடம் ன்யாக்குகள் ஏன் மனிதர்களைப் பற்றிக் கொண்டு அலைகழிக்கிறதென்று கேட்டேன்.

கிழவன் அவனது சிறிய வாய் திறந்து பேச துவங்கினான். "ன்யாக்"குகளும் பழக்கத்திற்கும் நினைவுகளுக்கும் உட்பட்டதுதான். அலைகழிவதில்தான் ஆன்மா உருவம் கொள்கிறது. நினைவுகளிடமிருந்து தங்களை துண்டித்து கொள்ள உடனே முடிவதில்லை. பசியற்ற பிணியற்ற காலமற்ற உலகிற்குள் எதுவுமற்ற நிலையில் தங்களை இருத்திகொள்ள காலமற்ற காலத்தில் வாழ, சிறிது காலம் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே இருளுமில்லை ஒளியுமில்லை எங்கும் ஊதா வண்ணம் நிறைந்த அக்கூட்டிற்குள் போகாமல் தாம் நேசித்தவர்களை, விரும்பி அருந்திய பானங்களை, பிடித்தமான பொருட்களைப் பற்றி பீடித்துக்கொண்டு, நாம் நுகர்ந்த வாசனைகளை விடாதிருக்கின்றன. நான் அறிந்த "ன்யாக்" அது எப்போதும் அமர்ந்திருந்த நாற்காலியைப் பிடித்துக்கொண்டது. அது பீடித்துக் கொண்ட பின் யாரும் அந்நாற்காலியில் அமரவே முடியவில்லை. அதில் அமர்ந்தவர்களுக்கு எரிச்சல், நமச்சல், குடைச்சல் வந்துவிடும். பல காலம் அதன் மீது யாரும் அமர முடியாமல் முழுமையான பொருளாகவும் உயிர்பெற்ற தோற்றமாகவும் இருந்தது. சிறுவர்கள் மட்டுமே அதன் மீது ஏறி விளையாடி அதன் மர இணைப்புகளைக் குலைத்தார்கள். நொடித்து போனவர்களைப் போல் இற்று விழ இருந்தபோது தச்சனை அழைத்து வந்து இணைப்புகளை மராமத்து செய்து நாற்காலியினுள் ஐந்து ஆணிகளை செலுத்திய போதுதான் நாற்காலியை விட்டகன்றது அந்த "ன்யாக்". ஆவிகள் மனிதர்களை வாசனையால்தான் பற்றிக்கொள்கின்றன. ன்யாக் களிடமிருந்து மனிதர்கள் விடுபடவும் மனிதர்களிடமிருந்து ன்யாக்குகள் விடுபடவும் தாந்திரீகவாதிகளின் எறுக்கம் மிளார் அடியையும் சாம்பலால் தூஷிப்பதையும் விட, மறதி நினைவுகளை அழிப்பதுதான் மேன்மையான வழி என கிழவன் கூறினான்.

எனது பாதைக்கே திரும்பினேன், முடிவில்லாத ஒளியின் குறுக்கே பட்டத்தின் கருப்பு வாலாய் பறந்து கொண்டிருக்கும் தொலைவில் சப்தமற்ற என் தனிமைக்குள் சென்றேன். இடுகாட்டிலிருந்து நகரை நோக்கி வளைந்து நீண்டு வரும் கல்பாதை மீது குனிந்து நிமிர்ந்து, குனிந்து நிமிர்ந்து, குனிந்து நிமிர்ந்து தன் ஒளி ஊடுறுவும் கரங்களால் சேமித்து அவள் மார்பருகே இடக்கை வைத்து குவித்தபடி சேகரிக்கிறாள் குனிந்து நிமிர்ந்து...

அவள் ஒரு புதிய "ன்யாக்". புதைகுழியிலிருந்து இப்போதே அவள் எழுந்திருக்கிறாள். ஒளி ஊடுறுவும் அவள் ஆன்மாவில் சேறு படிந்திருக்கிறது. அவளுக்காக ன்யாக்காக மாறிவிட்ட அவளுக்காக அவள் சமூகத்தாராலும், சகோதரர்களாலும் முற்காலத்து பேய்கள் விரும்பும் எள்ளும் முனைமுறிந்த நெல்லும் வளைந்து வரும் கல்பாதை மீது விதைக்கப்பட்டிருக்கின்றன. பாறை மேல் விதைக்கப்பட்ட அறுவடை காணாத தான்யங்கள் அவை. எப்போதும் கர்ப்பமாக இருந்து கொண்டிருக்கும் பிரசவம் அறியாத பாறைகளைப் போன்ற தான்யங்கள். பேய்க்காற்று அவைகளைக் கலைக்க, அவள் தன் இல் திரும்பி போகமுடியாதபடி, திசைகளை குழப்பிப் பாதையை அழித்து பூமியெங்கும் சிதறி காணாமல் போய்விடும் அவளைப் பின் தொடர்ந்து ஆன்மாவின் நினைவுகளுக்கு முன் சென்று அவள் மரண தினத்தில் நிற்கிறேன்.

ஒற்றை காலில் நின்று தமிழும் ஊதுபத்தி மணமும் சாமந்திப் பூக்களின் வாசமும் சாவிற்கென தரும் வாசனையையும் மீறி அவள் சதையின் தீய்ந்த நாற்றமே அந்த நாளைச் சூழ்ந்திருந்தது. அவளுக்காக பேசாமல் பெற்றோர்கள் மௌனமாக இருந்த பின் அவள் சகோதரர்கள் அன்பின் பெயரால் கட்டாயப்படுத்தலையும், கட்டாயப்படுத்தலையே அன்பாகவும் அவளை நெறுக்கினார்கள்; ஆத்திரமுற்றவர்களாக அவளை நீ மணக்க முடியாது நீ நன்றாய் வாழ முடியாது என கத்தினார்கள். அவள் சகோதரர்களாலும் பெற்றோர்களாலும் என் யாராலும் கடவுள்களாலும் வழங்க முடியாத சொர்க்க நரகத்திற்கப்பாலான இன்பத்தை சாதாரண பாயின் மீது அவள் உடலிருந்தே எழுப்பி அவளுக்கு வழங்கியவன் அவனுடைய இவ்வுடலை அவனுக்குத் தருவேன் இல்லையெனில் தீக்குத்தருவேன் என மரணத்தை தீயை தழுவியவள்.

சூரியன் மலைகளுக்குப் பின்னால் சமாதிகளுக்கு மேலிருந்து ரெணங்களை அகற்றிக் கொண்டதும் தனக்கு விதிக்கப்பட்ட பாதையில் தான்யங்களை சேமித்தபடி கிளம்புகிறாள். அவள் வாழ்ந்த இல்லம் நோக்கி அவள் ஒரு நாளும் சென்று சேர முடியாது. கன்னி கழியாத பெண்ணின் உக்கிரம் குடும்ப அழிவிற்கும் சகோதர நாசத்திற்கும் காரணமாகும் என்பதால், அவர்களால் இறைக்கப்பட்ட தான்யங்கள் அவளை வழி மறித்தன.

க்ரஷர் பறவையின் வயிற்றுக்குள் அகப்பட்ட உணவுத்துண்டைப்போல் தான்யப் பறவைகளிடையே அவள் சிக்கிக்கொண்டாள். இனி அவள் ஆன்மாவின் நினைவழியும் காலம் வரை பேய்கள் சூறையிட்டு மகிழும் எள்ளும் நெல்லும் சேமித்தபடி தானெப்போதும் அடைய முடியா வீட்டை நோக்கி வருவாள். அவள் பொறுக்கி முடிப்பதற்குள் சூரியனின் இளங்கதிர்கள் ஒளி பரப்ப, அவள் கைகளில் குமித்து சேமித்த தான்யங்கள் அவளிடமிருந்து பிய்த்துக் கொண்டு போய் விதைத்த இடத்திலேயே சிதறி

விடுகின்றது. அந்தியில் மீண்டும் இதையே தொடர்வான். விதைகள் மீதிக் காலத்தை நூல் நூற்றுக் கழிப்பதைப் போல் அவள் மேல் விதிக்கப்பட்ட சாபம் இனி இதுதான். அவள் ஆன்மாவின் வாழ்வும் இதுதான்.

பாறைகளாக உருமாறி வழி மறிக்கும் தான்யங்கள் இடுகாட்டுப் பாதையெங்கும் இருக்கும் வரை, அவள் ஆன்மாவுக்குச் சுதந்திரமென்பதில்லை. பாறைகளுக்கிடையே ஆன்மா உழல வேண்டியதுதான். கடந்த காலத்திலிருந்தும் நினைவுகளிலிருந்தும் தங்களை உதிர்த்துக் கொண்ட ன்யாக்குகளே வெட்ட வெளிக்குச் சாம்பல் நிறத்தை வழங்கி இன்ப துன்பங்களுக்கப்பால் சஞ்சரிக்கின்றன.

நான் அவள் ஆன்மாவைப் பாறைகளாக உருமாறி வழிமறிக்கும் தான்யங்களிடமிருந்து விடுவித்து விட முடிவெடுத்தேன்.

இருள் நிறம் போர்த்திய அண்டங் காக்கைகளும் கிளிகளும் மைனாக்களும் பிணந்தின்னிக் கழுகும் அப்பாதையைக் கடந்து செல்லும் யாதொரு பட்சியும் தான்யங்களைக் கொத்தவே இல்லை. பட்சிகளின் கண்களுக்கு தெரியவில்லையா, பட்சிகள் அத்தீய தான்யங்களை உண்ண விரும்பவில்லையா என - நானறியேன்.

தீவனக்கடையில் வாங்கிய நெல்லையும் எள்ளையும் வெள்ளை புறா வில்ஸனின் புறாக்கொட்டகைக்கு எடுத்து சென்று புறாக்களுக்கு இரைத்தேன். கூட்டமாக சாவு வீட்டின் ஒப்பாரியைப் போல முனகிக் கொண்டு கொத்தி கொத்தி இரையெடுத்தன. எனக்குள் உற்சாகமேற்பட தினமும் நெல்லும் எள்ளும் புறாக்களுக்கு இரைத்து வந்தேன். என் நண்பனின் அனுமதியோடு மூக்சகை, கல்பசறை, கோழி கொண்டை போன்ற ஜாதி புறாக்கள் பதின்மூன்றையும் சிறிய கூண்டிலடைத்து வில்ஸன் கொடுத்தனுப்பினான். நான் எனதறையில் சில நாள் வைத்திருக்கிறேன் என்று கூறி எடுத்து வைத்தேன்.

புறாக்களை கல்லூரி மைதானமொன்றிற்கு எடுத்துச் சென்று கூண்டைத்திறந்து வெளியேவிட்டு கருப்பு மஞ்சள் தான்யத்தை நீளவாக்கில் இரைத்தபடியே நடந்து செல்வேன், புறாக்கள் என்பின்னே தான்யங்களை கொத்தித்தின்றபடியே வரும். பல நாட்கள் புறாக்களுக்கு இதைப் பழக்கிய பின் தீவன மூடைச்சோடும் புறாக்கூண்டோடும் இடுகாடு நோக்கி கிளம்பினேன்.

என்னோடு எப்போதுமிருந்து வழிநடத்தும் "ன்யாக்" எனது செயலைத் தடுக்கும் விதத்தில் என்னை இடறிவிழச் செய்தது. மேலும் தனது சமிக்ஞைகளால் மறுப்பையும் எதிர்ப்பையும் காட்டியது. நான் முதன் முறையாக என்னை ஒப்புவித்துக் கொண்ட "ன்யாக்"கின்; சமிக்ஞைகளை எச்சரிக்கைகளை மறுத்தேன்.

பகல் முழுக்க ஆழ்த்தப்பட்ட வெயிலால் இலைகளும் செடிகளும் வாடித்துவண்டு நின்றன. அவள் புதை மேட்டுக்கருகில் கூண்டை என் தலையில் இருந்து இறக்கிப் புறாக்களை வெளியே விட்டேன். பின் கூண்டை என் தலையில் - சுமந்தபடி நான் எடுத்துச் சென்ற எள்ளையும் நெல்லையும் இறைப்பது போல் பாவனை செய்தபடியே சென்றேன் நீண்ட இடுகாட்டு கல்பாதையெங்கும் பிறபட்சிகளின் கண்களுக்கு அகப்படாத தான்யங்களை நான் இறைத்து செல்வதாக நினைத்து கொத்தி தின்றபடி என் பின்னால் வந்தன புறாக்கள்.

சூரியன் அஸ்தமிப்பதற்குள் இடுகாட்டுப் பாதை கடந்து நகரினுள் நுழைந்து என்னை பின் தொடர்ந்த புறாக்களோடு பாதையெங்கும் வழிமறித்த தான்யங்களை ஒன்று விடாமல் கொத்தி தின்றபடி அவள் வீடு வரை வந்துவிட்டோம். அவள் வீடெது என்பதை தான்யங்கள் புறாக்களுக்கும் - புறாக்கள் எனக்கும் காட்டின.

அவள் வீட்டு வாயிற்படியின் மாக்கோலத்தில் சிதறி இருந்த கடைசி பாறையையும் கல்பசறை அண்ணாந்து விழுங்கியவுடன் சூரியன் அஸ்தமித்தான்.

மெல்லிய விசிலொலியில் புறாக்களை அழைத்துக் கூண்டிலடைத்து கூண்டோடு புறாக்களை வில்ஸனிடம் ஒப்படைத்தேன். வில்ஸன் அதற்குள் புறாக்கள் உனக்கு சலித்துவிட்டதா எனக்கேட்டான். ஆமாம். ஆனால், எனது தனிமையைப் போக்க அல்லது எனக்கு தேவையானபோது புறாக்களை எடுத்துச் செல்கிறேன் எனக்கூறி விடைபெற்றேன்.

இனி அவள் ஆன்மாவின் முன்னால் பாதை இல்லை, திசை இல்லை. பூமி மீது விதைக்கப்பட்ட அறுவடையற்ற சாபத்தை போன்ற தான்ய பாறைகளை அவள் உருட்ட தேவையில்லை. நினைவுகளும் அவளை விட்டகலும் காற்றை போல் திசையின்றி சுழலலாம். மீதமுள்ள அவள் ஆன்மாவின் ஆற்றல் அழியும் வரை அவளுக்கு விதிக்கப்பட்ட விதியை எனது குயுக்தியால் கச்சிதமாக வென்ற நிம்மதியுடன் அன்றிரவின் உறக்கத்தினுள் சென்றேன்.

காலை வேளையில் வழக்கம் போல் வில்ஸன் என் வீட்டிற்கு வந்து என்னை அழைத்து கொண்டு அவனது புறா கொட்டகைக்கு இருவரும் சென்றோம் தன்மையாக வீசிய தென்றலில் நான் எடுத்துச் சென்ற பதின்மூன்று புறாக்களும் வயிறு கிழிந்து கொட்டகையெங்கும் சிதறி இறந்து கிடந்தன.

புறாக்களின் கிழிந்த வயிற்றுக்குள் ஒரே ஒரு தான்யம் கூட இல்லவே இல்லை. ◆

இந்தியத் தலைநகரிலிருந்து உலகத் தமிழர்களுக்கு...

வடக்கு வாசல்

மாத இதழ்

இதழ் - 3

நேர்காணல்:

ஏ. ஆர். ராஜாமணி

சிறுகதைகள்:

சுந்தர ராமசாமி, இரா. முருகன்,
பத்ரிநாத்

கவிதைகள்:

விக்ரமாதித்யன் நம்பி (புட்டா), கொப்பர முழுங்கி,
சரவணன் 1978

கட்டுரைகள்:

பி.ஏ. கிருஷ்ணன், யதார்த்தா கி.பென்னேஸ்வரன்,
கோபாலகிருஷ்ணன் விஜயராகவன்,
வி. செல்வராஜன்

இதழ்-2

சிறுகதைகள்:

எஸ். ராமகிருஷ்ணன், பாவண்ணன், சொக்கன்

கவிதைகள்:

சுகுமாரன், பொன்.வாசுதேவன்,
சூர்யா சுரேஷ், அகஸ்டஸ், [illegible], மூர்க்கன்,
கலாப்ரியா

கட்டுரை:

பி. ஏ. கிருஷ்ணன்

நேர்காணல்:

எஸ். ராமாமிருதம்

தனி இதழ் ரூ.10
ஆண்டுச் சந்தா ரூ.100
ஈராண்டுச் சந்தா ரூ.180
ஆயுள் சந்தா ரூ.2500

Vadakku Vaasal Publications
5210 Basant Road, Near Karnail Singh Stadium
Paharganj, New Delhi - 110 055
Phones: 011-55937606, 09313302077
e-mail:vadakkuvaasal@gmail.com

இரண்டு சைக்கிள்கள்

எஸ். செந்தில்குமார்

Thomas Brill

7வது பகுதி பெண் பாடசாலையிலிருந்து வீடு திரும்பும் பிள்ளைகளில் முதல் பிள்ளையாக ஓடி வந்தாள் முத்துலெட்சுமி. நீலநிறத்தில் பாவாடையும் வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்த பிள்ளைகள் எல்லோரும் ஒரே மாதிரியாக இருந்தார்கள். மற்ற பிள்ளைகளை விட தினந்தோறும் தலைநிறையப் பூக்களை வைத்துக்கொண்டு வருபவளாக இருந்தாள் முத்துலெட்சுமி. அவளுக்கு பள்ளிக் கூடத்தில் பாடம் படிப்பதைவிடப் பூக்கள் கட்டிப்பழக வேண்டுமென்றே விருப்பமாக இருந்தது. முத்துவின் அம்மாவும் அப்பாவும் பூக்கள் கட்டி விற்று வந்தார்கள். முத்துவின் அப்பா 'தொந்தி' தான் வைத்திருந்த சைக்கிளின் பின் கேரியரில் பெரிய கூடையைக் கட்டி பூ விற்கப் போவார். முத்துவிற்கு பூ விற்றுத் திரும்பும் போது எள்ளுருண்டைகளும் அதிரசமும் வாங்கிக்கொண்டு வருவார்.

பூக்காரத் தெருவுக்குள் முத்துலெட்சுமியைப் போலவே இரண்டு மூன்று பிள்ளைகள் பள்ளிக்கூடம் விட்டு வீடு சேர்ந்தனர். விசாலாட்சி தான் மடக்கிக் கட்டியிருந்த இரட்டை ஜடையை ஆட்டிக்கொண்டே வீட்டுக்குப் போனாள். விசாலாட்சியின் வீட்டில் மரிக்கொழுந்தும் சம்பங்கியும் தரை நிறைய சிதறிக்கிடந்தன. வீடு முழுக்க மரிக்கொழுந்தின் வாசம். அவள் ஒற்றை இனுக்கு மரிக்கொழுந்தினை எடுத்து கணக்கு நோட்டில் வைத்துக்கொண்டாள். சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் விளையாடுவதற்கு நிறைய விளையாட்டுகள் இருந்தது போலவே எழுதுவதற்கு நிறைய வீட்டுப்பாடங்களும் இருந்தன. வீட்டுப்பாடங்கள் தரும் டீச்சரை அவர்கள் திட்டியபடி போன வாரத்தைப்போல இந்த வாரமும் எழுதி முடிப்பார்கள்.

முத்துலெட்சுமி வீட்டில் சாக்குப்பை மீது சாமி படத்துப் பூக்களை பந்து பந்தாக உருட்டி வைத்திருந்தார்கள். முத்துலெட்சுமி வீட்டிற்குள் நுழைந்ததும் முதலில் மாடக்குழிக்குக் கீழே அவள் புத்தகப் பைக்கட்டை வைத்துவிட்டு கோவிலுக்குப் போவோம் என்று நினைத்தாள். அதற்குக் கொஞ்சம் தள்ளி அவளின் அண்ணன் ஏற்கனவே பைக்கட்டை வைத்துவிட்டு கோவிலுக்குப் போயிருந்தான். அன்று வெள்ளிக்கிழமை கோவிலுக்குச் சென்று பூ விற்க வேண்டும். அவனால் ஓட்ட முடியாத தொந்திகணேசன் என்று எழுதியிருந்த பெரிய சைக்கிளை .அவனின் அப்பா ஓட்டிக் கொண்டு பூ விற்க போய்விட்டார். அண்ணனைப் போலவும், அப்பாவைப் போலவும் பூ விற்கப் போக வேண்டுமென்ற ஆசை முத்துவிற்கு இருந்தது.

பூக்கார வீட்டுப் பிள்ளைகளுக்கு தலையில் வைப்பதற்கு நிறைய பூக்கள் கிடைத்தன. மலர்ந்த பூக்களையே அவர்கள் சூடிக்கொள்வதற்கு விரும்பினார்கள். நாளைக்கு என்று பூவை பத்திரப்படுத்தாமல் இருந்தார்கள். விசாலாட்சிக்கும், முத்துலெட்சுமிக்கும் மல்லிகைப் பூக்கள் பிடிக்கும். மல்லிகைப் பூக்கள் பூக்கும் காலம் பள்ளிக்கூடம் விடுமுறையாக இருந்தது. மார்ச் மாதத்திற்குப் பிறகு நிறைய பூக்கும் மல்லிகைப் பூக்களைத்தான் அவர்கள் கட்டிப் பழகினார்கள். முதலில் கட்டிப் பழகிய பூக்களை பூக்காரத் தெருவிலுள்ள வீடுகள் தோறும் காட்டிவிட்டு வந்தார்கள். பூக்காரத் தெரு வீட்டுப் பிள்ளைகளுக்கு உட்கார்ந்த இடத்திலேயே செய்யும் வேலை இருந்தது.

சுப்பிரமணியசாமி கோவில் வாசலில் பூ விற்றுக் கொண்டிருந்தான் செல்வம். அவனிடம் இன்னமும் இரண்டு பந்துகள் மட்டுமே மீதம் இருந்தன. விற்றவுடன் வீட்டிற்குச் சென்று படைத்துப் பூ கொண்டு வரவேண்டும். நீண்ட நேரமாக பூ வேண்டுமா, பூ வேண்டுமா என கோவிலுக்குப் போகிறவர்களைக் கேட்டுக்கொண்டேயிருந்தான். இவனுக்கு எதிரே சைக்கிளில் பூ விற்றுக் கொண்டிருந்தவனைப் போல

பூ வாங்கிக்க அக்கா, பூ வாங்கிக்கிங்க அக்கா என்று பூ விற்கத் தெரியவில்லை. செல்வத்திற்கு அரை வண்டி சைக்கிள் ஓட்டத் தெரியும். அரைவண்டி சைக்கிளை வாடகைக்குத் தான் எடுக்க முடியும். செல்வத்தின் அப்பா எப்போதாவது தான் அரைவண்டி சைக்கிளை எடுத்துத் தருவார். டுவின்ஸ் சைக்கிள் கடை கடையிலுள்ள சிவப்பு சைக்கிள் ஓட்ட ஓட்ட காற்றாக இருக்கும். செல்வத்தின் அப்பா வைத்திருக்கும் பெரிய சைக்கிளை அவளால் ஓட்ட முடியாது. அவன் விரைவில் பெரிய சைக்கிளை ஓட்டிப் பழகிவிட வேண்டுமென நினைத்தான்.

தனக்கு எதிரே பூ விற்றுக் கொண்டிருக்கிற சோலையைப் போல சைக்கிளை ஓட்டிக் கொண்டு பூ விற்கப் போக வேண்டுமென ஆசைப்பட்டான். சோலை தன் தங்கை விசாலாட்சியை சைக்கிளில் உட்கார வைத்து 7வது பகுதி பெண் பாடசாலைக்குக் கூட்டிக்கொண்டு போவான். சோலையின் சைக்கிள் காற்று போலப் பறக்குமென பூக்காரத் தெருவிலுள்ள செல்வத்தின் சிநேகிதர்கள் சொல்வார்கள். செல்வத்தின் அப்பா வைத்திருக்கும் சைக்கிளை அவர்கள் லொடக்கு வண்டி என்று அழைத்தார்கள். தனது அப்பா வைத்திருக்கும் சைக்கிளை லொடக்கு வண்டி என்று பெயர் வைத்திருந்தது அவனுக்குத் தெரியும். லொடக்கு வண்டியில் எவ்வளவு வேகமாகப் போக முடியுமோ அவ்வளவு வேகமாக போனாலும் சோலையின் சைக்கிள் காற்று போல முந்திக் கொண்டும் போய் விடுமெனப் பேசிக்கொள்வார்கள்.

இரண்டு மணிக்கு வருகின்ற ரயிலில் வெளியூரிலிருந்து பூக்கள் கடை கடையாக வந்திறங்கும் தினந்தோறும் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து பூக்களை ஏலம் போட்டு வாங்கிக் கொண்டு வர பூக்காரத் தெருவிலிருந்து போவார்கள். சைக்கிள் இல்லாதவர்கள் நடந்து கொண்டு போகும் போது தான் தங்களிடம் சைக்கிள் இல்லாததை நினைத்து வருத்தம் கொள்வார்கள். பூ வாங்கித் திரும்பும் போதும் பூ வாங்கப் போகும் போதும் சோலையின் சைக்கிள் காற்று போல வந்து காற்று போலப் போகும். செல்வம் நினைத்த ஒன்றுகூட நடக்காது என்று அவனுக்குத் தெரியும். எதாவது ஒன்று நினைத்தது நடந்துவிட்டால் தான் நினைப்பது எல்லாம் உடனே நடந்துவிடும் என முத்துலெட்சுமி சொல்வாள்.

செல்வம் தன்னிடம் சைக்கிள் இருந்தால் காற்றுப்போல பறக்கும் சைக்கிளை விட வேகமாகப் போய் வீட்டிலுள்ள படத்துப் பூ பந்துகளை எடுத்துக் கொண்டு வந்து விற்று விடலாமென நினைத்தான். புருஷனும் பொண்டாட்டியுமாக வந்த இரண்டு பேர் செல்வத்திடம் ஒரு படத்திற்கு பூ பந்து வாங்கிக்கொண்டார்கள். அவர்களுக்கு மீதி சில்லறை தரும் போதெல்லாம் சீக்கிரம் வீட்டிற்குப் போய் பந்துப் பூக்களை எடுத்துக் கொண்டு வர வேண்டுமென்று பதறினான். அவன் பதற்றத்தைப்

புரிந்தவனாகத்தான் சோலை நின்றிருந்தான். செல்வத்திடம் பூ தீர்ந்ததும் தன்னிடம் உள்ள கதம்பப் பூக்களைத்தான் கோவிலுக்குச் செல்லுபவர்கள் வாங்க வேண்டுமென்றும் தான் அப்போது கிராக்கியாக விற்கலாம் என யாரையும் பூ வாங்க கூப்பிடாமல் நின்றிருந்தான்.

சோலை நினைத்தது போலவே செல்வத்திடம் பூக்கள் தீர்ந்து விட்டன. வீட்டிலிருந்த பூக்களை எடுத்து வர வெறும் கூடையை கையில் பிடித்தபடி முதலில் நடந்தான். பிறகு ஓடினான். டவுசர் பாக்கெட்டிலிருந்த சில்லறை காசுகள் குலுங்கி சப்தமெழுப்பின. சில்லறை காசுகளை பிடித்தபடி ஓட அவனால் முடியவில்லை. வேகமாக நடந்தான். தான் எப்படியாவது பெரிய சைக்கிள் ஓட்டப் பழகிக்கொள்ள வேண்டுமென்றும் இந்த ஞாயிற்றுக்கிழமையில் அப்பாவுக்குத் தெரியாமல் பெரிய சைக்கிளை எடுத்து விட வேண்டுமென நினைத்தபடி நடந்தான். அவனால் வேகமாக நடக்க முடியவில்லை. கோவிலிலிருந்து மீன் மார்க்கெட்டைத் தாண்டிய போது மூச்சு வாங்கியது. பூ கூடையின் உயரத்தைவிட கொஞ்சம் தான் அவன் உயரமாக இருந்தான். டவுசர் பாக்கெட்டினை ஒரு கையிலும், கூடையை ஒரு கையிலுமாக அவன் பிடித்தபடி நடந்தான். தனக்கு பெரிய சைக்கிள் ஓட்டத் தெரிந்தால் பூ எடுக்க வீட்டிற்கு இப்படி நடக்க வேண்டியதில்லை என்று நினைத்தபடி வீட்டிற்குச் சென்றான். அவன் அம்மாவிடம் டவுசர் பாக்கெட்டிலிருந்த சில்லறைகளை எடுத்து தந்தான். செல்வத்தின் அம்மா சாக்குப் பையின் மேலிருந்த படத்துப் பூக்களை எண்ணி அவன் கொண்டு வந்திருந்த வெறும் கூடையில் படர்த்தினாள். அவளுக்குத் தன் மகன் சீக்கிரமாகவே பெரிய சைக்கிளை ஓட்டிப் பழக வேண்டுமென்று ஆசைதான்.

செல்வம் கூடையைத் தலையில் வைத்துக் கொண்டு நடந்தான். வாசலில் நின்று பார்த்தபடியே நின்றிருந்த தன் மகனையே கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். செல்வத்திற்கு கருப்பட்டி பணியாரத்தின் மேல் பிரியமிருந்தது. கருப்பட்டி பணியாரத்தை இந்த ஞாயிற்றுக் கிழமையாவது செய்து விட வேண்டுமென அவள் நினைத்தாள். செல்வம் பூ விற்று வர இரவு நேரமாகி விடுவதைப்போலத்தான் அவனது அப்பாவும் வர நேரமாகும். அவர்கள் இருவரும் வீடு வந்து சேர்ந்து விட்ட பின் முத்து தன் விளையாட்டை முடித்துக் கொண்டு வீடு சேர்வாள்.

இன்று இரவு எல்லோரும் சாப்பிட ரொட்டி சுட வேண்டுமென நினைத்தாள் கனகு. ரொட்டி செய்ய சின்ன வெங்காயமும் பச்சை மிளகாயும் வாங்கி வர வேண்டும். ராகியை திரித்து மாவாக்கி வைத்திருந்தாள். செல்வம் கொண்டு வந்த காசில் வெங்காயமும் பச்சை மிளகாயும் வாங்கி விடலாம். நாளை பூ வாங்க வேண்டும் கடன் சொல்லி வாங்கிய பூக்களுக்குப் பணம் தரவேண்டும். சனிக்கிழமை மல்லிகைப் பூ வந்துவிடும். ரயில்வே ஸ்டேஷனில் வாங்குவதற்குக் கூட்டம் கூடும்.

பூக்காரர்களைத் தவிர வேறு ஆட்களும் பூ வாங்க வருவார்கள். கனகு சில்லறைகளை எண்ணியபடி உட்கார்ந்திருந்தாள். தெருவில் பிள்ளைகளின் விளையாட்டு சத்தம் கூடிவிட்டது. தெரு விளக்குகள் போடும் நேரம் வந்துவிட்டது. ஒரு குடம் தண்ணீ ஊற்றி ஒரு பூ பூத்தது. இரண்டு குடம் தண்ணீர் ஊற்றி இரண்டு பூ பூத்தது. பூக்காரத் தெருவில் விளையாடும் பிள்ளைகளுக்கு பூக்களை வைத்துத்தான் அதிக விளையாட்டுகள் தெரியும். பூ விற்று வரும் பெரியவர்களின் நிம்மதி ஒரு பூவைப்போல உதிர்ந்தபடி இருப்பதையும் கஷ்டங்களும் துயரங்களும் பூத்தபடி இருப்பதையும் உணராமல் இல்லை யாரும் தினந்தோறும்.

கனகு வீட்டிற்குள் மண்ணெண்ணெய் விளக்கைப் பொருத்திய போது வெளியே சைக்கிள் சத்தம் கேட்டது. தொந்தி கணேசன் வாசலில் நின்று முத்து லெட்சுமியை சத்தம் போட்டு அழைத்தபடி இருந்தார். கனகுவுக்கு தூரத்துப் பார்வை, மங்கித் தெரிந்தது. இருட்டான வேளை அவள் குரல்களைக் கேட்டபடி நடமாடினாள். தொந்தி சைக்கிளை நிறுத்தும் சத்தத்தை அவள் ஞாபகமாக வைத்திருந்தாள்.

முத்துலெட்சுமி அப்பாவிடம் ப்ரியமாக இருந்தாள். தன்னை எல்லோரிடமும் அப்பா பிள்ளை என்று சொல்லி வந்தாள். அப்பா இன்று தனக்கு என்ன வாங்கிக்கொண்டு வந்திருப்பார் என்ற ஆர்வத்துடன் தொந்தியின் அருகே நிற்பாள். அப்பாவின் பின்னாலேயே முத்து வீட்டுக்குப் போனாள். கடையிலிருந்து ஈரத்துணியை விலக்கினார் தொந்தி. முருகாம்பாள் கடையில் வாங்கிய அல்வாவும், மிச்சரும் இரண்டு பொட்டலங்கள் கிடந்தது. முத்துவிற்கும் செல்வத்திற்கும் ஒரு வாரமாக அல்வா வாங்கித் தருகிறேன், வாங்கித் தருகிறேன் என்று ஏமாற்றிக் கொண்டிருந்தவர் அன்று தான் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொண்டு வர முடிந்திருக்கிறது. முத்து அம்மாவின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். அம்மா இப்போதைக்குப் பிரித்து தரமாட்டாள் என்று அவளுக்குத் தெரியும். செல்வத்தின் மேல்தான் அவளுக்குப் பிரியம் அதிகம். தன்னை அம்மா எப்போதும் திட்டிக்கொண்டிருக்கிறாள் என்று தனக்குப் பிரியமான அப்பாவிடம் தினந்தோறும் இரவுகளில் புகார் செய்து கொண்டே இருக்கிறாள். அவள் நினைத்தது போலவே அம்மா செல்வம் வந்தபிறகு சாப்பிடலாம் என பொட்டலங்களை எடுத்து பத்திரப்படுத்திவிட்டாள்.

முத்துலெட்சுமிக்கு கோபம் கோபமாக வந்தது. அவள் யாருடனும் பேசவில்லை. அப்பா எப்போதும் போல் அதிரசமும் எள்ளுருண்டைகளும் வாங்கி வந்தால் என்ன என்று அவளாக பேசிக்கொண்டு இருந்தாள். செல்வம் வருவதற்கு தாமதமானபடியே இருந்தது. செல்வம் ஏன் வருவதற்கு தாமதமாகின்றது என்று தெரியவில்லை. தொந்தி கணேசன் முகம் கழுவிவிட்டார். தெரு கடைசியில் இருக்கும் பிள்ளையார் கோவிலுக்கு தினமும் இரவில் செல்வார். எப்போது திரும்புகிறார் என்பது

பிள்ளைகளுக்குத் தெரியாது. கனகு வாசல் கதவை மூடியும், மூடாமலும் திறந்து வைத்தே படுத்திருப்பாள். அவர் பிள்ளையார் கோவிலுக்கு போவதற்கு முன் கொஞ்சம் அல்வாவும் மிக்சரும் தின்றுவிட்டுப் போய்விட வேண்டுமென நினைத்தார். அவருக்கு வாடிக்கையாக பூ வாங்கும் வீட்டில் இரண்டு பெரிய மாலையும் ஆயிரம் மல்லிகைப் பூவும் ஆயிரம் கனகாம்பரமும் வேண்டுமென அட்வான்ஸ் தந்திருந்தார்கள்.

செல்வத்தைப் போலவே தானும் பள்ளிக்கூடம் விட்டு ஒருநாள் தாமதமாக வந்து மூன்று பேரையும் காத்திருக்கச் செய்ய வேண்டுமென நினைத்தாள் முத்துலெட்சுமி. அவளை வாசலிலிருந்து விளையாட அழைத்தபடி இருந்தாள் விசாலாட்சி. விசாலாட்சிக்கு அல்வாவின் வாசனைத் தெரியும். அவள் எப்படியோ அல்வாவின் வாசனையைக் கண்டுபிடித்துவிட்டாள். தான் இங்கேயே இருந்தால் தனக்கும் அல்வா தருவார்கள் என காத்திருந்தாள்.

சோலை தான் முதலில் சைக்கிளில் தெருவுக்குள் வந்தான். அவன் ஒவ்வொரு வீட்டையும் கடக்கும் போது மணி அடிப்பான். சோலை வந்துவிட்டால் பூக்காரத் தெருவிலுள்ளவர்களுக்கு சந்தோசம் வந்துவிடும். சோலை யாரையும் ஸ்நேகிதம் கொள்ளாமல் தான் இருந்தான். ஆனால் அவனிடம் ஸ்நேகிதம் கொள்ள அவன் வயதினர் விரும்பினார்கள். அவன் சைக்கிளை ஒரு முறை ஓட்டிவிட வேண்டுமென்று சைக்கிள் ஓட்டத் தெரிந்த எல்லோருக்கும் ஆசை இருந்தது. அவனது சைக்கிளில் பின் சக்கரத்திலும் முன் சக்கரத்திலும் பிளாஸ்டிக் பாசிகளை மாட்டி வைத்திருந்தான். இரண்டு கண்ணாடிகள் பொறுத்தியிருந்தான். இடது பக்கம் மாட்டியுள்ள மணி தொடர்ந்து அடிப்பது போலவும் வலது பக்கம் மாட்டியுள்ள மணி அவ்வப்போது அடிப்பது போலவும் வைத்திருந்தான். ரிக்ஷா டயர் மாட்டி மேலும் சில பிட்டிங்ஸ் செய்ய வேண்டுமென திட்டமிட்டிருந்தான்.

சோலை தெருவுக்குள் நுழைந்ததும் வாசலில் கோலமிட்டுக் கொண்டிருந்தவர்கள் எழுந்து கொள்வார்கள். சோலை சிலருக்கு மகனாகவும் சிலருக்கு மருமகனாகவும் தெரு நெடுக உறவு முறையாக இருந்தான். மகனே பார்த்துப்போப்பா மருமகனே பார்த்துத் தம்பி என்று ஒவ்வொரு வீட்டையும் கடக்கும் போது சொல்வார்கள். யாருடைய சொல்லையும் அவன் கேட்டுக்கொள்வதாக காட்டிக்கொள்வதேயில்லை. ஒரு காற்றைப் போல எல்லோரையும் கடந்து விடுவான்.

அவன் வீட்டிற்குச் சென்று சைக்கிளை நிறுத்தி வைத்த பிறகு தான் மூச்சு வாங்க நடந்து வந்தான் செல்வம். வாசலில் உட்கார்ந்திருந்த அப்பாவும் மகளும் அவனைப் பார்த்தபடி இருந்தார்கள். தொந்தி கணேசனுக்கு

செல்வத்தின் ஆசை என்னவென்று தெரியும். எப்போது புதிய சைக்கிள் கிடைக்கும் என்று எதிர்பார்த்தபடி தன் மகன் இருப்பான் என நினைத்து கொண்டார்.

செல்வத்திற்கு அல்வாவை சாப்பிடவே விருப்பம் இல்லை. இன்றுதான் எவ்வளவு வேகமாக நடந்தும் சோலை தன்னை முந்திக்கொண்டு சைக்கிளில் சென்றதை நினைத்துக் கொண்டேதான் நின்றான். செல்வம் அல்வாவை சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்த கனகு தன் மகன் கொஞ்ச நாட்களாக யாருடனும் பேசாமல் அமைதியாக இருப்பதை நினைத்து பயந்து ஞாயிற்றுக்கிழமை மந்திரித்து தாயத்துக் கட்டிவிட முடிவு செய்தவளாக இருந்தாள்.

சோலையின் சைக்கிளை யாருக்கும் தெரியாது பஞ்சராக்கி விட வேண்டுமென முடிவு செய்தான் செல்வம். செல்வத்தின் நெருங்கிய நண்பர்களுடன் இரண்டு மூன்று நாட்களாக திட்டமிட்டுக் கொண்டிருந்தான். அதற்கான நேரம் இன்னமும் வாய்க்கவே இல்லை. செல்வமும் அவனது நண்பர்களும் சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தனர். செல்வத்தின் நண்பர்கள் சோலையின் வீட்டைத் தாண்டிப் போவதும் திரும்புவதுமாக இருந்தனர். கோழிகாலனை சோலையின் வீட்டின் முன்னாலேயே அமர்ந்து படிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். சோலையின் எதிர்வீடுதான் கோழிகாலனின் வீடு. சோலை வீட்டை விட்டு ரொம்ப நேரம் கழித்து வருவதுபோல எங்காவது சென்றால் எல்லோரும் விளையாடுவதுபோல சைக்கிளின் அருகே சென்று ஊசியால் குத்தி விடுவது என்று திட்டமிட்டிருந்தார்கள். இதை தெரிந்து தான் சோலை தன் சைக்கிளுக்கு ரிக்ஷா டயர் போட்டுவிடுவது என்ற யோசனையை வைத்திருந்தான் .தனது வீட்டின் வெளியில் சைக்கிள் நிறுத்தும் இடத்திற்கு அருகில் 'என் சைக்கிளை பஞ்சராக்குபவன் முட்டாள். அவன் கையில் ராத்திரியில் தேள் கொட்டிவிடும்' என எழுதி வைத்திருந்தான். எழுதி ஒட்டி வைத்திருந்த காகிதத்தைக் கோழிகாலன் கிழித்துவிட்டான். பிறகு இரண்டாவது முறையாக எழுதி ஒட்ட வைத்தான் சோலை. அதே வரியோடு இதைக் கிழித்துப் போடுபவனும் முட்டாள் அவனையும் தேள் கொட்டும் என சேர்த்து எழுதினான். கோழிகாலன் இம்முறை காகிதத்தைக் கிழிக்காமல் காகிதத்தின் கீழே கரித்துண்டால் பஞ்சராகும் சைக்கிளை வைத்திருப்பவன் முட்டாள் என எழுதினான்.

நண்பர்கள் எல்லோரும் கூடிவிட்டார்கள் என்பதை செல்வத்திற்கு தெரிவிப்பதற்காக ஒரு சத்தம் வைத்திருந்தார்கள். விசில் சத்தத்தை தொடர்ந்து இரண்டு முறை உபயோகப்படுத்தியும் செல்வம் வராதது அவனது நண்பர்களுக்கு வருத்தமாக இருந்தது. கனகு தனது மகனையே பார்த்துக்கொண்டிருந்தாள். கனகுவிற்கு அந்த விசில் சத்தம் ரகசியம் கொஞ்சம் தெரியும். தன் மகனின் நண்பர்களின் பேச்சுக்களையும்

நடவடிக்கைகளையும் அவர்கள் அறியாது நோட்டமிட்டபடியே பார்த்து வந்தாள். இன்று எதற்காக செல்வத்தை அழைக்கிறார்கள் என அவளுக்குத் தெரியும். தன் மகன் வீணாகக் கெட்டுப்போவதை விரும்பாதவளாயிருந்தாலும் இந்த வயதில் விளையாடித் திரியட்டுமென அவனை அனுமதித்தவளாகயிருந்தாள். செல்வத்திடம் அவன் பூ விற்கப்போனதிலிருந்து ஆறு மணிக்கு மேல் பூ விற்கக்கூடாது என்றும் லைட் போட்டதும் வீட்டிற்கு வந்து விட வேண்டுமென சொல்ல வேண்டுமென நினைத்தாள். ஏன் என்று கேட்டால் தான் சிறு வயதில் பூ விற்றபோது தனக்கு சொன்ன கதையை சொல்ல வேண்டுமென கதையை ஞாபகப்படுத்திக் கொண்டாள். தன் மகனின் வயதின்போது தனக்கு கிழவி சொன்ன கதையை செல்வத்திற்கு சொல்ல ஆசைப்பட்டாள் கனகு.

சோலையூரும் சம்பங்கியூரும் அருகருகே அமைந்து உள்ள சின்ன ஜமீன்கள். சம்பங்கி ஊரில் நிறைய பூக்கள் எங்கும் பூத்தபடி இருந்தது. சோலையூரில் ஒரு பூ கூட பூத்தபாடில்லை. பூக்காத சோலை, வாசமறியா காவலன், பூ தொடுக்க முடியா மங்கை என புலவர்கள் பாடி சோலையூரை கடந்து போனார்கள். ராஜாவோ தனது ஊரில் பூக்கள் பூக்காத ரகசியத்தை அறிய ஒற்றர்களை ஏவியபடி இருந்தான். பூக்கள் பூக்காதது ஒற்றர்களால் அறியப்படாத ரகசியமாகவே இருந்தது.

முடிவில் ராஜாவே பரதேசி வேடமிட்டு சோலையூரைச் சுற்றினான். இரவும் பகலுமாக அவன் ரகசியம் அறியும் பொருட்டு அலைந்து திரிந்தான். அவன் ஏதும் அறியாதபடியே நகர்ந்து சென்றன நாட்கள். சத்திரத்தில் உருட்டப்படும் தாயக்கட்டைகள் போல காலம் உருண்டபடியே இருந்தது. தன்னால் ஒன்றுமே அறிந்து கொள்ளப்பட முடியவில்லை என்ற கவலையுடன் தாசிகளின் தெருவில் அலைந்தான். சோலையூரில் தாசிகளுக்கு மட்டுமே சம்பங்கி நகரிலிருந்து பூக்கள் வந்து சேர்ந்தன. அதிகாலையில் பூத்ததும் கொய்து அனுப்பினால் சோலையூருக்கு வந்து சேர மாலை பொழுதாகிவிடும். தாசிகளின் தோழிகள் பூக்கள் வந்தவுடன் மாலைகளாகக் கட்டத்தொடங்கி விடுவார்கள். இரவு நேர வாடிக்கைக்கு தயாராகும் தாசிகளை சோலையூரின் புலவர்கள் மலர்ந்த மறுதினம் மலர்களை படுக்கைகளாக கொண்டவளே என பாடி பொன் பெற்றனர்.

தாசி தெருவிற்கு பரதேசியாகத் திரிந்த ராஜா நுழைந்தபோது மாலை நேரம் முடிந்திருந்தது. ராஜா யார் வீட்டிற்கும் செல்லப் பிரியப்படாதவனாக விளக்கின் அடியில் அமர்ந்தான். விளக்குத் தூணில் அவன் சாய்ந்தான். தாசி வீட்டுப் பணிப்பெண் ஒருத்தி விளக்குத் தூணில் புதிதாக அமர்ந்திருக்கும் பரதேசியை கண்டாள். பணிப்பெண் பரதேசியை அழைத்தாள். பரதேசி வேடமணிந்த ராஜா அவள் சிநேகமாக வரமறுத்தான். பணிப்பெண்ணோ 'உனக்கும் ஒரு பூ தருகிறேன் முகர்ந்தால் உன்

களைப்பு நீங்கி உறங்குவாய் என்றாள். பூவைத் தருவதாக சொன்னவளின் அருகாமையில் சென்றான். அவள் சொன்னது போல் இருளில் பூவை நுகர்ந்ததும் உறக்கம் வந்தவனாக நின்றான். இருளில் பூவின் நிறம் வடிவம் என எதும் அறிய முடியவில்லை. பூவை வர்ணங்கள் தீட்டிய சித்திரங்களில் மட்டுமே கண்டிருக்கிறான்.

பணிப்பெண்ணிடம் பூக்களைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமென பின் தொடர்ந்தவனாக பரதேசி அவ்வீட்டிற்குள் சென்றபோது விளக்குகளின் அடியில் கசிந்தபடியிருக்கும் நெய்யின் வாசனை வீட்டில் நிரம்பியிருந்தது. வெள்ளை நிறத் தூண்களில் வர்ணக் குழம்புகளால் எண்ணற்ற பூக்களை வரைந்திருந்தார்கள். அவன் பூக்களை பார்த்தபடியே நின்றிருந்தான். அந்த மயக்கத்திலும் தன் நாட்டிலும் எப்போது பூக்கள் பூக்கப் போகிறது என்று ஏங்கிக் கவலையுற்றான்.

தான் பத்திரப்படுத்தி வைத்திருந்த சிகப்புக்கல் வைத்த மோதிரத்தை அப்பெண்ணிடம் தந்து பூக்களைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென சொன்னான். பணிப்பெண்ணோ மோதிரத்தை வாங்கிக் கொண்டு சம்மங்கி ஊருக்கு செல்லும் பூ வாலிபர்களுடன் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தாள்.

சோலையூரிலிருந்து சம்மங்கி நகருக்கு இரவோடு இரவாகப் போய் சேர்ந்த மன்னன் அதிகாலை நித்ய கடன் காரியங்களை முடித்து நகருக்குள் நுழைந்தான். தன் நகரத்தைப் போலவே கடைகளும் வீடுகளும் வீதிகளின் இருபுறமும் அமைந்திருப்பதைப் பார்த்தபடி நடந்தான். சம்மங்கி நகரத்தின் குடிநீரையும் உணவுகளையும் ருசித்தான். தான் சோலையூரில் தான் இருந்தோமா அல்லது சம்மங்கி ஊருக்கு வந்துவிட்டோமா என்ற ஐயம் பரதேசிக்கு வந்தது. சோலையூரின் நீரைப்போலவேவும், உணவைப் போலவும் அவைகள் ருசித்தன எல்லாம் தனது நகரினைப் போலவிருந்தும் ஏன் அங்கு பூக்கள் பூக்கவில்லையென யோசித்தவனாக ஒரு வீட்டின் முன் விளையாடிக்கொண்டிருந்தப் பிள்ளைகளை பார்த்தபடி நின்றான்.

விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளில் ஒருவன் மண்ணை பிசைந்து வண்டி செய்தவனாக இருந்தான். அவனால் முழுமையாக உருளும் வண்டியொன்றை செய்ய முடியவில்லை. செய்ய முடியாத வண்டிக்கென வருந்தாமல் திரும்பத் திரும்ப செய்தபடியே இருந்தான். ராஜா அவனுக்கு ஏதேனும் உதவி செய்ய வேண்டுமென நினைத்து அவனுக்கு உதவினான். தான் பால்ய காலத்தில் செய்த வண்டிகளை நினைவு கூர்ந்தவனாக மண்ணைப் பிசைந்து செய்தான். மண்ணை பிசைந்து செய்யச் செய்ய ராஜாவுக்கு தன் பால்ய கால ஞாபகம் முழுதுமாக நினைவுக்கு வந்தது.

சிறுவயதில் தான் செய்து கொண்டிருந்த மண் வண்டி சரியாக

உருளவில்லையென மற்ற சிநேகிதர்கள் தன்னை கேலி செய்தது கூட ராஜாவுக்கு ஞாபகம் வந்தது. தான் உருட்டிக் கொண்டுப் போன மண் வண்டி நேராகச் செல்லாது கோணலாகப் போனதால் கோட்டி வண்டி என்று கேலி செய்ததால் கோபம் கொண்டு குதிரை வண்டி என்று எல்லோரும் புகழ்ந்து சிநேகிதனின் மண் வண்டியை யாருக்கும் தெரியாது தந்திரமாக ஒடித்துப் போட்டதையும் ஒடித்துப் போட்டதை யாரும் பார்த்திருக்கமாட்டார்கள் என்று நம்பியிருந்தபோது பார்த்ததாகச் சொல்லி விசாரிக்க வந்த பெரியவர்களால் பெருத்த அவமானமும் ஆத்திரமும் அடைந்து மூன்று நாட்களுக்கு மேலாக வீட்டை விட்டு வெளியேறாமல் குறுகிப் போயிருந்ததையும் இப்போதும் நினைவு கூர்ந்தபடியிருந்தான் ராஜா.

ஆத்திரம் அடங்கிய பின் விளையாட விரும்பி வெளியில் சென்றபோது கோட்டி வண்டி என்று சிநேகிதர்கள் தன்னை அவமானப்படுத்தியதை உணர்ந்தான். உடனே ஆத்திரம் கூடி, கல்லை எடுத்து விளையாடிக் கொண்டிருந்தவர்கள் மேல் வீசத்தொடங்கினான். ரத்தங்களுடன் தங்கள் தங்கள் மண் வண்டிகளை விட்டுவிட்டு வீடுகளுக்கு ஓடிப்போயினர். ஓடிப்போனவர்களை விரட்டி விரட்டி குதிரை வண்டி செய்தவனைப் பிடித்து அடித்தபோது ஒரு அடி கூடுதலாக அவனது உடலில் விழுந்து சப்தம் எழுப்பக்கூட முடியாதபடி இறந்து போனான். அவனது சகோதரியோ இறந்த சகோதரனின் துக்கத்தால் ஊரையும் மண்ணையும் சபித்தபடி குளத்தில் வீழ்ந்து மடிந்தாள். பால்ய வயதைக் கடக்கும் நிலையிலிருந்து இழந்த பெற்றோர்கள் வேறு வழியின்றி ஊரைவிட்டு வெளியேறினார்கள். அவளின் பிரேதத்தை மீட்டுக் கொண்டு வரும்போது அவளது இரண்டு கைகளிலும் இரண்டு விதமான பூக்கள் இருந்தன.

மண் உருண்டைகளை வண்டியாக செய்து முடித்திருந்த ராஜாவுக்கு இறந்து போனவளின் சாபமே தனது ஊரில் பூக்கள் பூக்காததற்கு காரணமென்ற ரகசியம் அறிந்தவனாக சோலையூருக்குத் திரும்பினான். சோலையூரில் அப்பெண் விழுந்து இறந்து போன குளம் இருந்தது. ராஜா பரதேசியாகவே குளத்தின் அருகே அமர்ந்தான். குளத்தின் கரை தொடுமளவுவரை நீர் ததும்பியபடி இருந்தது. நீரினை பார்த்தபடி இருந்த ராஜா எதையோ உணர்ந்தவனாக குளத்தினுள் குதித்தான்.

குளத்தினுள் குதித்த பரதேசியைத் தூக்கி வெளியே கொண்டு வந்தபோது தான் ஜனங்கள் ராஜா என்பதை அறிந்தனர். ராஜா தனித்த அறையில் நினைவு திரும்புவதற்கும், ஓய்வுக்காகவும் படுக்கையில் கிடத்தியிருந்தனர். யாருடனோ பேசுவது போன்ற முகபாவத்துடன் படுத்திருந்த ராஜா இன்னமும் மயங்கிய நிலையிலேயேதான் இருந்தான்.

தெளிந்த முகத்துடன் எழுந்து அமர்ந்தபோது முதலில் அவன் தன்முன்

அமர்ந்திருந்தவர்களிடம் சொன்ன வார்த்தை 'இனி எங்கும் பூக்கள் பூக்கத் தொடங்கிவிடும்'. ராஜா சொல்லி முடித்தபோது நகரினுள் விளக்குகள் எரியத் தொடங்கியிருந்தன. விதைகளும் அதற்கான நிலங்களும் தயாராக இல்லாத நிலையில் எப்படி பூக்கத் தொடங்குமென ஜனங்கள் மனம் குழம்பியவர்களாக நகரினுள் பூக்கள் பூக்கப் போவதைப் பற்றி பேசியபடி இருந்தனர். ராஜா மிகுந்த நம்பிக்கை கொண்டவனாக படுக்கை அறையைவிட்டு எழுந்தான். மலை அடிவாரப்பகுதியில் சூரியோதயத்தின் போது பூக்கள் பூத்துவிடும் என்றும் அப்பூக்களை சூரிய அஸ்தமனத்திற்குள் கொய்து சூடிக்கொள்ள வேண்டும் என்றும், மீறி அஸ்தமனத்தைத் தாண்டி பூக்களை கொய்தால் அவர்களும் பூக்கள் பூக்கும் மரங்களாகி அடிவாரத்திலேயே தங்கிவிடுவர் என்று தான் நினைவுற்ற இருந்தவேளை இப்பெண் சொன்னது போல இருந்ததை யாரிடமும் சொல்லாமல் நகருக்குள்; மலைஅடிவாரத்திற்கு சென்று நாளை அதிகாலை முதல் பூக்கள் கொய்து கொள்ளலாம். விளக்கு எற்றிய பிறகோ, சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு பூக்களைக் கொய்யக்கூடாது. மீறினால் வரும் கேடிற்கு ஜமீன் பொறுப்பல்ல என தண்டோரா செய்யச் சொன்னான்.

வெயில் காலையிலேயே எறத்துவங்கிவிட்டது. சோலை வாசலில் நின்று பல் விளக்கி கொண்டிருந்தான். அவன் தனது சைக்கிளின் அருகிலேயே இருந்தான். நேற்று பள்ளிக்கூடம் விட்டதிலிருந்து செல்வமும் அவனது நண்பர்களும் தனது சைக்கிளை பஞ்சராக்கிவிட வேண்டுமென திட்டம் தீட்டிக் கொண்டிருந்ததை அறிந்து இருந்தான். ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று பூ வாங்க வேண்டுமென சோலையில் அப்பா சொல்லிவிட்டு வெளியே சென்றிருந்தார். அவர் வருதவற்குள் சோலை குளித்து தயாராக வேண்டுமென அவசரமாக இருந்தான். செல்வத்தினை நினைத்து பயந்தவனாக இருந்த சோலை கோழிகாலனோடு சேர்ந்து அடுத்து என்ன செய்ய போகிறான் என் பயந்தபடியே பல் துலக்கி முடித்தான்.

நேற்று போல இன்னும் சைக்கிளைப் பாதுகாப்போடு வைத்திருக்க வேண்டுமென நினைத்தான் சோலை. செல்வமும் கோழிகாலனும் இரவு முழுக்க சைக்கிளை பஞ்சராக்க எவ்வளவோ முயன்றும் முடியாமல் போனது. சைக்கிளைப் பஞ்சராக்க அவர்கள் அலைந்து கொண்டிருந்தது சோலைக்குத் தெரியும். அவன் சைக்கிளை எப்போதும் வீட்டின் மதில்மேல் அசையாமல் சாய்த்து வைப்பான். கோவிலிலிருந்து வந்ததும் கோழிகாலனின் விசில் சத்தம் அவனுக்கு கவலையைத் தந்தது. உடனேயே சைக்கிளைத் தூக்கி வாசலுக்கு எதிரே நிறுத்தி வைத்தான். வெளித் திண்ணையில் உட்கார்ந்து வீட்டுப் பாடம் எழுதுபவன் போல எழுதியபடியே அவர்களை கவனித்து வந்தான். செல்வமும் கோழிகாலனும் வேறு வழியின்றி விளையாடப்போன போது தான் சோலைக்கு நிம்மதி வந்தது.

செல்வத்திற்கும் அவன் மேல் கோபம் இருந்தது. தன்னால் பஞ்சராக்க முடியவில்லையே என வெட்கமுற்றவனாகவும் பழி தீர்க்க முடியாது போனதற்கு வருந்தியவனாகவுமாக இரவில் விளையாடினான். செல்வமும் அவனது நண்பர்களும் விளையாடுவதற்கு நிறைய விளையாட்டு வைத்திருந்தபோதிலும் இன்று எந்த ஒரு விளையாட்டையும் முழுமையாக விளையாட மனமில்லாதவர்களாக விளையாடத் துவங்கினர். பிறகு இரவானதும் அவரவர் வீடுகளுக்குத் திரும்பினார்கள். இனி யாரும் தெருவிற்கு வரமாட்டார்கள் என அறிந்த பிறகுதான் சோலை தூங்க ஆரம்பித்தான்.

பூக்கள் விற்ற பணம் சேமிக்க வேண்டும். சேமித்த பணத்தில் சைக்கிள் வாங்க வேண்டுமென ஆசையாக இருந்தான் செல்வம். அவன் யாருக்கும் தெரியாமல் பள்ளிக்கூடத்தில் சைக்கிள் படம் வரைந்து வைத்திருந்தான். அவன் வரைந்து வைத்திருந்த காகித சைக்கிள் படத்தில் செல்வம் பூ வியாபாரம் என எழுதினான். வரைந்த சைக்கிள் படம் முழு சைக்கிளா அரை சைக்கிளா என்று அவனுக்குத் தெரியாது. சைக்கிள் படத்தை நண்பர்களிடம் காட்டினான். கோழிகாலனுக்கு சைக்கிள் படம் பிடித்திருந்தது. அவனும் அதேபோல சைக்கிள் படம் வரைய வேண்டுமென நினைத்தான். அவனால் முடியவில்லை.

செல்வம் காலையில் எழுந்ததும் தான் வரைந்து வைத்திருந்த சைக்கிள் படத்தைத்தான் முதலில் பார்ப்பான். பிறகு பாடங்களைப் படிக்கத் துவங்குவான். அந்த படத்தைக் கண்டுபிடித்த அவனது சகோதரி அம்மாவிடம் காட்டிக்கொடுத்தாள். கனகு தன் மகன் வரைந்த சைக்கிள் படத்தைப் பார்த்தாள். ஒரு சைக்கிள் வாங்க எவ்வளவு பணம் வேண்டுமென அவனுக்குத் தெரியாது. பூக்காரத் தெருவைத் தாண்டி இருக்கிற மெயின் ரோட்டில் டுவின்ஸ் சைக்கிள் கடை இருந்தது. அந்தக் கடையில் தான் பூக்காரத் தெருவில் இருக்கிறவர்கள் தங்களிடம் உள்ள சைக்கிள்களை பழுது பார்ப்பார்கள். தொந்தி ஒருமுறை பஞ்சர் ஒட்டப்போன போது பழைய சைக்கிள் ஒன்று மலிவாக வாங்கிக் கொள்கிறேன் என கடைக்காரனிடம் சொல்லிவிட்டு வந்திருந்தார்.

செல்வம் வீட்டை விட்டு வெளியேறி கோழிகாலனின் வீட்டின் முன் நின்றான். இன்றாவது சோலையின் சைக்கிளை பஞ்சராக்கிவிட வேண்டுமென அவர்கள் இருவரும் பேசிக்கொண்டார்கள். ரயில் வருவதற்கு இன்னமும் நேரம் இருந்தது. ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று பூ வாங்க தயாராகியபடி இருந்தவர்கள் வெயில் காலையிலேயே ஏறிவிட்டதைப் பற்றி பேசியபடி இருந்தார்கள். பூ வாசனையோடு வரும் ரயிலைப் பார்க்க எல்லோருக்கும் ஆசைதான்.

சோலை தன் சைக்கிளைத் துடைத்து சுத்தம் செய்துகொண்டிருந்தான். அவனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. செல்வத்தின் அடுத்த

நிட்டம் என்ன என்று தெரியாமல் பயந்தபடி இருந்தான். சோலை சைக்கிளை விட்டுப்போகாமல் அதன் அருகிலேயே இருந்தான். சோலையைக் கவனித்து வந்த கோழிகாலன் எப்போது சைக்கிளை விட்டுப்போகிறான் என பார்த்தபடியே இருந்தான். சோலையைக் குளிக்கச் சொல்லி அவனது அம்மா தொந்தரவு செய்து கொண்டேயிருந்தாள். சோலையின் பயம் அவளுக்குத் தெரியாது. தான் இன்று ஒரு நாள் குளிக்காமல்கூட இருந்துவிடலாமா என யோசித்து அம்மாவிடம் சொன்னான். அவனது அம்மா வெந்நீரை என்ன செய்வது என்று திரும்ப அவனிடம் கேட்டு அதட்டி விட்டாள். அவன் அப்போதுதான் குளித்து முடித்திருந்தாள். சோலையின் அப்பா ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வந்த பிறகுதான் குளித்தாலும் குளிப்பார். சோலையின் அப்பாவும் ரயிலிலிருந்து பூக்களைக்கொண்டு வருபவனும் ரொம்ப நாட்கள் பழகியவர்கள். ஒன்றாக சாராயம் குடித்து சண்டையெல்லாம் போட்டிருப்பதாக சோலையின் அம்மாவிடம் சொல்லியிருக்கிறார் அவர்.

சோலை குளிப்பதென முடிவு செய்து அம்மாவைக் காவலுக்கு வைத்து விட்டுச் சென்றான். அவனது அம்மா எவ்வளவு நேரம்தான் சைக்கிளையே பார்த்துக் கொண்டிருப்பாள். சோற்றை வடித்துவிட்டு வந்திருக்கிறாள். கத்திரிக்காயைப் புளிக்காயாகப் போட்ட வடைச்சட்டியில் கொதிக்கிறது. நின்று நின்று பார்த்து யார் வந்து தூக்கிக்கொண்டுப் போகப் போகிறார்களென வீட்டிற்குள் போய்விட்டாள். கோழிகாலன் சரியான நேரம் கிடைத்துவிட்டதென சப்தம் எழுப்பாமல் வேலை செய்யத் துவங்கினான். செல்வத்தை அழைத்துக்கொண்டான். செல்வமும் அவர்களது நண்பர்களும் கூடி திடீரென ஒரு விளையாட்டை அப்போதே துவக்கினார்கள். ஒருவன் ஓடிப்போய் சைக்கிளின் அருகே விழுந்து விடுவதுபோல கிடப்பது மற்ற எல்லோரும் தூக்கிவிடுவதுபோல தூக்கிவிட்டுக் கொண்டிருக்கும்போது ஊசியால் சைக்கிளின் பின் சக்கரத்தில் குத்தி பஞ்சராக்கிவிடுவது என விளையாடத் துவங்கினார்கள்.

செல்வம் நினைத்தது போலவே சைக்கிள் பஞ்சராகிவிட்டது. யாராலும் கண்டுப்பிடிக்க முடியாதபடி காரியம் முடிந்ததும் எல்லோரும் அவரவர் வீட்டிற்குப்போய் ஒளிந்து கொண்டனர். பிறகு நீண்ட நேரம் கழித்து தான் வீட்டை விட்டு வெளியேறி வந்தார்கள். ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஏற்கனவே இரண்டு மூன்று பேர் பையும் சாக்குமாகப் போய்விட்டார்கள். தொந்திகணேசன் சைக்கிளில் கிளம்ப தயாராகிவிட்டார். சோலை வீட்டைவிட்டு இன்னமும் வெளியே வரவில்லையென செல்வமும் அவனது நண்பர்களும் நினைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் எல்லோரும் சோலையின் வீட்டின் பக்கமே பார்க்க பயந்தவர்களாக செல்வத்தின் முன் கூடியிருந்தனர். செல்வமும் கோழிகாலனும் மற்றவர்களுடன் ரயில்வே ஸ்டேஷனுக்கு நடந்தே போவதென பேசியபடி நடந்தார்கள். செல்வத்திற்கு ஆத்திரம் தீர்ந்து

விட்டது என்றாலும் பயந்து கொண்டுதான் இருந்தான். சோலை தன் வீட்டில் சொல்லி ஏதேனும் செய்துவிடுவானோ என்று பயம் செல்வத்திற்கு இருந்தது போலவேதான் மற்ற எல்லோருக்கும் இருந்தது. அவர்கள் எவ்வளவு வேகமாக நடந்தாலும் எப்போதும் ரயில்வே ஸ்டேஷனுக்கு தாமதமாகத்தான்போய் சேர்வார்கள். இந்த முறை அவர்கள் வேகமாக நடந்து சென்றுவிட்டனர். எல்லோருக்கும் பயமிருந்ததால் வழியில் தன்னை சோலை மறித்து அடித்துவிடுவான் என விரைவாகவே நடந்து ஸ்டேஷனுக்கு சென்றுவிட்டனர். ஸ்டேஷனின் முன்னிருந்த பெட்டிக்கடையில் சோலையின் அப்பாவும் செல்வத்தின் அப்பாவும் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். சோலையின் அப்பாவைப் பார்த்ததும் அவர்கள் பயந்தேவிட்டனர். சோலை தான் சைக்கிளைப் பஞ்சராக்கியதைக் கண்டுபிடித்து அப்பாவிடம் சொல்லுகிறான் என செல்வம் பெட்டிக்கடையை வேகமாகக் கடந்து போனான்.

ரயில் இன்னமும் வந்து சேரவில்லை. பூக்களை சுமந்துகொண்டு தாமதமாகத்தான் வரும் ரயில். தாமதமாக வரும் ரயிலுக்குத்தான் எல்லோரும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ரயில் பெட்டிகளில் பூக்கூடைகளைக் கொண்டு வருபவன் தூரத்தில் வரும்பொழுதே கைகாட்டி எல்லோரையும் பூ வாங்கத் தயார் படுத்திவிடுவான். கொஞ்சநேரம் நின்று அடுத்த ஊருக்கு புறப்பட்டுப்போகும் போது அவனும் ரயிலேறி போய்விடுவான் அவனுடன் எப்போதும் இரண்டு பெண்களும் இரண்டு ஆண்களும் வருவார்கள். ரயிலில் வரும் பூக்காரனுக்கு ரயில்வேஸ்டேஷன் முழுக்க ஆட்கள் பழக்கமிருந்தார்கள். அவன் சிரித்துப் பேசியதை யாரும் பார்த்ததில்லை.

சோலை அவனைப் போலத்தான் பெரிய வியாபாரியாக வர வேண்டுமென ரயில்வே ஸ்டேஷனில் காத்திருந்தான். அவன் தனது சைக்கிள் பஞ்சராகிப்போன கவலையோடு தொடர்ந்து தன்னை செல்வமும் அவனது நண்பர்களும் பயமுறுத்திக்கொண்டிருக்கும் கவலையும் அப்போது கூடிவிட்டது. அவர்களை என்ன செய்ய வேண்டுமென யோசித்தவனாக உட்கார்ந்திருந்தான். அவன் உட்கார்ந்திருந்த சிமிண்ட் தரையில் பூ வாங்க வந்தவர்கள் கட்டம் கட்டி தாயம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். தாயம் விளையாடுபவர்கள் எந்த ஆட்டமும் முழுதாக நடக்காது என்று தெரிந்தேதான் திரும்பத் திரும்ப தாய முத்துக்களை உருட்டிக்கொண்டிருந்தார்கள் ரயில் வந்ததும் போட்டது போட்டபடி எழுந்து விடுவார்கள். பூ கட்டிக்கொண்டே விளையாடும் விளையாட்டுக்களை அவர்கள் எல்லோரும் பழகி வைத்திருந்தார்கள். சோலை அவர்களின் விளையாட்டையேப் பார்த்துக்கொண்டிருந்தான். சோலை தனது பஞ்சரான சைக்கிளை பஞ்சர் ஒட்டி வேகமாக வரும்போது செல்வத்தையும் அவனது நண்பர்களையும் திட்டியபடிதான் ஒட்டி

வந்தான். செல்வம் தன் சைக்கிள் விஷயத்தில் தலையிடாமல் இருக்க ஏதாவது செய்ய வேண்டுமென யோசிக்கத் தொடங்கினான்.

சோலைக்கு அந்த யோசனைத் தோன்றியபோது ரயில் வரும் சத்தம் கேட்டது. ரயிலின் சத்தம் கேட்டதும் பூ வாங்க வந்தவர்கள் எழுந்து கொண்டார்கள். கட்டம் கட்டி தாயம் விளையாடியவர்கள் பாதிக்கு மேல் போன ஆட்டத்தை அன்றும் முடிக்காமல் விட்டு விட்டதை நினைத்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ரயிலில் பூ கொண்டுவருபவன் தூரத்திலிருந்தே கையை ஆட்டியபடி இருந்ததை ஸ்டேஷனிலிருந்த எல்லோரும் பார்த்தார்கள். தொந்தியும் சோலையின் அப்பாவும் கூடி பேசியவர்களாக மல்லிகைப் பூக்களை முழுமையாக ஏலத்தில் வாங்கிவிட வேண்டுமென முன்னால் நின்றனர். சோலை எழுந்து கொண்டான். அவன் கண்கள் செல்வத்தினையும் அவன் நண்பர்களையும் நோட்டமிட்டது. அவர்கள் கூட்டத்தோடுதான் நின்றிருந்தனர். சோலை மெல்ல கூட்டத்தை விட்டு நழுவியபடி நடந்தான். ரயில் ஸ்டேஷனில் நின்றது. பூ கூடைகள் இருந்த பெட்டியின் முன் கூட்டம் கூடியது. பூ கூடைகளை இறக்குவதற்குள் கூடைகளில் இருக்கும் பூக்களை அறிந்தவர்களாக கூச்சலிட்டனர். கூட்டத்தை விட்டு முழுமையாக விலகியிருந்தான் சோலை. ஏலம் தொடங்கியபோது ஸ்டேஷனை விட்டு விலகியிருந்தான்.

தொந்தி கணேசன் ரயில் ஸ்டேஷனுக்கும், ஸ்டேஷனுக்கு முன்னுள்ள பெட்டிக் கடைக்கும் இடையுள்ள ஆலமரத்து நிழலில்தான் எல்லோரையும் போல சைக்கிளை நிறுத்தி வைத்திருந்தார். சோலைக்கும் அவரது சைக்கிள் அடையாளம் தெரியும். லொடக்கு வண்டியை எங்கிருந்து பார்த்தாலும் உடன் அவன் அடையாளம் கண்டுபிடித்துவிடுவான். மெல்ல சைக்கிளின் அருகே சென்றான், ஊருக்கு வரும் பயணிகள் ஆலமரத்தைக் கடந்து நடந்தபடி இருந்தனர். ஏலத்தின் சத்தம் மட்டுமே இப்போது ஸ்டேஷனில் கேட்டது. ஆலமரத்திற்கும் பக்கத்தில் சிறுநீர் கழிப்பவன் போல உட்கார்ந்து கெண்டான். தன்னை யாரேனும் கவனிக்கிறார்களா என்று பார்த்தான். யாரும் தன்னை பார்க்கவில்லையென்பதை தெரிந்து கொண்டதும் தான் வைத்திருந்த சைக்கிள் சாவிக்கொத்தில் மாட்டியிருந்த பல் குத்தும் கம்பியால் லொடக்கு வண்டியின் முன் சக்கரத்தைக் குத்தி பஞ்சராக்கினான். பிறகு சிறுநீர் கழித்தவன் போல் எழுந்து ஸ்டேஷனுக்குள் சென்றான்.

சோலையின் அப்பாவும், தொந்தியும் கூடி பேசியவர்களாக மல்லிகைப் பூக்களை முழுமையாக ஏலத்தில் எடுத்திருந்தனர். அவரவர்கள் ஏலத்தில் தனியாகவும் கூட்டாகவும் வாங்கியிருந்த பூக்களைப் பற்றி பேசியவர்களாகவும் ஸ்டேஷனைவிட்டு வெளியேறினார்கள். செல்வமும் கோழிகாலனும் இன்னமும் சோலைக்குப் பயந்தவர்களாக இருந்தார்கள்.

அவர்கள் ஸ்டேஷனைவிட்டு சீக்கிரமே வெளியேறிவிட நினைத்தார்கள். செல்வத்தின் அப்பா வாங்கியிருந்த மல்லிகைப் பூக்களைத் தூக்கிக் கொண்டு வந்தார். செல்வமும் அவனது நண்பர்களும் தொந்தி கணேசனுக்குப் பின்னால் வந்தார்கள். அவர்கள் சைக்கிளின் அருகே வந்தபோது காற்று வெளியேறியிருந்தது.

செல்வத்தின் சைக்கிள் பஞ்சராகிப்போனது என்பதை முதலில் கோழிகாலன்தான் கண்டுபிடித்து சத்தமாக சொன்னான். தொந்தி மிகவும் எரிச்சலும், கோபமும் கொண்டவராக பூக்கள் இருந்த சாக்குப்பையை இறுகக் கட்டி தோளிலும் தலையிலும் வைத்து கொண்டார். பூட்டிய சைக்கிளை திறந்து செல்வத்தை உருட்டிக்கொண்டு வீடு வந்து சேர்க்கச் சொன்னார். செல்வத்திற்கு ஒரு பக்கம் கோபமாக இருந்தாலும் இன்னொரு பக்கம் சந்தோசமாக இருந்தது. தன்னிடமும் தன் நண்பர்களிடமும் காசிருந்தால் உடனே பஞ்சர் ஒட்டி சைக்கிள் ஓட்டி பழகிடலாமென கோழிகாலனும் தன் யோசனையைச் சொன்னான். யாரிடமும் காசு இல்லை. பிறகு சைக்கிளை உருட்டிக்கொண்டுதான் போக வேண்டுமென உருட்டினார்கள்.

சோலையின் மேல் திடீரென அவர்களுக்கு சந்தேகம் வந்தது. சோலையும் அவனது அப்பாவும் சைக்கிளில் அவர்களைப் பார்த்து ரயிலின் பூக்காரனைப் போல சைக்கிள் கைகளை ஆட்டினான். சோலை பழிக்குப் பழி என்பது போல சிரித்தபடியே கைகளை ஆட்டியது செல்வத்திற்கு மேலும் கோபத்தை தூண்டியது. தனது அப்பா சுமைகளைத் தூக்கிக் கொண்டு வியர்த்தபடி நடப்பதை அவன் பார்த்தான். தன்னால்தான் சோலை அப்பாவின் சைக்கிளை பஞ்சராக்கினான் என்றாலும் அவனை மேலும் ஏதாவது செய்து விடவேண்டுமென்று மனம் தவித்தது. உடனே அவன் சைக்கிளை கீழே தள்ளிவிட்டு டைனமோ முன்வாடியிருக்கும் கண்ணாடியையும் உடைத்துவிட வேண்டுமென தன் நண்பர்களிடம் சொன்னான். பதிலுக்கு தன் சைக்கிளை ஒன்றும் செய்ய முடியாது. ஏனென்றால் தன் அப்பாவின் சைக்கிளில்தான் டைனமோவும், கண்ணாடியும் இல்லையே என சொன்னான். கோழிகாலனுக்கு சரியாகத்தான் இருந்தது என்றாலும், இதனால் தெருவில் பெரியவர்களின் சண்டை வந்துவிடும் என்று அவன் பயந்தபடி சொன்னான்.

அவர்களுக்கு என்ன செய்ய வேண்டுமென ஒன்றும் தெரியவில்லை. பயத்தோடு பூக்காரத் தெருவைவிட்டு ஸ்டேஷனுக்கு வந்தவர்கள், ஸ்டேஷனிலிருந்து கோபத்தோடும் அவமானத்தோடும் அவரவர்கள் வீட்டிற்கு சென்றார்கள். கனகு பூக்கள் கட்டத் தொடங்கியிருந்தாள். செல்வம் தன் வீட்டின் முன்பு சைக்கிளை நிறுத்தியபோது அவள் எல்லாம் அறிந்தவளாக அவனையும் அவனது நண்பர்களையும் அழைத்து அருகில் அமர்த்திக்கொண்டாள். அவர்கள் எல்லோரும் செல்வத்தின் அம்மா

வேகவேகமாக பூக்கள் கட்டுவதைப் பார்த்தபடியே அமர்ந்திருந்தனர். பிறகு தன்னிடமிருந்த சில்லறை களை எடுத்து செல்வத்திடம் தந்து பஞ்சர் ஒட்டும் கடையில் போய் பஞ்சர் ஒட்டிவர சொன்னாள். எல்லோரும் சந்தோசமாக பஞ்சர் ஒட்டச் சைக்கிளை உருட்டிக்கொண்டு நடந்தார்கள். அவளுக்கு இன்றாவது தன் மகனிடம் தனக்குத் தெரிந்த கதையைச் சொல்லிவிட வேண்டுமென்று நினைத்தாள்.

கனகு ஆயிரம் மல்லிகைப் பூக்களையும், ஆயிரம் கனகாம்பரத்தையும் கட்டி முடித்திருந்தபோது பஞ்சர் ஒட்டி வீட்டிற்குத் திரும்பியிருந்தான். செல்வம் இனி தினமும் மாலை நேரங்களில் அப்பாவின் சைக்கிளை பூ விற்க எடுத்துக்கொண்டு போகலாமென அவனிடம் சொன்னாள். நம்பமுடியாதவனாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். இன்று எடுத்துக்கொண்டு போகலாமா என கனகுவிடம் கேட்டான். அவள் சரி என்றாள். அப்பா என்ன செய்வார் என்று அம்மா விடம் திரும்பவும் கேட்டான். அப்பா இன்னொரு சைக்கிள் வாங்கப் போவதாக தன்னிடம் சொன்னதாக கனகு அவனிடம் சொன்னாள்.

செல்வம் உடனே தன் நண்பர்கள் எல்லோரிடமும் பெரிய சைக்கிள் ஓட்ட கிடைத்துவிட்டதைச் சொல்ல தெருவிற்கு வந்தான். கோழிகாலன் வீட்டிற்குத் தான் முதலில் சென்றான். கோழிகாலன் திண்ணையில் அமர்ந்து கொண்டிருந்தான். செல்வம் தன் அம்மா சொன்னதை அவனிடம் சொன்னான், கோழிகாலன் ஆச்சரியமாகக் கேட்டுவிட்டு 'எனக்கும் பெரிய சைக்கிள் ஓட்டத் தருவியாடா லொடக்கு' என்று கேட்டான். சரி என்றான் செல்வம். பிறகு இன்னொரு நண்பனின் விட்டிற்கு சென்று சொல்லப் போனான் செல்வம்.

செல்வம் போன பிறகு அவனுக்குத் தெரியாமல் திருடி வைத்திருந்த சைக்கிள் படத்தை எடுத்துப் பார்த்தான் கோழிகாலன். செல்வம் பூ வியாபாரம் என்று எழுதியிருந்ததை ரப்பரால் அழித்திருந்த அந்த இடம் அசிங்கமாகத் தெரிந்தது. கோழிகாலன் அதில் தன் பெயரை எழுதிவிட யோசித்தபடி நின்று இருந்தான்.

செம்பருத்தி பூத்த வீடு

சேகு



அனன்யா
8/37, பி.ஏ.ஓய். நகர்
புதுக்கோட்டை
சாலை
தஞ்சாவூர்-613 005

தமிழ் மண்ணில் இசுலாமிய கலாச்சாரம் தன்னைத்தானே திரையிட்டுக் கொண்ட கலாச்சாரமாகவும், சாதி வாரியாக பிரிந்து பன்முகத்தன்மையுடைய நம் சமூகத்திலிருக்கும் பல்வேறு சாதியக் கூறுகளைப் போலவே, தனித்த மண்ணின் பண்பாட்டு, கலாச்சார கூறுகளை தன்னகத்தே கொண்டிருந்தாலும், நவீன கால வளர்ச்சியோடு மற்ற பிரிவினரைப்போல வெளிப்படைத் தன்மைக்கு வருவதில் தயக்கமுற்றும், பழமைவாதக் கூறுகளைக் கொண்டதாகவுமிருக்கிறது. மிகச் சில எழுத்தாளர்களின் பதிவுகளிலே மட்டுமே சிறு அளவில் இலக்கிய உலகிற்கு அறிமுகமாக இருக்கும் நிலையில், ஜாகிர்ராஜாவுடைய இந்த தொகுப்பு, இச்சமூகத்தின் அடித்தட்டு மக்களுடைய வாழ்வை, குமுறல்களை, அவலங்களை பதிவு செய்திருப்பதில் வெற்றி பெற்றிருக்கிறது எனலாம்.

ஜாகிர்ராஜா நவீன எழுத்துபாணியை கையாள்வதில் உள்ள தேர்ச்சியை அவருடைய பல சிறுகதைகளில் வெற்றிகரமாகச் செய்திருக்கிறார். சாதாரண சிறுகதை கூட, யுத்திகளில்லாமலிருப்பதால், வாசிப்பு சுவாரசியத்தையும் மீறி அயற்சியையும் ஏற்படுத்துகிறது.

செம்பருத்தி பூத்த வீடு சிறுகதை பால்ய நினைவுகளோடு வியாபாரத்தில் நொடிந்து பிழைக்கப் போன ஊரிலிருந்து சொந்த ஊருக்கு வரும் ஒருவன் கடைசியாக மோன நிலைக்கு போதைப் புகையிலை (கஞ்சா ...?)வில் மூழ்குவதோடு முடிகிறது. இக்கதையில் ஒரு சம்பவ வர்ணனையே எஞ்சி நிற்கிறது. வாசகனுக்கான எல்லைகளை விரிவுபடுத்தும் எதுவுமில்லாமல் அவலச்சுவையுடன் முடிவடைகிறது. இதே போலவே ஆகாச ராட்டினத்துடைய முடிவிலும் அண்ணன் கஞ்சா புகைத்து ராட்டினத்திலிருந்து வீழ்ந்து பைத்தியமான நிலையில் தம்பியும் அதே பாதையில் போதைப் புகையில் மூழ்கி ராட்டினத்திலிருந்து கீழே விழுவதாக முடியும்போது விட்டில் பூச்சிகளாய் மனிதர்கள் வீழும் அவலச்சுவையைக் காண முடிகிறது.

டெனர்ஸைரிக்கிறது. அமாவாசி ஆகிய சிறுகதைகள் எதார்த்த நிலையை மீறி முற்றிலுமாய் மாய உலகிற்கு பயணம் செய்யும் சிறுகதைகளாக உள்ளன. கிராமத்தில் நிகழும் அமானுஷ்ய விஷயங்களை பதிவு செய்வதோடு முடிந்துவிடும் நிலையில் அதில் உள்ள விஞ்ஞான உண்மைக்கான தேடுதல் எதுவுமில்லாதது ஏமாற்றமளிப்பதாக உள்ளது. ஒரு சிறுகதையேனும் அக்கலகை வெளிச்சத்தை விதைப்பதுதானே சிறந்த படைப்பாக இருக்க முடியும்?

வறுமையும், காண்டலும், ஆதிக்க சக்திகளும் மற்ற சமூகத்தைப் போலவே தான் இஸ்லாமிய சமூகத்தின் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையிலும் செல்லரித்துக் கொண்டிருக்கும் நோய்களாய் இருப்பதை கட்டாந்தரை, பக்ரீத் ஆடுகள், கருப்புக் கோட்டு, ராஜமீன், எடுப்பு, இரட்டை மஸ்தான் அருகில், காஃபிர், ராட்சஸப் பறவையின் சிறகுகள் என பெரும்பாலான சிறுகதைகளில் பதிவு செய்திருக்கிறார். வாசகனை கதையோடு ஆற்றலுடன் இழுத்துச் செல்லும் தனது எழுத்துக்களின் மூலம் இதை செய்திருப்பதன் மூலம் ஜாகிர்ராஜா தான் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகத்தை நிறைவாகவே பதிவு செய்துள்ளார். கட்டாந்தரை சிறுகதையில் வறுமையால் ஒதுக்கப்படும் மனிதனையும் அதனால் அவர் மனநிலை இழந்ததையும் இரட்டை மஸ்தான் அருகில் கதையில் கௌரவமான கணக்குப்பிள்ளை வேலை பார்த்த உசேன் பாய் நாகரீகமும், உலகமும் மாறிப்போன நிலைமையில் ஜவுளிக்கடை சேலை உடுத்திக்காண்பிக்கும் நிலைமைக்குப் போய்விட்ட துயரத்தையும் பதிவு செய்யும்போது தனது சமூகம் வறுமையாலும், பழமைவாதத்தாலும் மூழ்கிக்கிடப்பதைப் பார்க்கும் படைப்புகளாயும், இவற்றிலிருந்து என்று மாறுவார்களோ என்ற ஏக்கத்தை வாசிக்கும் நம்மிடம் ஏற்படுத்துவதன் மூலம் தனது சமூகப்பொறுப்பை ஒரு எழுத்தாளனாய் சரியாகவே செய்திருக்கிறார் ஜாகிர்ராஜா.

சமூக மதிப்பீடுகளுக்காக தனக்கு மருமகனிடம் ஏற்படும் அவமானத்தை தவிர்க்க அலீபா, சமூக மதிப்பீடுகளில் இன்னொன்றான திருடாமையை மீறுகிறார். பள்ளி வாசலில், தான் நேசிக்கும், தினமும் வணங்கும் ஆலயத்தில், தன் கையாலேயே ஆசை ஆசையாய் பொரிகளை போட்டு வளர்த்த ராஜமீனை மறைவாக பிடிக்கிறார். மற்றவர்களுக்கு தெரிந்து போய் அவமானப்பட்டுப் போகும் ஒரு சாமான்ய மனிதனுடைய நெஞ்சப்புழுக்கத்தையும், ஒரு காலத்தில் உச்சத்திலும் ஒரு காலத்தின் பாதாளத்திலும் மனிதத்தை வீழ வைத்து உயிரையும் உணர்வையும் சிதைக்கும் இந்த சமூகத்தின் அவலநிலையை ராஜமீன் சிறுகதை முகத்தில் அறைவது போல் வெளிப்படுத்துகிறது.

பிழைப்புக்காக தனது மதச் சம்பிரதாயங்களை மீறுவதா என்று தன் மகனிடம் கோபித்துக் கொள்ளும் காசிம் ராவுத்தர், அவரது மகனுடன் கோபித்துக் கொண்டு சாப்பிடாமல் இருக்கிறார். அவர் திருந்துவார் என்று மகன் அப்துல்லா நினைப்பது கனவாகப் போகிறது. மதங்கள்

வேறாயினும் மனிதத்தை நேசிக்க கற்றுக்கொள்வதில் மறைந்து உள்ள முரண்களை, 'காஃபிர்' சிறுகதை சொல்கிறது.

ஒரு துப்புரவுத் தொழிலாளியோடு நெருக்கமாகப் பழகி, அவளைத் மனைவியிடம் தகாத உறவு வைத்துக்கொண்டு, சுயநலத்திற்காக வறுமையின் பிடியிலும், ஜாதிய ஒடுக்குமுறையிலும், துயர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் அவளை மதம் மாற்ற முயற்சிக்கும் இழிந்த மனிதனாய், ஒரு பெரிய மனிதனைப் பற்றிய எடுப்பு என்னும் சிறுகதை இச்சமூகத்தில் உள்ள கயமைகளை தோலுரித்துக் காட்டுவதாய் உள்ளது.

ஷெய்கு மொஹிதீனுடைய இயலாமை, தன்னை ஏமாற்றிய வசதிபடைத்த ஏமாற்றுக்காரனுடைய மரணத்தின் போது பகைத்து கொண்டிருப்பது யதார்த்தமே. ஏனோ இந்தக் கதையோடு தேவையில்லாமலும் ஒட்டுவராமலிருக்கும் மொஹிதீனுடைய கழிப்பறை சிந்தனைகள், காரித்துப்புவது ஆகியவை, ராட்சஸ பறவையின் சிறகுகள் சிறுகதையின் வாசிப்பில் நெருடலை, குமட்டலை தவிர்க்க முடியாமல் ஏற்படுத்துகிறது.

எந்த மதத்தைச் சேர்ந்தவராயினும் ஏற்ற தாழ்வுள்ள ஒரு சமூகம் மானுடப்பண்புகளை சிதைத்துவிடுவதையும், வீழ்த்தப்பட்டவர்களின் உடலிலும் உதிரத்திலும் அது கட்டப்பட்டிருப்பதையும், மனித உணர்வுகளையும், மாண்புகளையும் அது சிதைப்பதை, மிகப் பெரும்பாலான சிறுகதைகள் பேசுகின்றன

கதைகளில் நேரடியாக உபதேசம் எதுவும் சொல்லாமல் வாழ்க்கையை அப்படியே பதிவு செய்ததன் மூலம் வாசகனுடைய சிந்தனைக்கு இவற்றை ஆசிரியர் விட்டுச் சென்றிருப்பது சிறப்பு. இத்தகைய சிறுகதை யுக்தியை இவரது எழுத்துக்களை இஸ்லாமுக்கான முத்திரையிலிருந்து வெளியே இவரது படைப்புத்தளத்தை கொண்டு செல்கிறது. இசங்களற்றிருப்பதும் ஒரு இசம்தான். ஆனால் ஆசிரியர் சமூகம் எனும் தளத்திலேயே கால் வைத்துக் கொண்டு அதனின்று விலகிவிடாமல் நிற்பதால், மக்களுக்கான எழுத்தாளனாய் தனது தொகுப்பில் காட்சியளிக்கிறார்.

செம்பருத்தி பூத்த வீடு சிறுகதையின் 'எங்க வீடுங்க மாதிரி ஜென்னலுக்கு மறைப்பு, கதவுக்கு மறைப்பு, கதவுக்கு அங்கிட்டு ஒரு மறைப்பு' என்பதைப் போல் வேலை, வியாபாரம், மதம் சார்ந்த நம்பிக்கைகள், இவற்றையும் தாண்டி செக்குமாடாய் பிழிந்தெடுக்கும் வாழ்க்கை என கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியிருக்கும் தனது சமூகத்தின் மறைவான ஜன்னல்களை வாசகர்களுக்காக திறந்திருக்கிறார் ஜாகிர்ராஜா.

நல்ல திறமையான சிறுகதை நடையாக்கம்பெற்ற ஜாகிர்ராஜா முதல் தொகுப்பின் வாசிக்க வைப்பதில் வெற்றி கண்டிருக்கிறார். இன்னும் சிறந்த எழுத்துக்கள் தன்னிடமிருந்து வரும் என்ற நம்பிக்கையும் இத்தொகுப்பின் மூலம் விதைத்திருக்கிறார். ◆

வம்சி புக்ஸ்

19, டி. எம். சாரோன், திருவண்ணாமலை - 606 601
செல்: 94432 22997

புதிய வெளியீடுகள்

சிதம்பர நினைவுகள்

பாலச்சந்திரன் சுள்ளிக்காடு

தமிழில்: கே.வி.ஷைலஜா

தமிழில் வெளிவந்து பரபரப்பூட்டிய சுயசரிதை

விலை ரூ.80

போதி நிலா

மாதவராஜ்

சேகுவேரா---சி.ஐ.ஏ உளவுக் குறிப்புகள் ஆகியவற்றை எழுதிய கலைஞனின் சிறுகதைத் தொகுப்பு

விலை ரூ.50

நிசப்தம்

சியாமளா சசிக்குமார்

தமிழில்: கே.வி.ஜெய-ஸ்ரீ

சதா ஒலிக்கும் ஒரு பெண்ணின் மனவலி - கவிதைகள் மொழிபெயர்ப்பு உயிர்ப்புடன்

விலை ரூ.30

பேர் லாகர்க்விஸ்ட் சிறுகதைகள்

தமிழில்: ஜி.குப்புசாமி

குள்ளன், பாரபாஸ் தந்த பேர் லாகர்க்விஸ்டின் கதைகள். தமிழின் தேர்ச்சியான மொழிபெயர்ப்பாகும்

விலை ரூ.70

சர்மிஷ்டா

என். எஸ். மாதவன்

தமிழில்: கே.வி.ஷைலஜா

உங்களை உறைய வைக்கும் எழுத்துகள்

விலை ரூ.50

காட்டாறு

ஜே. ஷாஜஹான்

ஆர்ப்பாட்டமில்லாத, அழகிய, தாக்க மேற்படுத்தும் நல்ல கதைகள்

விலை ரூ.50

தீப்பெட்டி மனசு
வே. நெடுஞ்செழியன்

கள்ளங்கபடமற்ற
கவிதைகள்

விலை ரூ.50

தூராசுகள்
விஷ்ணுபிரியன்

சமூக அவலங்களின்
மீதான கோபக்கவிதைகள்

விலை ரூ.50

ஒட்டுவாரொட்டி
இலட்சுமணப்பெருமாள்

நம் காலத்தின்
கதைகள்

விலை ரூ.70

அவரவர் வானம் அவரவர் காற்று
அ. இலட்சுமிகாந்தன்

கொழுந்துவிட்டெரியும்
சமகாலம்
கவிதைகளாய்

விலை ரூ.40

சில பொய்களும் சில உண்மைகளும்
பாலபாரதி

திண்டுக்கல் சட்டமன்ற
உறுப்பினரின்
உத்வேகமளிக்கும்
கவிதைகள்

விலை ரூ.50

நான் பேச விரும்புகிறேன்
ச. தமிழ்ச்செல்வன்

உலக மகாக்
கலைஞர்களின்
வாழ்க்கை அறிமுகங்கள்.
அரிய வண்ண
புகைப்படங்கள்

விலை ரூ.150

கந்தர்வன் கதைகள்
(முழுத்தொகுப்பு)
கெட்டி அட்டைப் பதிப்பு

சமூக அக்கறையுள்ள
கலைஞர்களின் சாகாத
கதைகள்.

விலை ரூ.300

தீராது
உதயசங்கர்

வேட்டைக்காரனையே
வேட்டையாடும்
கவிதைகள்

விலை ரூ.40

குறிஞ்சிப்பாட்டு: காலமும் கருத்தும்

வ. கீதா

சங்ககால வரலாறு, அக்காலம் கண்ட இலக்கியம் ஆகியனவற்றுக்கு நவீனகாலத் தமிழ்ச் சமுதாயத்தின் கூட்டு நினைவில் தனிச்சிறப்பான இடமுண்டு. தமிழர்கள் தாம் வாழ்ந்து வந்த சூழலுடனும், இயற்கையுடனும் கொண்டிருந்த செறிவான, நயமான, உறவைப் பாடுவதாக, போற்றுவதாகக் கொள்ளப்பட்ட இலக்கியங்களும் அவை காட்டிய காலவெளியும் நவீனகாலத் தமிழ் அறிவாளிகளின் அடையாளத் தேடல்களுக்குரிய களங்களாக இருந்தன; அத்தேடல்களை ஆற்றுப்படுத்துபவராக அவ்விலக்கியங்கள் முன்நிறுத்திய மாந்தர்கள் அமைந்தனர். 1900களில் தொடங்கி இன்றுவரையிலும் நீடித்துள்ள இத்தேடல்கள் தமிழ்ச் சமுதாயத்தின் அரசியல், சமூக வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடையன வாயும் இருந்து வந்துள்ளன. சாதி நெறிகளை, ஏற்றத் தாழ்வுகளை அறியாத அல்லது குறைந்தபட்சம் அந்நெறிகள் தமிழ் மண்ணில் ஆழமாக வேரூன்றாத காலமாகவும்

தமிழ்ப் பண்பாட்டின் தனித்துவமான பண்புகளாகக் கருதப்படும் ஈகை, காதல், வீரம், நட்பு, விருந்தோம்பல் முதலியன உருப்பெறத் தொடங்கியிருந்த காலமாகவும் அடையாளப்படுத்தப்பட்டு நவீனத் தமிழ்க் கற்பனைக்கான முக்கிய ஆதாரங்களில் ஒன்றாகவும் சங்க காலம் விளங்குகிறது.

கவிஞர் இன்குலாபின் 'குறிஞ்சிப்பாட்டு' நாடகப்பனுவல் சங்க காலம் குறித்த தற்காலக் கற்பனையினூடாக உருவானதுதான். ஆனால் வரலாறு தொலைத்துவிட்ட அந்தக்கால வாழ்க்கையை ஏக்கத்துடன் ரசிக்கும் பாவனை அவரிடத்து இல்லை. மாறாகத் தனது சமகால அக்கறைகளை கவித்துவமாகவும் கருத்தியல் தெளிவுடனும் அலசி ஆராயும் பொருட்டே அவர் சங்க காலத்தை நாடியுள்ளார், தனக்குரியதாக வரித்துக் கொண்டுள்ளார்; அக்காலம் காட்டும் திணைசார் வாழ்க்கையை வித்தியாசமானதொரு வாசிப்புக்கு உட்படுத்தியுள்ளார்.

'குறிஞ்சிப்பாட்'டினைக் கதைப்பாட்டாகவும் நாடகமாகவும் ஆக்க அவர் மேற்கொண்ட முயற்சியைச் செயலூக்கமான வகையில் வழிநடத்தியும் அம்முயற்சிக்குரிய பலனைப் பெற்றுத்தரும் வகையிலும் அ. மங்கை இந்த நாடகத்தை நெறிப்படுத்தியுள்ளார். இன்குலாபின் 'அவ்வை', 'மணிமேகலை' நாடகப் பிரதிகளை அரங்கேற்றி அந்த அரங்கங்கள் மூலமாகப் புதிய பண்பாட்டுச் சின்னங்களை அனாயசமாகப் பாடும்-ஆடும் அவ்வை; துறவு என்பதைப் பெண்களுக்கும் உரிய அறமாக எண்ணி ஏற்றுக்கொண்ட மணிமேகலை ஆகியோரைத் தமிழ் நினைவுக்குள் புகுத்த மங்கை மேற்கொண்ட பெண்ணிய செயல்பாடுகளும் வாசிப்புகளும் நாம் சுவீகரித்துள்ள பண்பாட்டுணர்வைச் சலனப்படுத்துவனவாய் விளங்கின.

வரலாற்று நிகழ்வுகளை, ஒரு சமதாயத்தின் கூட்டுக் கற்பனையில், பிரக்ஞையில் தங்கிவிட்ட பிம்பங்களை மறுவாசிப்புக்கு, அதுவும் பெண்ணிய நோக்கிலான மறுவாசிப்புக்கு உட்படுத்துவதென்பது சிக்கலான விஷயமாகும். குறிப்பிட்ட காலவெளிக்குரிய தர்க்க நியாயங்களை அவையளவில் விளக்குவது, பாராட்டுவது என்பது மட்டுமில்லாமல் அவற்றை நவீனச் சமூதாயத்திற்குரிய விசாலாமான விழுமியங்களாக, குறிப்பாகப் பெண் விடுதலைக்கு ஆதாரமான விழுமியங்களைக்கொண்டு மதிப்பீடு செய்வது என்பது எளிதல்ல. உதாரணத்துக்கு மணிமேகலை போன்ற காப்பியப் பாத்திரத்தை தற்காலத்துக்குரியதாக உருமாற்றுவதில் உள்ள சிக்கல்களை எடுத்துக் கொள்வோம். காப்பிய மேகலை பௌத்த சமய வரலாற்று வளர்ச்சியினூடாக அறியப்படும் கதாபாத்திரம். அவ்வளர்ச்சியின் பெருமையைப் பேசும் குறியீடு. மங்கையும், இன்குலாபும் இவளைத் தற்காலப் பெண்ணியத் தேடல்களுக்குரிய இலக்காக உருமாற்றினர்.

காப்பிய நிகழ்வுகளை உள்ளவாறே தக்க வைத்துக் கொண்டனர். ஆனால் அவற்றைப் பெண்மை பற்றிய விவாதங்களினூடாகவும் அவசினர் (நடிகர்களின் அங்க அசைவுகளும் உடல்மொழியும் இவற்றைக் காலம் கடந்த, நம் காலத்துக்கும் பொருந்தும் விவாதங்களாக உருமாற்றின) காப்பியம் காட்டும் பெண்மை நாடகத்தின் முக்கியப் பொருளானது. பௌத்தம் பெண்மைக்கும் உரிய அறமாகக் காட்டப்பட்டது. பெண்களும் பௌத்தத்தில் சரணடையலாம் என்ற காப்பியக் கருத்து இந்தப் புரிதலில், இப்புரிதல் பெற்ற நாடக நிகழ்வுகளில் அடக்கப்பட்டது. பெண்மை என்பது சாதி நெறிகள், அரசு அதிகாரம் முதலியவற்றாலும் கட்டமைக்கப் பட்டிருப்பதும் மேடையில் அம்பலமானது. மணிமேகலை பெண்ணியச் செயல் வீராங்கனையாக, பிரச்சாரகராக அல்லாமல் பெண்ணிய வாசிப்பினைத் தாங்கி இயங்கும் கதை மாதுவாகவே நாடக மேடையில் வலம் வந்தாள்.

குறிஞ்சிப்பாட்டைப் பொறுத்தவரை, இருவேறு விதமான பண்பாட்டு நிர்ப்பந்தங்களை, சவால்களை இன்குலாபும் மங்கையும் எதிர்கொள்ள வேண்டியிருந்ததாகத் தெரிகிறது. சங்ககாலம் பேசும் வாழ்வை இலட்சிய வாழ்க்கைக்கான குறியீடாக அறியும் வரலாற்றுப்போக்கிற்கு முகங்கொடுத்துதான் இருவரும் செயல்பட்டுள்ளனர். ஆனால் அந்த இலட்சிய வாழ்க்கையை எக்கத்துடனும் பரிதவிப்புடனும் மட்டுமே அணுகாமல்–இத்தகைய பரிதவிப்பானது தமிழ்ப்பண்பாட்டு வளர்ச்சியைப் பாதித்துள்ள விதங்களை நாம் இன்னமும் முழுமையாக ஆராயவில்லை. அத்தகைய ஆய்வின் தேவையை உணரக்கூடத் தயாராக இல்லை. அதன் சாரத்தையும் (வரம்புகளையும்) இருவருமே வெவ்வேறு வகையில் பதிவு செய்துள்ளனர். இன்குலாபின் கற்பனையும் கவியாற்றலும் குறிஞ்சியின் அழகை, அதன் ஆறுகளை, அருவிகளை, செடி, கொடிகளை நமது தற்கால ரசனைக்குரியவையாய், களிப்புக்குரியவையாய் ஆக்கியளித்துள்ளன. அதே சமயம் குறிஞ்சித் திணைசார் வாழ்வென்பது நிலையானதல்ல; அதனை அச்சுறுத்தும் நிகழ்வுகள் அன்று மட்டுமின்றி, இன்றுமே நடக்கின்றன. இலட்சிய உலகம் என்பது காலம் தொலைத்தது மட்டுமன்று, தொடர்ந்து ஆவணமான எதேச்சதிகாரத்தின் பெரும்பசிக்கு ஆளாக்கப்பட்டு வரும் எளிய, மண்சார்ந்த வாழ்வுகள் அடங்கிய உலகமும் கூட என்பதை இன்குலாப் நமக்குத் தெளிவாக விளக்குகிறார். அவரது கற்பனையில் பாரியின் குறிஞ்சி செவ்விந்தியர்களிடமிருந்து பறிக்கப்பட்ட புனித கானகமாகிறது. ஆப்பிரிக்கர்களின் அடிமை வாழ்வை வாட்டும் விடுதலைப் பற்றிய நினைவுக்குரிய கற்பனைக்களமாகிறது. இராஜஸ்தானியப் பெண்கள் மரங்களைத் தழுவிக் காத்த பாலைவனச் சோலையாகிறது. மூவேந்தர்களின் அதிகாரம் கலைத்த வாழ்வும் மண்ணும் அவற்றிலிருந்து வெளியேற்றப்பட்ட, பாரி மகளிரும், விறலியரும், பாணரும், எயினரும், பிறரும் காலங்காலமாகத் தமது

மண்ணிலிருந்தும் உறைவிடத்திலிருந்தும் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட நாடிழந்த, காடு இழந்த ஆதிவாசிகளாக, தற்கால அகதிகளாக, மழை தீர்ந்த மண்ணை நீங்கி நகரம் நோக்கிச் செல்லும் கிராமப்புற மக்களாகின்றனர். குறிஞ்சியின் இலட்சிய அழகு, இலட்சியக் கற்பனை மட்டுமே. ஆனால் அக்கற்பனையை நாம் தொலைத்துவிடக் கூடாது என்பதை இன்குலாப் சொல்லாமல் சொல்கிறார்.

இன்குலாபின் பிரதியை அரங்கேற்றம் செய்வதென்பது எளிதல்ல என்பதை மங்கையின் நெறியாள்கையிலிருந்து அறியமுடிகிறது. குறிஞ்சியின் அழகு, அவ்வழகு தொடர்ந்து அச்சுறுத்தப்படும் வரலாற்று அவலம்: இவற்றைக் காட்சிப்படுத்த மங்கை கையாண்டுள்ள உத்திகள் சுவாரசியமானவை. காப்பிய கபிலரின் கனவாகவும், அவரது மங்கி மறைந்து கொண்டிருக்கும் நினைவிலிருந்துப் பெறப்பட்ட செய்திகளின் கோவையாகவும் குறிஞ்சி மண்ணின் வாழ்க்கையும் வனப்பும் மேடையில் அரங்கேற்றப்பட்டன. நிஜத்துக்கும் நினைவுக்கும் சமகாலத்துக்கும் கடந்த காலத்துக்கும் நாடகப் பிரதிக்கும் நடிப்புக் காட்சிகளுக்கும் இடையிலான முரண்பட்ட உறவானது கனவும் நிஜமும் சந்திக்கும் மயங்கிய வெளியில் தான் வெளிப்பாடு காண்கிறது. இந்த முரண்கள்தான் குறிஞ்சிப்பாட்டின் 'இலட்சிய' உலகினை நமதாக்குகின்றன. காப்பிய கபிலரின் காதல் கவிதைகள் அழகானவைதான். ஆனால் அவைக் காட்டும் நிஜம் பெண்மையைப் பற்றிய எத்தகைய அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன? பாரி மன்னன் அன்பானவன்தான். ஆனால் அவனது செல்ல மகளிருக்கு வாய்த்த வாழ்க்கையை நாம் எவ்வாறு புரிந்து கொள்வது; கானக வாழ்வின் எளிமை அவர்களை அறிவார்ந்த, பண்பட்ட மகளிராக ஆக்கக் கூடியதுதானா? அல்லது துள்ளித்திரியும் இளங்கன்றுகளாக, காதல் பற்றி மட்டுமே கனவு காணும் பச்சை உள்ளங்களாக மட்டுமே அவர்கள் வளர்ந்துள்ளனரா? அகதிகளாக

ஆக்கப்பட்ட அவர்களுக்கொரு நற்கதியை கபிலர் தேடிக் கொடுக்க முனையும்போது, அவர்களுக்குள்ள மனநிலைதான் என்ன?

இன்குலாபின் பிரதியைத் தனது பெண்ணிய நோக்கிற்கு உட்படுத்தியும் அப்பிரதிக்குள் பொதிந்துள்ள பெண்ணியக் கூறுகளைத் தனது வாசிப்பிற்கு ஆதாரமாக்கியும் மங்கை செயல்பட்டுள்ளார். இன்குலாப் காட்டும் அழகை நாடக மேடையில் நிஜமாக்க இசையையும் தனக்கு வாய்த்த நடிகர்களின் இளமையையும் இளமைக்கேயுரிய வனப்பையும் ஆற்றல்களையும் இவர் பொறுப்புடனும் திறனுடனும் கையாண்டுள்ளார். அதே சமயம் இந்த அழகினை மேற்கூறியுள்ள வகையில் கேள்விக்குட்படுத்தவும் செய்கிறார். பெண் நடிகர்களின் துடுக்கான பேச்சும் அவர்களுக்குரிய வரிகளை அவர்கள் பேசிய பாங்கிலும் குறிஞ்சியின் அறம் விமர்சனப்படுத்தப்படுவதைக் காண முடிந்தது... கேட்க முடிந்தது... ஆண், பெண் நடிகர்கள் உடையாலும் உடல்மொழியாலும் வேறுபடுத்தப்படாததால், மேடையை அவர்கள் வித்தியாசமான வகையில் ஆட்கொண்டனர். ஆண்மை, பெண்மை என்பன கதைக்குரியதாய், பண்பாட்டு செயல்பாடுகளினூடாக விரிவனவாய் தம்மை காட்டிக் கொண்டன. நடிகர்களது பாலின அடையாளம் என்பது இவற்றை தீர்மானிக்காதது கவனத்துக்குரியது: பாலின அடையாளம் என்பதன் சமூக, பண்பாட்டு அடிப்படைகளை இனங்காட்டவும் நடிப்பு என்பது இவ்வடையாளங்களை மேலும் சலனப்படுத்த வல்லது என்பதை விளக்கவும் மங்கை இதைச் செய்திருக்கலாம். கதையையும் இந்த உத்தி பாதித்தது: சங்ககாலப் பெண் அறமானது காதலையும் காமத்தையும் மட்டுமே சார்ந்துள்ள போதிலும், அப்பெண்களும் உழைத்தனர், பேசினர், வாதாடினர் என்பதைக் காட்ட இந்த உத்தி உதவியது. யார் எந்தத் தொழிலைச் செய்தனர், எது முக்கியமானது என்பதை உடல்கூற்றையும் வெளித்தோற்றத்தையும் கொண்டு மட்டுமே தீர்மனிக்க முடியாது என்பதை மேடை நிகழ்வுகள் காட்டியதுடன், பெண்களுக்கு அன்று வாய்த்திருந்த, ஆனால் முக்கியமானதாக அறியப்படாத சமூக, பொருளாதார அடையாளங்களை முன்நிறுத்தவும் இந்த உத்தி உதவியது.

குறிஞ்சி உலகினை ரசிக்க, ஏற்க, விமர்சிக்க மங்கை நமக்கு ஒரு வெளி ஏற்படுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும். கவிதையாகவும் பிரதியாகவும் நம்மை ஆட்கொண்டு களிப்பூட்டக்கூடியதை நமது விமர்சன அறிவுக்கு உட்படுத்தியும் எந்தவொரு இலட்சியமும் நிஜமாகும் போது மேடையில், வரலாற்றில் அது மேலும் முழுமையான வகையில், நமதாகிறது என்பதை உணர்ந்தும் அவர் இதைச் செய்துள்ளார். அவரது நெறியாள்கை சாத்தியப்படுத்திய நடிப்பு மேடையும் நடிப்பும் காட்சிகளும் உயரிய கற்பனையை மண்ணுக்கு இறக்கி வரலாற்றுக் களத்துக்குள் வேரூன்ற செய்துள்ளன. கவிதை வரலாறாகிய, படிப்பினையாக ஆகியதன் கதையாகவும் இதைக் கொள்ளலாம். ◆

தெற்குப் பசிபிக் தீவு, ஆதிக்குட்டை மனிதர்

சு. கி. ஜெயகரன்



ஃப்ளோரெஸ் (FLORES) தீவு, பாலியிலிருந்து 500 கி.மீ. மேற்கில், பசிபிக் கடலில் அமைந்த இந்தோனேஷியத் தீவுகளில் ஒன்று. அங்கு 2003ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் தொல்லியல் கள ஆய்வுகள் செய்து கொண்டிருந்த ஆஸ்திரேலிய மற்றும் இந்தோனேஷிய ஆய்வாளர்கள் சுண்ணாம்புப் பாறைகளிலான ஒரு குகையின் அடித்தளத்தில், ஒரு மீட்டரே (3.3 அடி) உயரம் கொண்ட ஏழு எலும்புக்கூடுகளை அகழ்ந்தெடுத்தனர். முதலில், அவை 3-4 வயது சிறுவர்களின் எலும்புக் கூடுகள் என எண்ணியிருந்தவர்களுக்கு ஒரு வியப்பு காத்திருந்தது. அகழ்ந்தெடுக்கப்பட்ட மண்டையோடுகளில் காணப்பட்ட பற்களும், எலும்புக் கூடுகளிலிருந்த கை, கால், தோல்பட்டை எலும்புகளும் அவை பருவமடைந்த மனிதர்களுடையவை என்பதைத் தெளிவாக்கின. மண்டையோட்டில் காணப்பட்ட புடைத்த புருவம், பெருத்த கீழ்த்தாடை இவை நிமிர்ந்து நின்ற

ஆதிமனிதயினமான ஹோமோ எரக்டஸ் (HOMO ERECTUS) இனத்துடன் உறவு என்பதைக் காட்டினாலும், அவை ஜாவா மனிதனை விட வேறுபட்டவை என்பதை ஆய்வாளர் உணர்ந்தனர். ஃப்ளோரஸ் தீவு ஆதிக்குட்டை மனிதயினம் ஒருவகையான ஹோமே செபியன் (HOMO SAPIEN) வகை என்பதையறிந்து இவ்வினத்தை ஹோமோ ஃப்ளோரெஸியன்ஸிஸ் (Homo Floresiansis) என்றழைத்தனர். ஏறத்தாழ 250,000 ஆண்டுகளுக்கு முன் ஹோமே எரக்டஸ் இனத்திலிருந்து ஒரு கிளையாகப் பிரிந்து ஃப்ளோரெஸ் ஆதிக்குட்டை மனிதயினமாகப் பரிணமித்து அழிந்துபட்டது. ஆப்பிரிக்காவில் தோன்றி வெளியேறிய ஹோமோ எரக்டஸ் (Homo Erectus) எனும் நிமிர்ந்து நின்ற ஆதிமனிதயினம், ஏறத்தாழ 1.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தென்கிழக்கு ஆசியாவிலுள்ள ஜாவா வரை வியாபித்திருந்தது என்பதை ஜாவாவில் ஆய்வாளர் தூப்வா (Dubois) கண்டுபிடித்த தொல்லுயிரெச்சம் காட்டியது. ஜாவா தவிர, தென்கிழக்கு ஆசியாவில் ஆதிமனிதத் தொல்லுயிரெச்சங்கள் கிட்டாத நிலையில், ஆஸ்திரேலியாவிலுள்ள நியூ இங்லேண்ட் (New England) பல்கலைக்கழகப் பேராசிரியர் மைக்கேல் மோர்வுட் (Michael Morwood) டும், ஜகார்தாவிலுள்ள, இந்தோனேஷியத் தொல்லியலாய்வுத் துறையைச் சார்ந்த சோயெஜோனோ (Soejono R.P) என்ற ஆய்வாளரும் ஃப்ளோரெஸ் தீவின் மேற்குப் பகுதியான லியாங்புவர் (Lieng Bua) எனும் பகுதியில் ஹோமோ எரக்டஸன் தொல்லுயிரெச்சங்கள் கிட்டலாம் எனும் நம்பிக்கையில் கள ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். அப்போது ஆதிமனிதயினம் வாழ்ந்ததற்கான அறிகுறிகள், தடயங்கள் பலவற்றினைக் கண்டனர். அங்கு 800,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழங்கற்கால ஆயுதங்களையும், ஸ்டீகோடான் (Stegodon) எனும் அழிந்துபட்ட ஆதியானையினத்தின் தொல்லுயிரெச்சங்களையும் அகழ்ந்தெடுத்தனர். பின்னர் அருகிலிருந்த சுண்ணாம்புப் பாறைகளிலான பெரிய குகைகளின் அடித்தளத்தில் அகழாய்வு மேற்கொண்டனர். 6 மீ ஆழம் தோண்டியபோது மேற்கூறிய ஏழு எலும்புக்கூடுகளைக் கண்டுபிடித்தனர். அவற்றில் ஒன்று ஒரு பெண்ணுடையது என்பதை அதன் இடுப்பெலும்பின் அமைப்பை வைத்துக் கண்டறிந்தனர். ஆய்வுக்குழுவால் அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்லுயிரெச்சங்கள் 13,000த்திலிருந்து 95,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

சில மானிடவியலாய்வாளர், எடுத்த முதல் மண்டையோடு, பிறப்பில் ஊனமுற்ற முழு வளர்ச்சியடையா ஆதிமனித மண்டையோடு எனவும், இதர எலும்புகள் இளவயதுடையவர்களின் எலும்புகள் என்றும் எண்ணுகிறார்கள். ஆனால் இது தனியினம் என்பதற்கான ஆதாரங்கள் அதிகமாகவேயுள்ளன. இன்று ஆப்பிரிக்காவில் காங்கோ காடுகளில் வாழும் பிக்மி (pygmy) குட்டையினத்தவர் போலப் பரிணமித்தயினம் இவ்வினம். 1 மீட்டர் உயரத்தில் 3-4 வயது சிறுவரின் உருவம் கொண்டிருந்த ஃப்ளோரஸ் ஆதிக்குட்டையினத்தவரின் மூளையளவு ஒரு மல்கோவா மாம்பழத்தின்

அளவேயிருந்தது. இது சிம்பன்ஸியின் மூளையைவிடச் சிறியது என்றாலும், குட்டை மனிதர் எருமைமாட்டின் அளவிருந்த ஸ்டீகோடான் (Stegodow) எனும் பழம் யானையினத்தை வேட்டையாடிக் கொன்றனர் என்பதும், அவர்கள் தீயின் பயனையறிந்தவர்கள் என்பதும் தெரியவந்தது. அகழாய்வில் கூரிய கற்களால் செய்யப்பட்ட ஈட்டி முனைகள், கிழிப்பான், தகடுகள் போன்ற கல்லாயுதங்களும், குட்டை மனிதர் வேட்டையாடிய ஆமை, உடும்பு, இராட்சத எலிகள் போன்ற விலங்குகளின் தொல்லுயிரெச்சங்கள் பலவும் கிட்டியுள்ளன. ஒன்றாகக்கூடி வேட்டையாடவும், குகைகளிலும் வாழ்ந்த இவ்வினம் சங்கேத மொழிகளைப் பேசியிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

இயற்கையில் பொதுவாகச் சிறிய உருவம் கொண்ட முன்னோடிகளிலிருந்து பெரிய உருவம் கொண்ட வழித்தோன்றல்கள் பரிணமிப்பது முறை. எடுத்துக்காட்டாக ஐம்பது மில்லியன் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த நாயின் அளவேயிருந்த குதிரையினத்தின் முன்னோடியான இயோஹிப்பஸ் (Eohippes) இனத்திலிருந்து அதன் வழித்தோன்றலாக, உருவ அளவில் பெரிய இன்றைய குதிரை பரிணமித்ததைக் குறிப்பிடலாம். இதுபோலவே ஆஸ்ட்ரேலோப் பிதசைனிலிருந்து, உருவத்தில் பெரிய தற்கால மனிதர் பரிணமித்தையும் கூறலாம். அப்படியிருக்கையில் ஃப்ளோரஸ் தீவு ஆதிமனிதயினம் என் குட்டையானது? இதற்கு விளக்கம் கூறும் உயிரியலாளர் 'தீவு நியதி' (Island Rule) என்ற கோட்பாட்டை முன் வைக்கின்றனர். ஊனுண்ணிகள் உள்ள பகுதிகளில் வாழும் இதர விலங்குகள் அவற்றின் எதிரிகளை எதிர்த்துப் போராடி தம்மைப் பாதுகாத்துக்கொள்ளுமாறு, பரிணாம வளர்வில் சில சிறப்புத் தன்மைகளைப் பெறுகின்றன. அவற்றில் ஒன்று, பெரிய உடம்பைப் பெறுவது. இதற்கு எதிர்மறையாக ஊனுண்ணிகளற்ற தீவு போன்ற இயற்கையரண் வாய்ந்த பகுதிகளில் வாழும் உயிரினங்கள், காலப்போக்கில் சிறிய உருக்கொண்டவையாகப் பரிணமிப்பதையே உயிரியியலாளர் 'தீவு நியதி' என்பர். எடுத்துக்காட்டாக இன்று மேற்காப்பிரிக்காவில், லைபீரியாவில் (Liberia) வாழும் வெள்ளைப்பன்றி (Yorkshine pig) அளவே கொண்ட நீர்யானை மற்றும் ஃப்ளோரஸ் தீவில் கண்டெடுக்கப்பட்ட எருமைமாட்டளவேயிருந்த ஸ்டீகோடான் (Stegodow) ஆதியானை இந்த சிறிய ஆதியானை போலவே கிரீஸுக்கருகில் உள்ள சிசிலி, கிரீட் மற்றும் மால்டா தீவுகளில் கண்டெடுக்கப்பட்ட ஆதியானைகளின் எலும்புகள் அவை இன்றைய மாட்டின் தேக அளவையே கொண்டிருந்தன என்பதைக் காட்டுகின்றன. அதே காலகட்டத்தில் ஆசியாக் கண்டத்தில் வாழ்ந்த ஆதியானையினம் இன்றைய ஆப்பிரிக்க யானைகளை விடப் பெரியவை. இது போலவே பெரியவுடல் கொண்டு முன்னோர்களின் வழித்தோன்றல்களாக சிறியவுடல் கொண்ட ஃப்ளோரஸ் ஆதிமனிதர் தோன்றினர்.

இந்தக் குட்டை ஆதியினம் எவ்வாறு ஃப்ளோரஸ் தீவில் குடியேறியது என்பது

இன்னும் முழுவதுமாக விடைகாண இயலாத கேள்வி. ஏனெனில் கடல் மட்டம் தாழ்வாகயிருந்த பனியுகத்திலும் குறைந்தபட்சம் 20 கி.மீ அகன்ற கடலைக் கடக்க வேண்டியிருந்திருக்கும். சிறிய விலங்கினங்கள், மிதந்து செல்லும் மரக்கிளைகள், செடிகள் ஆகியவற்றைப் பற்றியும், யானை போன்ற விலங்குகள் நீந்தியும் சென்றிருக்கலாம். ஆனால் எவ்வாறு இந்த சிறிய ஆதிமனிதர் கடலைக் கடந்தனர் என்பதை ஆய்வாளர் மோர்வுட், அவர்கள் மூங்கிலிலான கட்டு மரங்களைக் கட்டி கடல் மேல் பயணித்திருக்கலாம் என விளக்குகிறார். ஆஸ்திரேலியாவில் குடியேறிய ஆதிக்குடியினர் இவ்வாறே கடலைக் கடந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் ஒரு வித்தியாசம், ஃப்ளோரஸ் ஆதிமனிதர், ஆஸ்திரேலியாவில் 50,000 ஆண்டுகளுக்கு முன் குடியேறியவர்களைவிட பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர். எவ்வளவு ஆண்டுகளுக்கு முன்னர் ஆதிக்குட்டை மனிதரின் எலும்புகள் அகழ்ந்தெடுக்கப்பட்ட படிவங்களில் எரிந்த தீக்கட்டைகள் எரிந்த எலும்புகள் ஆகியவை மீது நடத்தப்பட்ட கரிமம் 14 கால நிர்ணயம் அவர்கள் 95,000 ஆண்டுகளுக்கு முன்னிருந்து 18,000 ஆண்டுகள் வரை வாழ்ந்தனர் என்பதைக் காட்டின. ஹோமே செபியனுடன் சகவாழ்வு வாழ்ந்த ஒரே ஆதிமனிதயினம் நியாண்டர்தால் என்று இதுவரை மானிடவியலாளர் கருதியதை ஃப்ளோரஸ் கண்டுபிடிப்பு மாற்றியுள்ளது. ஏனெனில் இந்தக்குட்டை ஆதிமனிதயினம் வாழ்ந்த காலத்தில் இப்பகுதிகளில் ஹோமோ செபியன்களும் வாழ்ந்தனர். உருவத்திலும், மூளையளவிலும் பெருத்த ஹோமேசெபியன்கள் இந்தக் குட்டையான ஆதிமனிதயினத்தை அழித்திருக்கலாம் என்பது ஒரு குரூரமான வாய்ப்பு. பீகிங் மனிதர் (ஹோமோ எரக்டஸ்) நரமாமிசம் உண்டயினம் என்பதையும், ஜாவா, சுமத்ரா பகுதிகளில் கடந்த நூற்றாண்டின் ஆரம்பம் வரை நரமாமிசம் உண்ணும் பழக்கம் இருந்தது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த ஆதிக்குட்டை மனிதர் பற்றி மேலும் நடத்தப்படும் ஆய்வுகள் விடைகளைத் தரலாம்.

ஃப்ளோரஸ் தீவுப்பகுதியில் விகாரமான தோற்றம் கொண்ட, ரோமம் படர்ந்த குட்டையான மனிதர் பற்றிய ஐதிகம், டச்சுக்காரர் இப்பகுதியை ஆக்கிரமித்த காலம் வரை தீவுக்காரர்களிடையே இருந்தது. மரபுகள், ஐதீகங்கள் பழம் நினைவுகளின் வழிவந்தவை என்பதற்கு ஹொபிட் (Hobbit) எனும் ஃப்ளோரஸ் தீவில் கண்டுபிடிக்கப்பட்ட அழிந்துபட்ட ஆதிக்குட்டை மனிதயினம் பற்றிய இக்கண்டுபிடிப்பு ஒரு எடுத்துக்காட்டு.

References :

1. Hobbits of the south pacific - Time Nov. 8. 2004 (pp 42-44)

2. The people time forgot - Flores find. Natural Geographic Ap. 2005 (pp. 6-14)

3. New Hominius from late Pleistocene of Flores, Indonesia - Mike More wood Nature - 431, 28th oct.2004 (pp 1055-1061).

◆

‘ தி லிட்டில் ரிவ்யூ’

ஆர். சிவகுமார்

ஓர் சிறிய அறிமுகம்

‘இலக்கியத்தின் மதிப்பும் அதில் மக்களின் ஆர்வமும் பொதுவாகத் தாழும்போது இயல் நிகழ்வாகவும் துணிகர எழுச்சியுடனும் அதை எதிர்த்து வினையாற்றி வந்திருப்பவை எண்ணற்ற ‘சிறு பத்திரிகைகள்’ தாம் ... அவை ஒருளளள எதிர் நீரோட்டத்தை இயக்கத்தில் வைத்துள்ளன; அதன் இயக்கம் நின்று போகும் வரை அவ்வோட்டத்தைப் பற்றி அநேகமாக யாருக்கும் முழுதாகத் தெரிவதில்லை,’’

Lionel Trilling -‘The Function of the Little Magazine’

Little Magazine என்ற பதப்பிரயோகமே Little Theatre என்பதிலிருந்து வந்ததுதான். இருபதாம் நூற்றாண்டுத் துவக்கத்தில் ஐரோப்பாவில், குறிப்பாக ஃப்ரான்ஸில், தோன்றி வளர்ந்த ஒரு நாடக இயக்கம் அது. மரபான நாடகக் கருக்களிலும் மேடையேற்ற முறைகளிலும் அதிருப்தி அடைந்தவர்கள் உருவாக்கிய நவ நாடக அரங்கு அது. பிறகு தீவிர இலக்கியப் பத்திரிகைகளுக்கு ‘Little’ அந்த முன்னோட்டமாக ஆகிவிட்டது. நாம் அதைத் தமிழாக்கிக் கொண்டோம். எண்ணிக்கையில் குறைவான வாசகர்கள், குறைவான முதலீடு, குறுகிய வாழ்வு போன்ற சிறுபத்திரிகையின் தன்மைகளைச் குறிக்கும் சொல்லாக அது நிலைத்துவிட்டது.

அமெரிக்க இலக்கியம் மிகச்சிறந்த சிறுபத்திரிகைகளைக் கண்டுள்ளது. 1840ல் முதல் அமெரிக்கச் சிறுபத்திரிகையான ‘The Dial’ தோன்றியபோது அது சிறுபத்திரிகை என்று அழைக்கப்படவில்லை. வெறும் பத்திரிகைதான். அதன் உள்ளடக்கம் அதை ஒரு சிறு பத்திரிகையாக பின்னாளில் அடையாளப்படுத்தியது. அதன் ஆசிரியர் மெர்சன். விட்டு விட்டு நான்கு முறை இப்பத்திரிகை வெளியாகி உள்ளது.

நான்காவது முறை வந்தபோது (1920-29) ட்டி.எஸ். எலியட்டின் ‘பாழ்நிலம்’ கவிதையின் அமெரிக்க வெளியீட்டைத் தாங்கி வந்தது.

வணிகப் பத்திரிகைகள் வெளியிட மறுக்கும் அல்லது தயங்கும் இலக்கியப் படைப்புகளையும் சிந்தனை முறைகளையும் முதலில் வெளியிடுபவை சிறு பத்திரிகைகளே. புது எழுத்தாளர்களைக் கண்டுபிடித்து ஆதரிப்பதும் அவையே. சிறுபத்திரிகைகளில் எழுதத் துவங்கி பின்னாளில் ஓரளவு பரவலான அங்கீகாரம் பெற்றவர்களாக அமெரிக்க எழுத்தாளர்கள் ஆனார்கள். இவர்களுடைய எழுத்துகளே பிற நாட்டவர்களுக்கு அமெரிக்க இலக்கியமாக அறிமுகமாகிறது. இவர்களில் பலர் தங்களுடைய எழுத்துக்கள் சிறு பத்திரிகைகளில் வெளிவருவதில் பெருமிதம் கொண்டார்கள்.

1912ல் வெளிவரத் தொடங்கிய சிறு பத்திரிகையான 'Poetry' இன்றளவும் தொடர்கிறது. அதைத் தொடங்கியவர் Harriet Monroe என்ற பெண்மணி. புகழ் பெற்ற அமெரிக்க, பிரிட்டிஷ் கவிஞர்கள் தங்களுடைய ஆரம்பக் காலக் கவிதைகளை இதில்தான் வெளியிட்டார்கள். தாகூரின் ஆங்கிலக் கவிதைகள் முதலில் வெளியானது இப் பத்திரிகையில்தான் (1912). எலியட், ஜாய்ஸ், யேட்ஸ் ஆகியோரின் தொடக்கக் காலக் கவிதைகள் வெளியானதும் இவ்விதழில்தான். தாகூர் தொடங்கி மேற்குறிப்பிட்ட பிற கவிஞர்களை Harriet Monroe வுக்கு அறிமுகப்படுத்தியவர் எஸ்ரா பவுண்ட்தான். Poetry க்கும் பிறகு வந்த இன்னொரு முக்கிய பத்திரிகையான 'The Little Review' வுக்கும் 'வெளிநாட்டு ஆசிரியராக' பவுண்ட் இருந்தார். மிகச்சிறந்த படைப்பாளிகளையும், கலை இலக்கிய இயக்கங்களையும் இவ்விரு பத்திரிகைகளுக்கு அறிமுகப்படுத்தியவர் பவுண்ட். அவரே சில சிறு பத்திரிகைகளையும் நடத்தினார். சிறுபத்திரிகை இயக்கத்துக்கு பவுண்ட் ஆற்றிய தொண்டு பற்றி பல நூல்கள் உள்ளன.

தான் வசித்து வந்த அபார்ட்மெண்டுக்கு வாடகை கொடுக்க முடியாமலும், பத்திரிகை நடத்துவதில் உண்டான பண நெருக்கடியாலும் அப்பத்திரிகையின் ஆசிரியை தன்னுடைய இணை ஆசிரியரான தோழியுடன் சிகாகோவின் ஏரிக்கரையில் ஆறு மாதங்கள் டெண்ட் அடித்துத் தங்கியதுடன் பத்திரிகையையும் தொடர்ந்து நடத்தி வந்தது சாதாரண விஷயமல்ல. இது நடந்தது 1915ல். ஆசிரியை மார்கரெட் ஆண்டர்சன் (1891-1973). தோழி ஜேன் ஹீப், பத்திரிகை 'தி லிட்டில் ரிவ்யூ' ('The Little Review') . இப்பத்திரிகை தன்னுடைய பதினைந்து ஆண்டு கால (1914-29) வாழ்வில் செய்த சாதனைகளும் சந்தித்த நெருக்கடிகளும்தான் இக்கட்டுரையின் தளம்.

இண்டியானா மாநிலம் கொலம்பஸ் நகரில் சௌகரியமான வாழ்க்கை நடத்தி வந்த குடும்பத்திலிருந்து 1912ல் தப்பித்து வெளியேறி சிகாகோவுக்குப் போன மார்கரெட் தன்னுடைய சுயசரிதையின் முதல் பகுதியான 'எனது முப்பதாண்டு கால போர்' (1930) என்ற நூலில் எழுதுகிறார்: 'நான் ஒரு மகள் அல்ல: அப்பா இறந்துவிட்டார்; அம்மா வெகு நாட்களுக்கு முன்பே என்னை நிராகரித்து விட்டாள். நான் ஒரு சகோதரி அல்ல: என்னுடைய இரண்டு சகோதரிகளும் என்னை ஒரு பைத்தியக்காரியாகவே காண்கிறார்கள்;

சகோதரிகளுக்கிடையேயான உறவுக்கு அது ஒரு அடிப்படையாக இருக்க முடியாது! கொஞ்ச நாட்கள் ஒரு புத்தகக் கடையில் வேலை; பிறகு சில இலக்கியப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளும் நூல் மதிப்புரைகளும் எழுதினார். இவையெல்லாம் பத்திரிகை தொடர்பான அறிவைக் கொஞ்சம் கொடுத்தன. சிகாகோவின் கலை இலக்கியச் சூழலின் பாதிப்பு ஒரு கூடுதலான உற்சாகத்தைக் கொடுத்தது. கூடவே பதின்பருவத்தினர்க்கே உரிய மன அழுத்தம்; வாழ்க்கை மீது சலிப்பு, ஏதாவது செய்து வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுக்க முடிவு செய்த போது பத்திரிகை ஒன்று துவங்கும் எண்ணம் உதித்தது. அதன் பக்கங்களை உலகின் மிகச்சிறந்த உந்துதல்களைத் தரும் உரையாடல்களால் நிரப்ப வேண்டும் என்று தீர்மானித்தார்.

பத்திரிகை தொடங்கப் போவதை அறிமுகமாயிருந்த எல்லாரிடமும் தெரிவித்திருந்தார். ஊக்கமும், நம்பிக்கை இழப்புமாக எதிர்வினைகள் வந்தன. வேளாண்மை தொடர்பான பத்திரிகை ஒன்றில் பணி புரிந்தவனும் 'Dick' என்று மார்கரெட்டால் அழைக்கப்பட்டவனுமான ஒரு இளைஞன் தன்னுடைய ஊதியத்தின் கணிசமான ஒரு பகுதியை மாதந்தோறும் குறைந்தது ஒரு வருடத்துக்கு தருவதாக உறுதியளித்தான். (உறுதிமொழியை காப்பாற்றவும் செய்தான். ஒரு கட்டத்தில் பத்திரிகை அராஜகவாதத்தை ஆதரித்தபோது உதவியை நிறுத்திக் கொண்டான்) முதல் இதழ் வரும் முன்பே நியூயார்க் பதிப்பாளர்களிடமிருந்து 450 டாலர்களுக்கு விளம்பரங்கள் பெற்றார்.

முதல் இதழ் மார்ச் 1914ல் வெளியானது. நூல்கள், இசை (மார்கரெட்டே ஒரு பியானோ இசைக் கலைஞர்) கலைகள், நாடகம் மற்றும் வாழ்க்கை பற்றிய ஆக்கபூர்வமான படைப்பூக்க சக்தியோடு வெளிப்படும் விமர்சனமே பத்திரிகையின் நோக்கம் என்று முதல் தலையங்கத்தில் மார்கரெட் எழுதினார். Lindsay ன் கவிதைகள், எழுதுதல் பற்றி ஷெர்வுட் ஆண்டர்சனின் ஒரு சிறு கட்டுரை, பத்திரிகையின் ஆதர்ச புருஷரான நீட்ஷே பற்றிய ஒரு தொடரின் துவக்கம் ஆகியவை முதல் இதழில் பிரசுரமாயின. இரண்டாவது இதழில் யேட்ஸ் அமெரிக்கக் கவிஞர்களோடு ஒரு உரையாடலை நிகழ்த்தினார். ஆரம்ப இதழ்களில் பெண்ணியம் பற்றிய மார்கரெட்டின் அக்கறை வெளிப்பட்டது. குடும்பக் கட்டுப்பாட்டை பத்திரிகை ஆதரித்தது. 1914ன் முடிவில் அதனுடைய விமர்சன அக்கறை மெதுவாக மறைந்தது. யாப்பற்ற கவிதை, படிமவியல் (Imagism) , எம்மா கோல்டுமேனின் (1869-1940) அராஜகவாதம் (anarchism) ஆகியவற்றின் வலிமையான ஆதரவாளராக மாறியது. இந்த எம்மா கோல்டுமேன் ஒரு சமூக சீர்திருத்தப் போராளி மற்றும் பெண்ணியவாதி. அமெரிக்காவின் முதல் இடதுசாரி அரசியல், இலக்கிய இதழான 'மதர் எர்த்' (1906-18) என்ற பத்திரிகையை நடத்தியவர். இருபதாம் நூற்றாண்டின் புரட்சிகர சிந்தனையின் முன்னோடி என்று இன்றளவும் கருதப்படும் பத்திரிகை இது. மார்கரெட் ஆண்டர்சன் மீது பெரும் பாதிப்பை செலுத்தியவர்.

1915-16ஆம் ஆண்டுகளில் LR (Little Review) படிமவியல் குறித்த ரிச்சர்டு

ஆல்டிங்டனின் கட்டுரை மற்றும் பல கவிதைகள், மற்றும் FS ஃப்ளின்ட் மற்றும் ஆமிலெவல் ஆகியோரின் சில படிமக் கவிதைகள் போன்றவற்றை வெளியிட்டு முனைப்புடன் ஒரு இயக்கமே நடத்தியது. 1916ன் இறுதியில் படிமவியல் பற்றிய மார்கரெட்டின் ஆர்வம் தணிய ஆரம்பித்தது. கலைக்காகவே வாழ்க்கை என்ற தன்னுடைய நம்பிக்கையை பத்திரிகை சரியாக காப்பாற்றவில்லை என்ற அதிருப்தி அவருக்குத் தோன்ற ஆரம்பித்துவிட்டது. ஆகஸ்ட் 1916 இதழில் பின்வருமாறு எழுதினார்... இரண்டு ஆண்டுகளாக நடந்தும் இந்த பத்திரிகை அதனுடைய லட்சியத்தை நெருங்கிய மாதிரி தெரியவில்லை... இதில் கலை இருக்க வேண்டும். இல்லையென்றால் பத்திரிகையை நாங்கள் நிறுத்திவிடுவோம். கலை அமெரிக்காவிலிருந்து வருகிறதா அல்லது தென்கடல் தீவுகளிலிருந்து வருகிறதா என்பது பற்றி எனக்குக் கவலை இல்லை. இதை இளைஞர்கள் கொண்டு வருகிறார்களா அல்லது முதியவர்கள் கொண்டு வருகிறார்களா என்பது பற்றி எனக்குக் கவலை இல்லை. எனக்கு வேண்டியது பத்திரிகையில் அற்புதம் நிகழ வேண்டும் என்பது தான்! சமரசத்தை நான் வெறுக்கிறேன். இருந்தும் ஒவ்வொரு இதழிலும் 'அநேகமாக நன்றாக இருக்கிறது' அல்லது 'ஆர்வத்தைத் தூண்டக் கூடியது அல்லது முக்கியமானது' என்று கருதியவற்றை வெளியிட்டு நான் சமரசம் செய்து கொண்டுதானிருந்தேன். இனி அது நிகழாது. செப்டம்பர் இதழுக்கு உண்மையில் ஒரே ஒரு அழகான விஷயம் மட்டுமே இருந்தால் அது மட்டுமே பிரசுரமாகும்; மற்ற பக்கங்கள் காலியாக இருக்கும்!'

(புதுமைப்பித்தன் சொன்னதாக ஒரு விஷயம். அடுத்த இதழ் மணிக்கொடிக்கு நல்ல விஷயங்கள் பிரசுரிப்பதற்கு இல்லையென்றால் இரண்டாந்தர விஷயங்கள் பிரசுரமாகா. பெருக்கல் வாய்ப்பாடு வேண்டுமானால் அச்சடித்து மணிக்கொடியின் பக்கங்களை நிரப்பிவிடலாம். நாலு பேருக்கு பிரயோஜனமாக அது இருக்கும்.)

LR ன் 1916 செப்டம்பர் இதழின் இரண்டு பக்கங்களைத் தவிர மீதி எல்லாம் காலியாக விடப்பட்டன. அந்த இரண்டு பக்கங்களும் மார்கரெட்டையும் இணை ஆசிரியை ஜேன் ஹீப்பையும் கிண்டல் செய்யும் கார்ட்டூன்களைத் தாங்கி வந்தன. இரண்டு பேருக்கும் இருபதை ஒட்டிய வயது. புது சிந்தனை முறைகளையும், கலை இலக்கியக் கோட்பாடுகளையும் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற ஆவேசமும் வேட்கையும் அவர்களை அலைக்கழித்தன. ஒரே நேரத்தில் முதிர்ச்சியும் பொறுமையின்மையும் போட்டி போட்டுக் கொண்டு அவர்களுடைய செயல்பாடுகளைத் தீர்மானித்தன. சிகாகோ கலைப் பயிலகத்தின் ஓவியத்துறை மாணவியான ஹீப் இலக்கியக் கூட்டங்களில் மார்கரெட்டைச் சந்தித்து அறிவார்ந்த தோழியானார். உலகின் மிகச்சிறந்த உரையாடல்காரர் என்று ஹீப்பை மார்கரெட் வர்ணிக்கிறார்.

சிகாகோ இலக்கியக் குழுக்களில் அதிகம் விரும்பப்பட்ட நபராக மார்கரெட் இருந்தார். முயற்சிகளில் விடாப்பிடி, மனதின் கம்பீரம், தோற்றத்தில் அழகு

ஆகிய அம்சங்கள் பிறரை அவர் பால் ஈர்த்தன. பத்திரிகையின் முதலாண்டு முடிவுக்குள் பணக்கஷ்டம் தொடங்கியது. அறிமுகமில்லாதவர்கள் கூட நன்கொடை தந்தும், யூனிஸ் டியட்ஜென்ஸ் என்ற பெண் கவிஞர் தன்னுடைய வைர மோதிரத்தைத் தந்தும் 2000 சந்தாதாரர்கள் இருந்தும் மாதந்தோறும் 60 பக்க இதழைத் தொடர்ந்து நடத்துவதில் சிரமம் ஏற்பட்டது. அராஜகவாதத்தை ஆதரித்தது ஆதரவாளர்கள் சிலரை அந்நியப்படுத்தி பணம் வரும் வழிகளை அடைத்தது. மிக எளிமையாக வாழ்ந்தும் பணம் போதவில்லை. குடியிருந்த அபார்ட்மென்ட்டுக்கு வாடகை கொடுக்க முடியாமல் சிகாகோவின் ஏரிக்கரைக்குப் போய் ஏறத்தாழ ஆறு மாதங்கள் மார்கரெட் தோழியுடன் வாழ்ந்தார். அப்போது அவரிடமிருந்ததெல்லாம் ஒரே ஒரு தொப்பி, ஒரு சட்டை, ஒரு சூட். ஆனால் எல்லாரும் அவரை ஒரு செல்வந்தக் குடும்பத்துப் பெண் என்றே எண்ணினார்கள். மிடுக்கான நடையும் பாவனையில் கம்பீரமும் இருந்ததே அதற்குக் காரணம். இரவில் தங்கள் துணிகளை ஏரியில் துவைத்தும், ஒருவருக்கொருவர் தலைமுடி வெட்டிக் கொண்டும் தோழிகள் இருவரும் சிக்கனமாக வாழ்ந்திருக்கிறார்கள்.

மார்ச் 1917ல் LRஐ இரண்டு பெண்களும் நியூயார்க்குக்கு கொண்டு போனார்கள். இது பத்திரிகையின் இரண்டாவது காலகட்டம். தன்னுடைய லட்சியங்கள் நிறைவேறிய முக்கிய பகுதி இது என்று பிறகு மார்கரெட் அபிப்பிராயப்பட்டார். 1913-14ஆம் ஆண்டுகளில் லண்டனில் இருந்த எஸ்ரா பவுண்டுடன் மார்கரெட்டுக்குக் கடிதப் போக்குவரத்து இருந்தது. LR ன் சில இதழ்களைப் பார்த்த பிறகு தானும், ட்டி.எஸ்.எலியட்,ஜேம்ஸ் ஜாய்ஸ் போன்றோரும் பங்கு கொள்ளும் அதிகாரப்பூர்வ பத்திரிகையாக LR இருக்க வேண்டும் என்று விரும்புவதாக பவுண்ட் மார்கரெட்டுக்கு எழுதினார். ஐரோப்பிய, பிரிட்டிஷ் எழுத்தாளர்களின் புதுவகை எழுத்துக்களை அடையாளம் கண்டு பத்திரிகைக்கு அவற்றை அனுப்புவார் என்று அவர் மீது நம்பிக்கை கொண்டு 1917 மே இதழ் முதல் LRன் வெளிநாட்டு ஆசிரியராக பவுண்ட் நியமிக்கப்பட்டார். பவுண்டுக்கு மிகையாக சுதந்திரம் கொடுக்கிறார் என்று கொஞ்ச நாட்களிலேயே பவுண்டின் எதிரிகள் மார்கரெட் மீது குற்றம் சாட்டினார்கள். ஐரோப்பாவின் நவீனத்துவ எழுத்தாளர்கள், ஜப்பானிய ஹைகூ கவிஞர்கள் ஆகியோரின் எழுத்துக்களை LRக்குப் பெற்றுத் தந்ததன் மூலம் அதற்கு ஒரு சர்வதேச அந்தஸ்தை பவுண்ட் அளித்தார். 1917 ஜூன் இதழ் முதலாக பத்திரிகையின் முகப்பில் வெளியான ஆர்வத்தைத் தூண்டும் ‘ A Magazine of the Arts, Making No Compromise with the Public Taste’ என்ற வாசகத்தை தந்தது பவுண்ட்தான். (கசடதபற, இதழ் 6 - மார்ச் 1971 - ‘அக்கம் பக்கம்’ என்ற தலைப்புள்ள ஆசிரியர்க்கான பகுதியில் கி.வா. ஜகந்நாதன் தன்னுடைய விமர்சனக் கட்டுரைகளில் உயிரோடிருக்கிற எழுத்தாளர்களின் நூல்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாத பழக்கத்தைக் கிண்டல் செய்து ஒரு பத்தி வெளியானது. அதன் இறுதிப் பகுதி இப்படி இருக்கிறது : கடைசியாக ஒரு விஷயம். ஜேம்ஸ் ஜாய்ஸின் யுலிசிஸ் நாவலை வெளியிட்ட லிட்டில் ரெவ்யூ (The Little Review) இலக்கியப் பத்திரிகைக்கு இரண்டாயிரம் சந்தாதாரர்களே

இருந்தார்கள். அந்தப் பத்திரிகையின் கொள்கைப் பிரகடன வாசகம் இது: ‘‘பொது மக்களின் ரசனையோடு சமரசம் செய்துகொள்ளாத பத்திரிகை - தி லிட்டில் ரெவ்யூ).

நியூயார்க் காலகட்டத்தில் பிரசுரிக்கப்பட்ட எழுத்தாளர்களின் பட்டியல் எலியட், யேட்ஸ் லேடி க்ரிகரி, ஃபோர்டு மேடக்ஸ் ஃபோர்டு என்று நீள்கிறது. பெரும்பாலும் ஜனரஞ்சக பத்திரிகைகளில் பிரசுர சாத்தியம் அற்ற அவர்களுடைய எழுத்துக்கள்தான் அவை. அரசு அதிகாரிகளோடு LRக்கு ஏற்பட்ட முதல் உரசல் அக்டோபர் 1917ல் நிகழ்ந்தது. விண்டம்லெவிஸ்ஸின் Cantleman’s Spring - Mate என்ற ஒரு கதை மிருகத்தனமாக்கப்பட்ட உலகின் மிருகத்தனமான பாலியலை விவரித்திருந்தது. பொதுப்பண்பாடு அவமதிக்கப்பட்டதாக நினைத்த தணிக்கை அதிகாரிகள் அவ்விதழின் பிரதிகளைக் கைப்பற்றினார்கள். இந்தத் தணிக்கைச் செயலைக் கண்டித்து மார்கரெட் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து அதில் தோற்றுப் போனார். பிப்ரவரி 1919க்கான இதழ் ஃப்ரெஞ்ச் இலக்கியத்துக்கான சிறப்பிதழாக வந்தது. Laforgue, Rimbaud, Remy de Gourmont மற்றும் சிலரின் கவிதைகளை பவுண்ட் அறிமுகப்படுத்தினார். படைப்புகள் பெரும்பாலும் ஃப்ரெஞ்ச் மொழியிலேயே வெளியாயின.

LRன் ஆகச்சிறந்த சாதனை ஜேம்ஸ் ஜாய்ஸின் யுலிசஸ் நாவலைத் தொடராக (23 பகுதிகளை) வெளியிட்டதுதான். ஜாய்ஸை மார்கரெட்டுக்கு அறிமுகப்படுத்தியவர் பவுண்ட். ஜாய்ஸின் முதல் நாவலான The Portrait of the Artist as a young Man பற்றி மார்கரெட் ஒரு விமர்சனக் கட்டுரை எழுதி முன்பே வெளியிட்டிருந்தார். ஆங்கிலத்தின் முதல் நவீனத்துவ நாவல் என்றும் உரைநடையில் ஒரு காவியம் என்றும் கருதப்படும் யுலிசஸ் உலக இலக்கியத்தின் ஒரு சிகரச் சாதனை என்று கருதப்படுகிறது. இங்கிலாந்திலிருந்து வெளிவந்த பத்திரிகையிலும் அமெரிக்காவில் லிட்டில் ரிவ்யுவிலும் ஒரே நேரத்தில் யுலிசஸ் நாவலைத் தொடராக வெளியிட பவுண்ட் ஏற்பாடு செய்தார். ஆனால் மார்ச் 1918 இதழில்தான் யுலிசஸ் முதலாவதாக வெளியாகத் தொடங்கி டிசம்பர் 1920 வரை 14 அத்தியாயங்கள் 23 பகுதிகளாக வெளியாயின. Egoist ல் 1919 ஆம் வருடம் 4 அத்தியாயங்கள் வெளியாயின. பவுண்ட் அனுப்பி வைத்த நாவலின் முதல் பகுதியின் ஆரம்ப வரிகளைப் படித்த உடனேயே மார்கரெட் உணர்ச்சிப் பெருக்குடன் ஹூப்பிடம் சொன்னாராம்: ‘நமக்கு இனி எப்போதும் கிடைக்க முடியாத மிகச் சிறந்த படைப்பு இதுதான்... நம் வாழ்க்கையில் நாம் முனைப்புடன் ஈடுபடும் கடைசி செயல்பாடாக இது இருந்தாலும் பரவாயில்லை, இதை அச்சேற்றியே தீருவோம்’.

நாவலின் பதின்மூன்றாவது பகுதியைப் படித்துவிட்டு ஒரு வாசகர் எழுதிய கடிதத்தின் சில வரிகளை மார்கரெட் தன்னுடைய சுயசரிதையில் குறிப்பிடுகிறார்: ‘தாளை அச்சு மூலம் மாசுபடுத்தும் சாக்கடை....

எழுதியவரின் மனச் சகதியைப் பற்றிக்கூட அவ்வளவு வெறுப்பில்லை; இந்த அழுக்கையும் இந்த கழிவையும் வெளியிட்ட அழுகல் மனங்களை நான் வெறுக்கிறேன். அச்சின் மூலம் இளம் மனங்களைச் சேருமே. அதன் பயங்கரம். கடவுளே... இதற்குப் பதில் அளித்து மார்கரெட் பின் வருமாறு எழுதினாராம். 'இந்தப் படைப்பை இன்றைய இலக்கியத்தின் சிகரமாக நான் கருதுகிறேன். என்னுடைய திறமையில் பாதி உள்ள ஒருவர் கலை, விஞ்ஞான வாழ்க்கைப் பற்றிய உம்முடைய அறியாமையை ஐந்து நிமிடங்களில் அம்பலப்படுத்திவிடுவார். நீர் ஜேம்ஸ் ஜாய்ஸை வெறுப்பதில் ஆச்சர்யமே இல்லை... அவர் உமக்காக எழுதவில்லை. தனக்காகவும், இந்த வாழ்க்கை அவரை எப்படி புண்படுத்தியது என்பதைத் தெரிந்துகொள்ள அக்கறை உடையவர்களுக்காகவும் எழுதுகிறார்.'

23 பகுதிகளில் நான்கு அஞ்சல் துறையால் கைப்பற்றப்பட்டு ஆபாசம் என்று குற்றம் சாட்டப்பட்டு எரிக்கப்பட்டன. அந்த நெருக்கடியான காலகட்டத்தைப் பின் வருமாறு மார்கரெட் விவரிக்கிறார்: 'அது கழுவேற்றப்பட்டதற்கு சமம். ஜாய்ஸின் கையெழுத்துப் பிரதியைக் காப்பாற்ற நாங்கள் எடுத்த அக்கறை; அச்சுக் கூலிக்கான பில்கள் தந்த கவலை; கண்ணீர், வேண்டுகோள்கள், மூர்க்கமான போராட்டங்கள் என்று எல்லாவற்றையும் பயன்படுத்தி அச்சிடுபவர், பைண்டு செய்வோர், தாள் விற்றவர் என்று எல்லாரையும், பணத்துக்கான எந்தவித உத்திரவாதமும் இல்லாமல், வேலை செய்ய வைத்து, உறையிலிட்டு, தபால் தலை ஒட்டி, அஞ்சலில் சேர்த்து நம் தலைமுறையின் ஆகச் சிறந்த இலக்கியப் படைப்பை உலகம் எப்படி எதிர் கொள்ளப் போகிறது என்று எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருக்கும் போது அஞ்சல் துறையிலிருந்து 'எரிக்கப்பட்டன' என்று அறிவிப்பு வந்தால் எப்படி இருக்கும்?'

யுலிசஸின் 13ஆம் பகுதியைப் படித்து விட்டு தீய ஒழுக்கங்களைத் தடுப்பதற்கான ஒரு அமைப்பு அதை ஆபாசம் என்று சொல்லி ஒரு குற்றவியல் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தது. பிரபல வழக்கறிஞரும் கலைப் புரவலருமான ஜான் க்வின் என்பவர் LR சார்பாக வாதிட்டார். வழக்கில் மார்கரெட் தோற்றார். பத்திரிகையின் ஆசிரியர்களுக்கு நூறு டாலர் அபராதம் விதிக்கப்பட்டது. அதைக் கட்ட மறுத்து சிறைக்குப் போக மார்கரெட் முன் வந்தார். நண்பர்களின் அறிவுரையின் பேரில் அந்த முடிவைக் கைவிட்டார். யுலிசஸ் நாவலை கடுமையாக எதிர்த்த ஒரு பெண்மணி அந்த அபராதத்தைக் கட்டினார். வழக்கு நடந்து கொண்டிருந்த போதே கலைக்கான சுதந்திரம் பற்றியும் தோழிகள் இருவரும் LRல் சில கட்டுரைகளை எழுதினார்கள். யுலிசஸ் சர்ச்சையின் போது நிதி உதவி தொடர்பான சில சில்லறை மனத்தாங்கல்கள் காரணமாக பவுண்ட் கொஞ்சம் கொஞ்சமாக LRலிருந்து தன்னை விலக்கிக் கொண்டார். யுலிசஸ் பிரசுரமும் நின்று போயிற்று. பிறகு அது முழு வடிவத்தில் 1922ல் பாரிசில் வெளியாயிற்று.

நியூயார்க் காலகட்டத்தில்தான் அமெரிக்கர்களுக்கு மிகக் கொஞ்சமே தெரிந்திருந்த இலக்கிய இயக்கங்களான க்யூபிசம், எக்ஸ்ப்ரஷனிசம், சிம்பலிசம் போன்றவற்றை விரிவாக LR அறிமுகப்படுத்தியது. யேட்ஸ்,

பவுண்ட், எலியட், ஆல்டஸ் ஹக்ஸ்லி ஆகியோரின் எழுத்துக்கள் வெளியாயின. ஒரு பிரத்யேக இதழ் Brancusi ன் சிற்பங்கள் மற்றும் அவை பற்றிய கட்டுரைகளுக்காக வெளியானது. ஹென்றி ஜேம்ஸ், W.H. ஹட்சன், பவுண்ட் ஆகியோர்க்கும் சிறப்பிதழ் வெளியிடப்பட்டன.

வருடத்துக்கு பத்தாயிரம் டாலர்கள் தேவைப்பட்டதால் பண நெருக்கடி நிரந்தரப் பிரச்சினையாக இருந்தது. மாதந்தோறும் பத்திரிகையைத் தயாரிக்க அனுப்ப என்று தொடர்ந்து உழைக்க வேண்டியிருந்ததால் அதை 1921 செப்டம்பரில் காலாண்டிதழாக மாற்றினார்கள்.

பத்தாவது ஆண்டு முடிவில் பத்திரிகை அதன் இயல்பான முடிவுக்கு வந்துவிட்டதாக மார்கரெட்டுக்குத் தோன்றியது. யுலிசஸ் என்ற மகத்தான படைப்பைப் பிரசுரித்ததோடு உண்டான மன நிறைவோடு வெளியீட்டை நிறுத்திக் கொள்ள எண்ணினார். தணிக்கைக் கெடுபிடி, பணக்கஷ்டம், பொது மக்களின் மந்தத்தனம் ஆகியவை கொடுத்த மன உளைச்சலும், அம்முடிவுக்கு அவர் வருவதற்கான கூடுதல் காரணங்கள். ஆசிரியர் வேலையை ஹீப்பிடம் கொடுத்துவிட்டு மார்கரெட் பாரிஸ் போய்விட்டார். பத்திரிகையை நிறுத்த ஹீப்புக்கு விருப்பமில்லை. கொஞ்ச நாட்களில் மார்கரெட் பத்திரிகையின் மீது மீண்டும் அக்கறை காட்டினார். பத்திரிகை பாரிசிலிருந்தே கால ஒழுங்கின்றி வெளி வரத் தொடங்கியது. இது LRன் மூன்றாவது காலகட்டம். மார்கரெட் ஹெமிங்வேயைப் பாரிசில் சந்தித்து அவருடைய கதைகள் சிலவற்றை வாங்கி வெளியிட்டார். இக்காலகட்டத்தில் பாரிசில் பரபரப்பாக விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த டாடாயிசத்திலும், சர்ரியலிசத்திலும் LR அக்கறை காட்டியது. டாடாயிசத்தின் முக்கிய எழுத்தாளர்களான Tzara மற்றும் Cocteau ஆகியோரின் எழுத்துக்களை LR வெளியிட்டது. டாடாயிசத்தின் தொடர்ச்சியாக வந்த சர்ரியலிசத்தை இரண்டு ஆண்டுகள் ஆதரித்து வளர்த்தது. பிறகு 1926-29 ஆம் ஆண்டுகளில் LRல் வெளியான எதுவும் 'வீரியம்' கொண்டிருந்ததாக மார்கரெட்டுக்குத் தோன்றவில்லை. கேண்டின்ஸ்கி, மீரோ, பிகாஸோ ஆகியோரின் ஓவியங்களையும் சிற்பங்களையும் படியெடுத்து வெளியிடுவதைத் தவிர வேறொன்றும் சாதித்ததாக மார்கரெட்டுக்குத் தோன்றவில்லை.

மே 1929ல் பத்திரிகையின் கடைசி இதழை வெளியிட தோழிகள் இருவரும் முடிவு செய்தார்கள். அது வித்தியாசமாக இருக்க வேண்டுமென்று சேர்ந்திருந்த படைப்புகளை ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள். சமகாலத்திய முன்னணி கலைஞர்களும் எழுத்தாளர்களும் தங்களுடைய வாழ்வைப் பற்றியும் படைப்பு பற்றியும் என்ன நினைக்கிறார்கள் என்று சொல்லச் சொல்லி பத்து கேள்விகள் அடங்கிய பட்டியல் ஒன்றை அவர்களுக்கு அனுப்பினார்கள். 'வேறு ஒரு மனிதரோடு ஏன் உங்களுடைய வாழ்க்கையை இடம் மாற்றிக் கொள்ள மாட்டீர்கள்? ஏன் தொடர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்? இன்றைய கலையைப் பற்றி உங்கள் மனப்பான்மை என்ன? என்பவை போன்று அப்பட்டியலில் கேள்விகள் இருந்தன. அவற்றுக்குப் பதில் சொல்ல அவர்கள் தேர்ந்தெடுத்தவர்களில் ஷெர்வுட் ஆண்டர்சன், Cocteau, Tzara, ஹாவ்லாக் எல்லிஸ், ஹெமிங்வே, ஆல்டஸ் ஹக்ஸ்லி, ஜேம்ஸ் ஜாய்ஸ், பெர்ட்ரண்ட்

ரஸ்ஸல், பவுண்ட், எலியட் ஆகியோர் அடங்குவர். கடைசி இதழ் இவர்களுடைய பதில்களைத் தாங்கி வந்தது. ஆசிரியர்கள் இருவருக்கும் யாருடைய பதிலும் திருப்தி தரவில்லை. தங்களுடைய ஏமாற்றத்தைப் பதிவு செய்ய தனித்தனியே தலையங்கங்கள் எழுதினார்கள். மார்கரெட் எழுதியதிலிருந்து சில வரிகள் : 'ஒருவர் பியானோ வாசிக்கத் துவங்கும் போதோ அல்லது கவிதை எழுதத் துவங்கும் போதோ இருக்கும் வெறி கலந்த ஆர்வத்துடன் LRஐத் தொடங்கினேன். நான் விரும்பியது உத்வேகம் தரும் உரையாடல்களைக் கலைஞர்களோடு வைத்துக் கொள்வதைத்தான்; அவர்களுக்குத்தான் கருத்துக்கள் இருக்கும்... கலைஞனுக்கும் தான் எதைப்பற்றி பேசுகிறோம் என்பது தெரியவில்லை என்று இந்த இதழ் காட்டுகிறது. தான் என்ன பேசுகிறோம் என்பது தெரியாமல் இருக்கும் நபர்களுக்காக இந்த பத்திரிகையை என்னால் தொடர்ந்து நடத்த இயலாது. இன்னொரு வகை இதழைத் தொடங்க எண்ணம் உண்டு. இலக்கியத்துக்கோ பிற கலைஞர்களுக்கோ அது இடந்தராது; அக்கலைகளின் மனோவியலைப் பற்றியதாக இருக்கும்.

1942 வரை பாரிசில் வசித்த மார்கரெட் அமெரிக்காவுக்கும் திரும்பி மீண்டும் 1955ல் பாரிசுக்கும் போயிருக்கிறார். 1973ல் அங்கே இறந்து போன மார்கரெட் தன் நினைவுக் குறிப்புகளை My Thirty years War (1930), The Fiery Mountains (1951), The Strange Necessity (1962) என்ற தலைப்புகளில் மூன்று நூல்களாக வெளியிட்டுள்ளார். ஒரு தலைக் காதலை மையமாகக் கொண்ட ஒரு சிறு நாவலை (This Thing called Love) எழுதியுள்ளார். ஆனால் அது பிரசுரமாகவில்லை.

தன்னுடைய இருபத்திரண்டு வயதில் தொடங்கி முப்பத்தேழு வயது வரை நடத்திய ஒரு சிற்றிதழில் சமகாலத்திய ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் நிகழ்ந்த கலை, இலக்கிய, சமூகவியல் செயல்பாடுகள் மற்றும் சிந்தனைகளை உடனுக்குடன் பிரதிபலித்ததால்தான் மார்கரெட் ஆண்டர்சனும் அவர் நடத்திய Little Review ம் இன்றும் நினைவு கூரப்படுகிறார்கள். புதியனவற்றையும் மாற்றங்களையும் உடனே அடையாளம் கண்டு விவாதத்திற்கு உட்படுத்தும் சிறு பத்திரிகைகள் தனிப்பட்ட வகையில் மறைந்து போவது ஒரு பிரச்னையே இல்லை. ஒரு இயக்கம் என்ற வகையில் அவற்றின் தொடர்ச்சி ஒரு மாற்றப்பட முடியாத ஒரு இயங்கியல் விதி.

அமெரிக்கா, ஃப்ரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஒரு சிறுபத்திரிகை முன்னிறுத்தும் புதிய சிந்தனை முறை இருபது ஆண்டுகளில் பொது நீரோட்டத்தில் ஏற்கப்பட்டு விடுவதாக சொல்லப்படுகிறது.

இந்த வகையில் தமிழ்ச் சிறுபத்திரிகைகள் மேற்கொள்ளும் செயல்பாடுகளுக்கும் தமிழ்ச் சமூகத்தின் பொதுமன ஓட்டத்துக்கும் இருந்து வரும் பிரம்மாண்ட இடைவெளிக்குப் பல காரணங்கள் உள்ளன. அதனாலேயே தமிழ்சிறுபத்திரிகைகளின் விடாப்பிடியான தொடர்ச்சிக்கு ஒரு தேவையும் இருக்கிறது. ◆

தகடூர் நாட்டுச் சுடுமண் பொம்மைகள்

ர. பூங்குன்றன்

தகடூர் நாடு அதியமான்களின் ஆட்சிக்குப்பட்டிருந்தது. இவர்களே அசோகன் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் சத்தியபுத்திரர்கள் என்பது திருக்கோயிலூர் அருகில் உள்ள ஜம்பை என்ற ஊரில் உள்ள கல்வெட்டால் உறுதிப்படுகிறது, தகடூர் நாடு மருத வளமும். முல்லை வளமும் ஒருங்கே பெற்றிருந்தது, கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து இப்பகுதியை அதியமான்கள் சிறப்புற ஆட்சி செய்தார்கள். அதியமான்களின் ஆட்சிச் சிறப்பை அவ்வையார் விரிவாகப் பாடியுள்ளார். சிற்றரசர்களிலேயே அதிக பாடல்களைப் பெற்றவன் அதியமான்தான். அதியமானைப் பற்றிய கையறுநிலைப்பாட்டு அந்த வகைப்பாடல்களிலேயே தலைசிறந்த பாட்டு. இந்தப் பாட்டைப் படிப்பவர்கள் மனத்தைத் தொடாமலிருக்காது.

தகடூர் நாடு சங்க காலம் முதல் பல்வேறு கலைகளுக்கு உறைவிடமாக விளங்குகிறது. கட்டடக்கலை, சிற்பக்கலை, மண்ணீட்டுக்கலை, ஓவியக்கலை, செப்பும் படிமக்கலை எனப் பல்வேறு கலைகள்

செழித்து வளர்ந்த பகுதி தொல் பழங்கால ஓவியங்கள் நிறைந்த பகுதியும் இதுவே. தகடூர் நாட்டில் பல சுடுமண் பொம்மைகள் கிடைத்துள்ளன. அவை கிடைக்கின்ற பகுதிகள் அனைத்தும் 'மண்டு' என்று அழைக்கப் பெறுகின்றன.

தமிழ் இலக்கியத்தில் சுடுமண் பொம்மைகள் பற்றி இடைப்பிற வரலாறு அமைந்துள்ளது, ஐங்குறுநூற்றில் 262ஆம் பாட்டில் தினைப்புனத்தை அழிக்க வரும் யானையை விரட்ட புலியின் சுடுமண் பொம்மையைச் செய்து வைத்திருந்தார்கள் என்று கூறப்பெறுகின்றது. பதிற்றுப்பத்து பதிகங்களிலும் சிலப்பதிகாரத்திலும் சதுக்கப்பூதங்கள் பற்றிய குறிப்புகள் வருகின்றன. சதுக்கப்பூதங்களும் மண்ணால் செய்யப்பெற்று சுடப் பெற்றிருக்க வேண்டும். மணிமேகலையில் சக்கர வாளக்கோட்ட முரைத்த காதையில் சக்கரவாளம் சுடுமண்ணால் செய்யப்பட்டிருந்தது என்பதைக் குறிக்கின்றது, சக்கரவாளம் என்ற சுடுமண் பொம்மை இலங்கையில் அனுராதபுரத்தில் கிடைத்துள்ளது. இது மணிமேகலையில் வருணித்திருப்பதைப் போலவே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சம்பா பதிதன் ஆற்றல் தோன்ற
எங்கு வாழ் தேவருங் கூடிய இடத்தினில்
சூழ்கடல் வளைஇய ஆழியங்குன்றத்து
நடுவு நின்ற மேருக்குன்றமும்
புடைய னின்ற ஏழுவகைக் குன்றமும்
நால் வகை மரபின் மாபெருந்தவும்
ஓரீ ராயிரஞ் சிற்றுடைத் தீவும்
பிறவும் ஆங்கதன் அடவகையுரியன
பெறுமுறை மரபின் அறிவுவரக் காட்டி
ஆங்குவா ழுயிர்களும் அவ்வுயிரிடங்களும்
பாங்குற மண்ணீட்டிற் பண்புறவகுத்து
மிக்க மயனால் இழைக்கப்பட்ட
சக்கர வானக் கோட்ட மீங் கிது காண் (191-201)

சக்கரவாளக்கோட்டம் சக்கரவாளத்தைத் தன்னுள் வைத்திருக்கும் கோட்டமாகும். இக்கோட்டத்தில் உள்ள சக்கரவாளம் சுடுமண்ணால் (மண்ணீட்டால்) ஆனது. கடல் சூழ்ந்த உலகில் ஆழிக்குன்றம் நிற்கின்றது. அதன் மையத்தில் மேருமலை உள்ளது. மேருமலையைச் சுற்றிலும் நின்ற ஏழு வகையான குன்றங்கள் உள்ளன. நான்கு வகைப்பட்ட பெருந்தீவுகளும் இரண்டாயிரம் சிறு தீவுகளும் உள்ளன. இவற்றின் தன்மைகளை விளக்கிக் காட்டினாள் சம்பாபதி தெய்வம். இத்தீவுகளில் வாழும் உயிரினங்களையும் அமைத்துள்ளனர். இவை அனைத்தும் சுடுமண்ணால் செய்யப்பெற்றவை.

சுடமண் பொம்மைகளைச் செய்தவர்கள் மண்ணீட்டாளர் என்று அழைக்கப் பெற்றனர். மண்ணீட்டாளர் வேட்கோவர் என்றும் அழைக்கப் பெற்றனர். மண்ணீட்டாளர் தெய்வ உருவங்களை உருவாக்குபவர்கள். ஆகையால் அவர்களே பூசாரிகள் ஆகவும் செயல்பட்டனர். பல சிறுதெய்வங்களுக்கு இந்த

மரபு தொல்பழங்காலம் முதல் வழக்கத்தில் உள்ள பழக்கமாகும். நடுகற்கோயில்களில் குதிரை வைத்தல், மாட்டின் உருவாரம் செய்து வைத்தல் மனிதர்களின் உருவரம் செய்து வைத்தல் எனப் பல பொம்மைகளை இவர்கள்தான் இன்று வரை செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தகடூர் நாட்டுப் பகுதியில் கிடைக்கிற சுடுமண் பொம்மைகளைப் பற்றி ஆய்வுகள் நடந்த வண்ணம் உள்ளன. இதுவரையில் கிடைத்தவற்றில் ஆண் உருவங்களே மிகுதி. கடகத்தூரில் அரசர் உருவம் ஒன்று கிடைத்துள்ளது. ஆய்வாளர்கள் ஆண் உருவத்தை இயக்கன் என்றும் பெண் உருவத்தை இயக்கி என்றும் கூறுகின்றனர். இந்தக் கருத்துக்கள் ஆய்வுக்குரியவை. காரணம் இந்தப் பொம்மைகள் கிடைக்குமிடங்கள் அனைத்தும் மண்டுகள்.

மண் - மஞ்சு - மன்று

தகடூர் நாட்டில் பல ஊர்களில் மண்டுகள் உள்ளன. மண்டு என்பது பண்டை நாளைய மன்று என்பதன் திரிபு. பெரும்பாலான மண்டுகளில் நடுகற்களும் உள்ளன. அவை கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் 8 ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவை மன்று மன்றம் ஆகிய சொற்கள் பண்டை நாளைய சமூக செயல்பாடுகளின் மையமாகத் திகழ்ந்தது. வில்போர். மல்போர். விளையாட்டு. பஞ்சாயத்து. கலை நிகழ்ச்சிகள் போன்ற அனைத்துச் செயல்பாடுகளும் மன்றத்தில்தான் நிகழ்ந்தன. அதனால் மன்றம் சமூகத்தின் கருவாக விளங்கியது எனலாம். இதன் தொடர்ச்சியாக பல்லவர்கள் காலத்திலும் மன்றம் பெருமை பெற்றுவிளங்கியது. அதனால் தான் நடுகற்களை அங்கு நட்டுவழிபட்டனர். நடுதல் வழிபாட்டின் போது சுடுமண் பொம்மைகளைச் செய்து வழிபாடு செய்து வந்திருக்க வேண்டும். கி.பி.4ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.8ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தைச் சார்ந்தவை. இந்தச்

சுடுமண் பொம்மைகள். நடுகற்களும் கி.பி.6ஆம் நூற்றாண்டிலிருந்து 8ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவை நடுகல் மண்டுகளில் நடுவதற்குமுன் தாய்வழிபாடு நடைபெற்றிருக்க வேண்டும். தாய் வழிபாட்டிற்கான சின்னங்களாகத்தான் இந்தச் சுடுமண் பொம்கைள் கிடைக்கின்றன எனலாம். இதற்கு சிந்து சமவெளி தாய்த் தெய்வ உருவகங்களைச் சான்றாக காட்டலாம்.

சிந்துச் சமவெளியில் நூற்றுக்கணக்கான சுடுமண் பொம்மைகள் கிடைத்துள்ளன. அவற்றைப் பற்றி ஆய்வு செய்தவர்கள் சிந்து சமவெளியில் தாய்வழிபாடு மேலோங்கி இருந்து என்று கூறுகின்றனர். இது பற்றி சர் ஜான் மார்ஷல் கூறுவது எடுத்துக்காட்டத்தக்கது.

" 'அன்னை' அல்லது 'பேரன்னை' பிற்காலத்திலேயே தோன்றிய சக்தியைத் தோற்றுவித்த மூலப்பொருளின் பிரகிருதி முதலுருவாக்கம். அவளுடைய பிரதிகளே கிராம தேவதைகள் அல்லது கிராமச் சிறு பெண் தெய்வங்கள். அவற்றின் பெயர்களும் தல சரிதைகளும் கணக்கிடலங்கா. எனினும் அவை யாவும் ஒரே பொருளையே குறிக்கின்றன. அந்த மூல சக்தியே வளத்தின் தெய்வம். இப்பெண் தெய்வங்கள் யாவும் ஆரியர்க்கு முற்பட்ட ஆரியரல்லாத மக்களிடையே செல்வாக்குடையனவாயிருந்தன என்பதில் ஐயமில்லை. ஆரியருக்கு முற்பட வாழ்ந்த பூர்வீகக் குடிமக்கள் சிலர் இந்து சமயத்தை ஏற்கவில்லை. அத்தகைய மக்களிடையே பெண் தெய்வ வழிபாடு மறைந்து விடவில்லை என்பதை நினைவுறுத்துகின்றன."

மார்ஷல் கருத்துகளை உறுதிப்படுத்தும் வகையில் எரன்பேல்ஸ் என்பவர் பல தாய்த் தெய்வங்களைப் பற்றிய செய்திகளைத் தொகுத்துள்ளார். அந்தச் செய்திகளும் பொதுவாக இந்திய மக்களிடையே தாய்த் தெய்வ வழிபாடு மேலோங்கி நின்றதைக் காட்டுகின்றன. தாய்த் தெய்வ வழிபாடு மேலோங்கி நிற்பதற்குக் காரணம் நம் நாட்டில் பரவியிருந்த வேளாண்மைத் தொழிலே ஆகும்.

வேளாண்மை தொடக்க காலத்தில் பெண்களின் கைகளிலிருந்தது. அதனால் பெண் வேளாண்மை சமூகத்தால் தலைமை சான்றவளாகக் கருதப் பெற்றாள். தெய்வமாகக் கருதப் பெற்றாள். வேளாண்மை தழைத்த எகிப்து, மெசமடோமிளா, ஈரான், கோனுர் போன்ற நகரகங்களில் தாய்த் தெய்வ வழிபாடே மேலோங்கி நின்றது. தொல் நாகரிகம் தழைத்து ஆதிச்ச நல்லூரிலும் தாய்த் தெய்வமே பெருமை பெற்றிருந்தது. உலகம் முழுவதும் வேளாண்மை நாகரீகம் தழைத்த இடங்களில் தாய்த் தெய்வ வழிபாடுதான் மேலோங்கி நின்றது. அதன் தொடர்ச்சியாக இன்றுவரை நம் சமூகத்தில் நிலை பெற்றுள்ளது. தாய்த் தெய்வங்களின் பெயர்கள் வேறுவேறாக இருப்பினும் பொதுவாகத் தாயை வணங்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் செய்யப் பெற்றன.

தகடூர் நாட்டுச் சுடுமண் பொம்மைகளில் ஒன்று சாதவாகன கலைப்பாணியில் அமைந்துள்ளது. இந்தப் பொம்மை சாதவாகன

நாட்டிலிருந்து கொண்டு வரப்பெற்றிருக்க வேண்டும் அல்லது சாதவாகன நாட்டிலிருந்து வந்தவர்கள் இங்கேயே செய்திருக்க வேண்டும். இந்தப் பொம்மையை இயக்கன் உருவம் என்று கூறுகின்றனர். இது குழந்தையின் உருவாகமாகவும் இருக்கலாம். இதுபோலவே பண்டை நாளிலும் ஆண் குழந்தை வேண்டி நிற்பவர்கள் ஆண் குழந்தையைப் பெற்ற பின் குழந்தையின் உருவத்தை உரு வாரமாகச் செய்து வைக்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கலாம். எது எப்படி இருந்த போதிலும் இந்த உருவம் குழந்தையின் உருவம் என்பதில் ஐயமில்லை. கோவைக்கருகில் உள்ள போளுவாம்பட்டியில் கிடைத்த சுடுமண் பொம்மைகள் கூட குழந்தைகளின் உருவங்கள் என்பதிற்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

பெண் உருவங்கள் மிகவும் நேர்த்தியாகவும் அழகுமிக்கதாகவும் செய்யப் பெற்றுள்ளன. தாய்த் தெய்வத்திற்கு அக்கால மக்கள் காட்டிய அன்பினையும் பற்றினையும் காட்டுகின்றது. தாய்த் தெய்வம் தகடூர் நாட்டு மக்களிடம் பேரிடம் பெற்று விளங்கியது. இன்றுவரை செல்வாக்கு பெற்று விளங்கி வருகின்றது. சில கிராமங்களில் தாய்த் தெய்வம் பொம்மைகளாக செய்து வழிபட்டுவருவதைப் பார்க்கலாம். தாய்த் தெய்வக் கோவில்களில் மனித உருவங்கள் குழந்தைகளின் உருவங்கள் ஆகியவை செய்து வைக்கப் பெறுகின்றன.

இரு நூறு ஆண்டுகளாக நடுகல் கோயில்களில் குதிரை உருவங்கள் செய்து வைக்கப் பெறுகின்றன. மேலும் முனிஸ்வரன் உருவங்கள் மூன்றாள் உயரத்திற்குச் செய்து வைக்கின்றனர். இது சமண சமயத்தின் கோட்பாட்டின் அடிப்படையில் எழுந்தது. சமணர்கள் பெரிய உருவத்தின் ஆன்மா பெரியது என்றும் சிறிய உருவத்தின் ஆன்மா சிறியது என்றும் கூறினர். யானையின் உருவத்திற்கு யானையின் 'ஆன்மா' பெரிதாக உடல் முழுவதும் பரவியிருந்தது என்றும் எறும்பிற்கு எற்ப அந்த உருவத்தில் சிறு ஆன்மா இருந்தது என்றும் கருதினர். ஒரு விளக்கை சிறிய அறையில் வைத்தால் அந்த அறை முழுவதும் பரவியிருக்கும். அதுபோலவே பெரிய அறையில் வைத்தால் அந்த அறை முழுவதும் பரவியிருக்கும். அதுபோலவே ஆன்மா பெரிய உடலுக்கு ஏற்றாற்போலவும் சிறிய உடலுக்கு ஏற்றாற்போலவும் நிற்கும். அந்த அடிப்படையில்தான் இந்த உருவங்கள் செய்யப்படுகின்றன.

◆

கேள்

சந்ரு





இன்றைய டமில் சூழலில் நுண்கலை

படைப்பாளி - படைப்பு - விமர்சனம்

"தாத்தா...பாரு பூச்சாண்டி படம் வரைஞ்சிருக்கேன்.."

"அய்..ய்யா... பாப்பாக்கு ஜாலி, இங்கபாரு தாத்தா உனக்கு வடை வாங்கியாந்திருக்கேன்"

ஆத்மார்த்தம், கண்களுக்குப் புலப்படாதது, அக, புற, வெளி நோக்கமற்ற வெளிப்பாடு, இனக்குழுமரபு, உலகமயம், நவீன வரலாறு தெரியாதவருக்குப் புரியாதது... என்று படைப்பாளிகளும்,

விமரிசகர்களும் தங்களது படைப்பில், புதைந்த ரகசியங்கள் பற்றிப் பேசி, எழுதி வருகிறார்கள். இதற்கான பின்புல விசாரணையாக...

* நுண்கலைத்துறை - தற்செயலாக... மனப்பதிவு, தன்முனைப்பு எனக் காட்சித் தோற்றங்களை (கொஞ்சம்) வடிவ, உருவங்களாக ஒரு தளத்தின் மேல் பதிவு செய்யும் வழிமுறையை மனித இனம் கொண்டுவந்துள்ளது. அவை காலம், சமூகச் சூழல் சார்ந்த நோக்கம், தளம், செயல்முறை என பல்வேறு வளர்ச்சி மாற்றங்களைக் கொண்டுள்ளது.

பிறசெயல் உற்பத்திகள் தகவலுக்கு உரியன என்றும், மொழி-நடிப்பு, சித்திரம் என்பன தகவல் பரிமாற்றத்திற்கு உரியன என்றும், இவற்றில் இசை, சித்திரம் என்பவை சிறப்பு பயிற்சி வகை சார்ந்தது என்றும், கலைத்துறை, 'நுண்கலை' என்றும் சாதி பிரிகிறது.

* கலைத்துறை (நவீனச் சூழல்)

சென்ற இரு நூற்றாண்டுகளில் கூர்மை பெற்ற தொழில் நுட்பம்-விஞ்ஞானம் வீசிய அணு குண்டுகளில் (உலகப்போர்கள்) உலக மக்கள் அடைந்த அச்ச மிகுதியும்..., மனித உரிமையின் பேரில் மதம், அரசு, இனக்குழு அடையாளம் என்ற அதிகார மையங்களுக்கு மாற்றாக கலைத்துறை தனக்கான புதிய தடங்களில் பயணிக்க நேர்ந்தமையும்.... (ஒரு விளங்கள்).

சிறப்பாகச் சித்திரம் பழகிய வித்தைக்காரர்களின் வீராப்பை புகைப்படப் பெட்டியின்... 'கிளிக்' சப்தம் மிரட்டியதும், ஆட்டம், பாட்டம் கொண்டாட்டம் எல்லாம் ஒளி-ஒலியாக குறுந்தகடுகளில் புகுந்தமையும், (கலைப்பொருள்-கைவினைப்பொருள்) படைப்பாளி, படைப்பு, உரிமை, ஆத்மா, பாணி போன்ற வசனங்களை நவீன பழம்பானை என்றது மீண்ட நவீனம். அரூபா ரூபம், அரூபம், அடர்த்தியான வண்ணக்கோர்வை, வெளிறிய வண்ணக்கோர்வை என்ற பாவனைக்குள், கலைப்படைப்பில் நுண்மம் தேடி..., நிகழ் பொழுதாய் பெற்ற ஊக்கம், உற்சாகம் என்பதன் மீட்டுருவான உற்பத்திப் பொருள் (கலைப்படைப்பு) நபரின் அனுபவம், பொருட் செலவீனம், வியாபாரம், விளம்பரம், அதிகாரம் என்பவைகளின் கூட்டுத்தொகை..., இது கலைப்படைப்பு என்ற பெயரால் ஒருவர் பிறர் மீது செலுத்தும் அராஜகத்தின் அடையாளம்- என்றுரைக்க..... இன்று நுண்கலை என கூட்டம் கூட்டி ஆடை கலைந்து, உடல் கீற இரத்த வாடை காட்டி வருகிறது உலகமயம்...(இது ஒருவகை விளக்கங்கள்).

"பூச்சாண்டி அழிஞ்சி போய்ட்டான் ...தாத்தா..பாரு.."

"எங்கம்மா..குட்டி கண்ணு... தாத்தாக்கு ஜாலி..."

* கலை படைப்பாளி (தனி நபர்)

ஜனனமும்-மரணமும் கேட்பார் அற்று...

தற்காப்பு-இன விருத்தி என்று சமூக நடைமுறையில் கற்ற வித்தைகள் தன் உரிமை-தொழில் முறை பேசி...விருப்பு, வெறுப்பில் தனிமை, பிறர்துணை, செயல் உற்பத்தி என உண்டு உறங்குவது பொழுது... வெகுளி இச்சை-அனிச்சையாக அச்சமுற்று வெறிகொண்டு, ஆற்றாது... ஆழ்ந்து...அமைதி கோருகிறது அனுபவம்.

தனி நபர்-சமூகம், தனது பாதுகாப்பாக பல்வேறு ஒழுங்கு முறைகளை கொண்டுள்ளது. இதில் நபரின் உற்பத்திப் பொருள் சமூக தேவை சார்ந்து சந்தை விலைகோரும்...

தோற்றம்-மாற்றம் என தனது வாழ்க்கை வழியில் தற்செயலாக எழுந்த வினா, தனது தொழில்முறை உற்பத்தியில் அடையாளம் கொண்டமை குறித்து நபர் மறு விசாரிப்பிற்கு உள்ளாவதும், சூழலின் நிர்ப்பந்தம், தொழில்முறை பழக்கம் என நபர் பொருள் உற்பத்தி செய்வது ஒழிவதும்..நடப்பு.

“தாத்தா... கக்கா வருது..”

“ஓடு சாமி...ஓடு கக்குஸ் ரூமுக்கு ஓடு...”

* கலைப்படைப்பு (உற்பத்திப் பொருள்)

“சட்டியிலிருந்து அக பேயிலே” குழந்தைகள் தன் முனைப்பும் விளையாட்டுமாக, மண்ணை கூட்டுவதும் கலைப்பதும், பிறர் தரும் ஊக்கம், குழந்தையின் வளர்ச்சி மாற்றம் என காட்சித் தோற்றங்கள் சித்திரங்களாக மாற்றம் கொள்வது இயல்பு.

தன்னிலும், தனது வெளிப்பாட்டிலும் தெளிவு தேடி, பிறர் சித்திரங்களை பிரதி செய்வது, நேரில் கண்ட காட்சித் தோற்றங்கள் மனபதிவின் வெளிப்பாடு என் சித்திர பயிற்சி முறை கொள்வது நபரின் ஆர்வம் சார்ந்தது. தன்னை கலைத்துறை அங்கமாக காண முற்படும் வழியில், கலைப்பற்றிய கருத்து முரண், சிந்தனைப்போக்கு, சித்திரங்களின் பல்வேறு வகை பயன்பாடு, தொழில்முறை போட்டி என்பவைகளை நபர் எதிர்கொள்வது இயல்பு. இப்பயணத்தை தனது கலைதுறை அனுபவமாக நபர் நம்ப முற்படுவதும் இயல்பு. இவ்வகையில் எதார்த்தமாக தான் பெரும் தாக்கம், வெளிப்பாடுகள், கலைவகை, கலைப்படைப்பு என நபர் கோரும் உரிமை விளங்குகிறது.

“என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க....”.

“மண்ண தின்னு படைப்பாளி லோகம் காட்ருறு..வா..வா..”

*தூண்டல்

தூண்டலும், துலங்கலும் புலன்வகை இயல்பு(பேரியக்கம்) நாளும், பொழுதும் அனுதி கால வினா(உயிர் வாழ்தல்) அனுபவித்தல், கவனித்தல், வெளிப்பாட்டு வகை(படைப்பு).

*கவனித்தல்

பாவனை, பாவித்தலை அனுபவமாக பெறுதல் தனக்கும் பிறருக்குமான அடையாளம் காணுதல் தனது வெளிப்பாடுகள் குறித்து வினாக் கொள்ளுதல்.

*வெளிப்பாடு

தன்னில் நேர்ந்த தாக்கம் அறிய, உணர்வு-மொழி, காட்சிவகையான மனப்பதிவில், (ஆழ்மன வெளிப்பாடு-கனவு வகையறாக்கள்) சூழல், அனுபவம் சார்ந்து விசாரனை களம், படைப்புத்தளம் என வெளிப்படும் புனைவு வகை அடையாளம்.

*கால கவனமற்ற நிலை.

இச்சை-அனிச்சையாக நேரும் குணவிகாரம் (வெறுமை) செயல் உற்பத்தியில் உடல்,மனம் கொள்ளும் ஒத்திசைவு நிலை(தற்செயல்), யாவற்றிலும் ஊக்கம், உற்சாகம் பாவித்தல்(அனுபவம்).

"நெஞ்சோடு புலம்பல்"

*தேடல்

மினு மினுன்னு நெளியுது, வித விதமா காணுது
இனம் புரியாம மனசு பதபதைக்குது..

பாம்பு

வானில், கண்டத்தில், இடுப்பில், எலி அடைகாக்கும் முட்டையில், வண்டி தடத்தில், சிலம்பாட்டத்தில், செங்கல் அடுக்கில், துளிர் முறப்பில்..... மின்னல் கீற்றில்.

சுயம் தேடி

மீன் தொட்டிக்குப்பின், நனைந்த முக்காட்டில்,
தன்முகம் அல்ல என முனங்குவது.

சாவு

தூக்கம் கெட்ட தேடல்...ஆக்கம் கெட்டது.

*கலை படைப்பில் மறைபொருள்

நெனப்பு, படைப்ப துரத்த., படைப்பு நெனப்ப துரத்த ரச பாசமா தொலைந்த பொழுது.

* ரசனை

ரதி புராணம்..... வழிய வந்தது? வலிந்து பெற்றது?.. பழக்கத்தில் நேர்ந்தது? எமன் கொலை காரனா?

(காலன்).

*கற்பனை

மொழி ஒரு கற்பனை.

சூழல் சார்ந்து குறிப்படைந்த எண்ணப்புனைவு. அனுமானம், சாடை, கட்டளை என்பன. நோக்க விளைவு சார்ந்து கற்பனையும் பொய்யும் வேறுபடும். "சிவன் முடி அக்கினி" பிரம்மன் தான் பார்த்ததாக சொன்னது

- பொய்...

*இனம் புரியா உணர்வு-

தானே அறிய முற்படலாம், வைத்தியரை அனுகலாம், இஷ்ட தேவதையை வேண்டி மொட்டை போடலாம்.

*புரிதல்

கட்சி - வாக்காளர் - சின்னம்

கலைத்துறை-படைப்பாளி - படைப்பு

நமது புரிதல் எது குறித்தது?

"பிச்சை கேட்போருக்கு பிச்சை போடு

உதவி செய்தோருக்கு வாழ்த்து சொல்லு".

தொடுவானம்மோ?, சிறுதும்போ? எதிர்நோக்க நம்முள் விளைந்தது ஊக்கமும் உற்சாகமும். எனில்

இந்த படப்பு-படப்பாளிகளுக்கு நம்மிடத்தில் என்ன வேலை....

• • •

அன்றும் - இன்றும்

இந்திய கலை மரபு-வாலாறு (கொஞ்சம்)

காலவரை, சமூக நிகழ்வு, அடையாளம், தொகுப்பாளரின் நோக்கம் என்பன வரலாற்று குறிப்பாக.

எது நமது இந்தியா? எது கலைமரபு? இன்றைய தேவை (உலகமயம்)?.

வேதகால சாஸ்திரங்கள்? சிந்து வெளி நாகரீகம்? சமண-பௌத்த புனைக்கதை-வரலாறு? துவைதம், அத்வைதம், பேதா பேதங்களின் தர்க்கம்? சந்திர குப்த மௌரியர் கட்டி இருந்த தங்கப்பல்? பல்லவ அரசருள் சித்திரக்கார புலி? பக்தி இயக்கம்+கலை இலக்கியம்+அரசியல்? சிற்பிக்கு ராஜ ராஜ பெருந்தட்சன் என்ற பெயர் சூட்டு நாளில் தீக்கிரையான நகரங்கள்? கஜிராகோ தேர் ஓட்டத்தில் சுழலும் மாந்தரின் கூட்டுக் கலவை? ராஜ புதனத்தில், முகமதியர் ஓத துயிலும் திரு வில்லிப்புத்தூர் ஆண்டாள்? இந்திய சுதந்திரம், சுதேசி, பரதேசி கலை, கலப்பு வளையரா? கலைமரபும், வரலாறும் தேடி புத்தகத்திலிருந்து புத்தகம் செல்ல...

"சித்திரக்கூடம் தனை தினம் தினம் காண்போருக்கு பத்திரம் ஏதுக்கடி...பத்திரம் ஏதுக்கடி..."

வீதி வழி பாடுது பண்டாரம் துந்தனா...

பாறைகளில் சித்திரம் வரைந்த பொழுதும், உணர்வும் சுய அடையாளமாக.... அனித்தியம், அனாத்மா, கொல்லாமை, சித், ஆனந்தம், பாற்கடல் பள்ளி ஓடி ஓடி உட்கலந்த ஜோதி...என வான், புவி, மானுடம் கண்டோரின் அனுபவம் காணும் திசை எங்கும் கலை வடிவங்களாக...அவற்றுள் ஆழ்ந்த பொருளும், சுய அடையாளம் தேடி வெடி குண்டகளோடு அலையும் மனிதர்கள் மத்தியில் அவிழ்க்கப்பட வேண்டிய ரகசியமும்...

"காட்சிப் பதிவில் கோரம் தவிர்த்தல்"

சித்திரமும் கைபழக்கம்...பழக்கம் சுமை எனில் கைவிடு.

• • •

நேற்றும்-இன்றும்

இந்திய கலைதுறை சூழல்

விஞ்ஞானம், நவீனம், உலக்மயம் என்பவை சென்ற இரு நூற்றாண்டுகால தொடர் என குறிப்பிடுகிறார்கள்.

உலகப்போரில் ஐரோப்பிய மக்களும், சிந்தனையாளர்களும், அனுபவித்த துயரம், ஆங்கிலேயரின் ஆட்சியை அகற்ற இந்திய மக்களும், தலைவர்களும் அடைந்த துயரம்...சமகால சூழல் சார்ந்தவை. நாடு, அரசு, மதம், இனக்குழு அடையாளம் என வேறுபட்ட மக்களிடையே நேர்ந்த கலை-கலாச்சார கலப்பு என்பதை நல்லெண்ண இணக்கம், நெருக்கடி பழக்கம் என இரு பிரிவாக குறிப்பிடலாம்.

மக்களிடையே வரி வசூல் செய்து ஆங்கில அரசுக்கு கப்பம் கட்டிவந்த இந்திய மன்னர்களும், பெருங்குடிகளும், பரவலாக ஆங்கிலேயரின் மொழி, நடைஉடைபாவனை, மதம், கல்விமுறை என பல்வேறு விபரங்களை பழகியதும், தங்களுடையதாக பாவித்ததும், இந்திய சுதந்திரத்திற்கு எதிரானது என உணர்ந்த தலைவர்கள் அன்னிய கலாச்சாரம், பொருள் ஆகியவற்றை புறக்கணித்து போராட்டங்கள் கண்டது வரலாற்று குறிப்பு.

எனினும்...

விக்டோரியா மகாராணியின் கிரீடத்தை இந்து மன்னர்கள்-ஜமீன்கள் தங்கள் சுய உருவசித்திரங்களிலும், புகைப்படங்களிலும் கைப்பற்றி இருந்தார்கள்.

காட்டு ஐயனார் கோவிலில் வேல் கம்பு, பறை, வேட்டை நாய் சகிதமாய் காவல் புரிந்தோரை, துப்பாக்கியோடு வந்த ஆங்கில சிப்பாய் பொம்மைகள் இடம் பெயர்த்தன.

ஆங்கில காதல்-திர்லர் இந்திய சினிமாக்களாகின.

பெட்டிக் கடைகள், இன்டர் நெட் திறந்த வெளிபல்கலை.. வீட்டு வாசலில் பிளாஸ்டிக் மா இலை தோரணங்கள்... நவீனம்-பின் நவீனம் என்ற கலை-இலக்கிய கோதாக்கள்...

டமில் சூழலில்

நவீனக்கவின்கலை பீடம் ஏறிய கதா

சென்னை அரசு கவின் கலை கல்லூரி ஓர் உற்பத்திக்களம். இந்திய கலை-கை வினை பொருட்களில் நாட்டம் கொண்ட ஆங்கிலேய அதிகாரிகள், தங்களது படைக வர்க்கத்திற்கு தேவையான கைவினைப் பொருட்களை தமிழக கலைஞர்களைக்கொண்டு செய்து பெற விருப்பமுற்றனர். அவ்வகையில் [illegible]களில் சென்னையில் துவங்கிய கைவினைபொருள் தயாரிப்பு மற்றும் பயிற்சிக் கூடம். ஆங்கில கலைமரபு பயிற்சி முறையாக கலை பயிற்சி பள்ளி என தனது பணியை - தொடர்கிறது.

இந்திய சுதந்திர போராட்டங்களுக்கு இடையே(வெற்றிவேல்) சுதேசிய கலைமரபு (துப்பாக்கி) ஐரோப்பா கலைமரபு என இந்திய கலைஞர்கள் இரு அணி பிரிந்து பாரத் மாதாக் கி ஜேய்... போட்டுக்கொண்டு இருந்தவர்களில் சிலரை இந்திய மக்கள் நமது கலைஞர்களாக அறிய நேர்ந்தது.

சென்னை அரசு கவின்கலை கல்லூரியில் தலைமை பொறுப்பு ஏற்ற முதல் இந்தியர் திரு தேவ் பிரசாத் ராய் சௌத்திரி அவர்கள். அவரது கரங்களில் ஒரு புறம் தூரிகை உருகிய வங்க பாணி நீர் வண்ண ஓவியம் காணும், மறுபுறம், வெண்கலம் ஆதிகால ஆங்கில சிற்பங்களுக்கு சவால்விடும்.

சுதந்திர போராட்ட நிகழ்வு, மன்னர், பெருங்குடி, உழைப்போர் என இவரது சிற்பத் தொகுதிகள் பொது இடங்களில் காட்சி அமைந்தன. தேசத் தலைவர்கள், அரசு உயர் அதிகாரிகள், பெருங்குடிகள் என பலரும் திரு ராய் அவர்களை கௌரவித்தார்கள். இவ்வகையில் திரு.ராய் அவர்களின் கலை ஆளுமை சக கலைஞர்களையும், மாணவர்களையும் தன்வயப்படுத்தியது.

சுதந்திர இந்தியர்கள் ஐரேர் அரசியல், பொருளாதாரம், கலாச்சார நிகழ்வுகளை புத்தகம், பத்திரிக்கைகளில் வாசித்தனர். திரு.ராய் அவர்களுக்குப்பின் திரு.பனிக்கர் அவர்கள் கல்லூரி தலைமைப் பொறுப்பு ஏற்றார். அச் சூழலில் திரு.ராம்கோபால், திரு.தனபால், திரு.சந்தானராஜ், திரு.அந்தோனிதாஸ் ஆகியோர் தங்களது கலை ஆளுமையால் பலரது கவனத்தை தன்வயப்படுத்தினார்கள்.

கலைத்துறையில் திரு பணிக்கர் தனக்கான தனி அடையாளம் தேடி வண்ணத் தூரிகையை திரைச் சேலையில் தேய்த்து, கரைந்து தன்னை நவீன கலா வித்தகராக காண நேர்ந்த காலத்தில், கலை பயிற்சித்திறனில் அக்கறை கொண்ட மாணவர்களும், இலக்கியம், பத்திரிகை மற்றும் பல பிரபலங்கள் திரு பணிக்கர் நவீனக் கலை என்ற பெயரில் இந்திய கலைமரபை சீர்கெடுக்க வந்தவர் என்று குறிசொன்னார்கள். அவர்களது சந்தேகம் - எனது ஞாயம் என்பதாக, "வளரும் கலையே...ராய் சௌத்ரி இந்திய வேலிக்குள் வளர்ந்த மரம். ஐரோப் வேலி அறுத்து திறந்து காட்டுகிறது கலை வெளியை...வா ...வா" என சொல்லாமல் சொல்லி செயல் உரைக்க...

"யாதும் ஊரே யாவரும் கேளீர்... அடேங்கப்ப....ங்கப்பா..."

இக்கல்லூரி வளாகத்துள் ஐரோப் ஆதி மாஸ்டர்களும், நவீன மாஸ்டர்களும், பக்கம் பக்கமாக கையில் கவுக்கோடு புறண்டார்கள். கலை பயிற்சித்திறன் விரும்புவோர் தங்கள் முகங்களை ரெம்ராண்ட்,

ரூபன் டெக்னிக்கில் கண்டார்கள் - அதற்கு இயலாதோர் வான்கோ, கோகெய்ன் டெக், அதற்கும் வழியற்றோர் பிக்காசோ, பால்கிலி மற்றும் சாக்ஸ்சன்போலக், கான்டிலிஸ்கி என டமில் கலைப்படைப்பாளிகள் தத்தமது முகவரி கண்டார்கள்.

"பிரதி..பிரதியிலும் பிரதி....பிர..... ப்ரா...ர..."

இக்கலைஞர்களின் கலை பற்றிய அறிவு

*ஐரோப்பா படம் பார்-படைப்பு சுந்திரம் கொள்.

*சந்தை தேடு, படம் அதுபாட்டுக்கு நவீனம் பேசும், அத காசாக்க வழிபாரு.

*வாயி சோறு தின்ன மட்டும்.

இவர்களின் செயல்பாடுகளை ஆங்கிலம் பேசக்கற்றோர், அன்னியச் சரக்கில் மோகம் கொண்டோர், வழக்கம்போல புதுமை விரும்பும் புத்திகள் வாழ்த்தி வரவேற்றன.

கலை ஆர்வாளர்களின் எதிர்ப்பும், தங்களது படைப்பறிவு போதாமையுமாக தங்கள் படைப்புகளில் இந்திய வரைபடத்தைத் தேடி அலைந்து சிவலிங்க சிம்பாலிசம், காளியாட்ட கலரிசம், பிள்ளையார் கியூபிசம், அஜீரன சர்ரியலீசம் என புது புது இசம், பாணி வகையறா கண்டுபிடிப்புகள்.

தொடர..

ஆர்ட் அக்காடமி, ஆர்ட் கேலரி, ஆர்ட் கிரிடிக், அரசு, தனியார் ஊதியம், பரிசு, உயர்பதவி (இதில் தேர்தல் கூட்டணி தனிக் கதா) என இவர்களின் நவீன கலை உலக உலா பலரை கலை பயிற்சித் திறனில் நம்பிக்கை அற செய்தது. சிலரை புத்தி சுவாதீனப்படுத்தியது....தனி வகை......

இக்காலச் சூழலில் மரபைப் பிளந்து நவீன இலக்கிய-நாடகம் காண விளைந்தோர் தங்களின்அச்சுப் பிரதிகளுக்கு புக் கவர் காட்சி விளக்கப்படம் தேடி அலைய...தமிழ் சீரியஸ் ரீடர்கள் கைகளில் உலாவந்த டமில் நவீன கலைப்படைப்புகள். வியாபார போட்டிக்கு இடையே பிரபல பத்திரிக்கைகளையும் அலங்கரித்து தமிழ் பெருங்குடி மக்களை சுற்றி சுற்றி வளர்ந்துவருகிறது.

"செல்லம்..நவீன கலா ங்கிற பேர்ராசிக்கு நல்ல சீட்டா எடுத்துப்போடு..."....நோக்கமற்று, அக,புற வெளி, ஆத்மவெளி, கண்களுக்கு புலப்படா வெளி எல்லாம் பாய்ந்து கம்யூ டெக் வழி செத்த

பூனை, மயிர் கற்றை காந்தி, ஐயனார் மூஞ்சி, டப்ர டக்கான் ஆம்பள பொம்பள, ரூபா அரூபா சிட்டைகள் டமில் பிடம் ஏறின.

•••

படைப்பாளி x விமரிசகர்

*ஒரு செயல் உற்பத்திக்கான காரணா காரியம் அறிதல்

*தனது ஆய்வு நோக்கில் நடுநிலை வகித்தல்.

*தனிநபர்-சமூகம் இணக்கம் எடுத்துரைத்தல்.

படித்தவாள் ரெண்டு புகழ, வெள்ளை, சொல்லையா அலையிரவாள் கலை படைப்புன்னு நஞ்ச பண்றாளா, வேம்ப பண்றாளான்னு அறியாம, அவாள கல படைப்பாளி, கலபடைப்புன்னு நம்பி ஜனம் அழையாது...(ஆதி கால - ஔவை).

விருப்பு-வெறுப்பின் வெளிப்பாடு அல்ல கலைப்படைப்பு ..பட்ட அறிவு. (ஆனந்த குமாரசாமி)

கீரையான் புத்துல பால் ஊத்தி, பழம் உரிச்சி வெச்சா... நாக தோசம் தீரும்...?

கலியுக அகத்திய முனிவர்: வந்த ஜனம் இங்க இருக்க., உங்களுக்கு சோலைக்குள்ள தனியா என்ன வேல...இங்க வாங்கப்பா... இவங்க மேற இருந்து பொணத்த கொண்டாந்து சோலைக்குள்ள போட்டுட்டு போயிடுவாங்க, நம்மள போலீஸ் வந்து ரோந்து பண்ணும்...

அருவாள் சாமி: எனக்கு அருள் வரும்போது என்ன நடக்குன்னு தெரியாது. ரெண்டு பேரு அருவா பிடிக்க அது மேல ஏறி நான் அருள்வாக்கு சொல்றதா கூடிய ஜனம் சொல்லும்...

அருவால் எடுபிடி: பத்து, இருவது வருசமா அருவா சாமி அருள் வாக்கு சொல்லி வருது, நல்ல பணம் காசு, செல்வாக்கு, யாரு கண்ணு பட்டதோ? செய்வினையோ தெரியல? இந்த ஒன்னற வருசமா அருவா சாமிக்கு நேரம் சரியில்ல. காணத கோவில்,

பண்ணாத பூச, தின்னாத பச்சயிலை இல்ல....ம்..ஒன்னுலையும் சரிப்படல, இந்த அகத்திய முனிக்கிட்ட திரு நீரு வாங்கி போட்டா சரியாயிடுமுன்னு நம்பி வந்திருக்கோம்.

வெளியான செய்தி, கல, இலக்கிய படைப்புகளுக்கு வாழ்த்து எழுதி, அச்சு ஏறின வகையராக்கள கட்பண்ணி ஆல்பம்-அச்சிட்ட புத்தகப்

போட்டு கலையுலகில் சுயம் தேடும் பயில்வான்களை இங்கு சந்திக்கலாம்...

கல படைப்பாளி, தன் படப்புல விட்ட, நோக்க மற்ற பகுதி, ஐரோப்பிய இந்தியா பகுதி, நவீனத்தில தனி தமிழ் பகுதி என விமரிசகர், விமரிசனங்களில் தனித்தனி பங்கு பணிகளுண்டு...

படைப்பாளி சுய விமரிசனம்

நம்மள கல படைக்க சொல்லி யார் அழுதா?கல படப்புங்கிறது நாம பேசிப் பழகின பொழப்பா? எத்தின படம் கிழிச்சோம்... ஏன்? படப்புன்னு நெனச்சது, செஞ்சதில நம்ம வக்கு என்ன? - நமக்கும் என்ன வரவு?

விமரிசகர் சுய விமரிசனம்

* அடுத்தவாள் கலை படப்பு கிடக்கட்டும், நம்மள நாமே புரிஞ்சிக்க மெனக்கிட்டோமா?

* ஸீனியரா, இம்ரசிவா, எக்ஸ்பிரசீவா, சிந்தசீசா, காஸ்மிக்கோவா, கைராளீரா படைப்பாளி படப்புல எழுதி வச்சது நம்ம கண்ணுக்கு மட்டும் தெரியிதே ஏன்? எப்படி? (படைப்பாளிக்கே தெரியாதது).

* கல விமரிசனமுன்னு பத்துகாசு புரயோசனமில்லாத இந்த வேலைய செய்யிர நேரத்தில, ஆஸ்திரேலியா, காங்காங்கு, அலாஸ்சிஸகோன்னு தேசாந்திரம் சுத்தி வரலாமே?





" படிச்ச அறிவு மத மதக்க. கை பரபக்க சிட்டுக்கவி எழுதலாம்...மரம் செடி கொடிகளுக்கு தண்ணி ஊத்தலாம்தானே...?

கலைபடப்பாளி x பொது ஜனம்

அன்னைக்கு சாயந்தரம் எல்லம்மன் கோவில், பூ மிதி திருவிழா. மஞ்சள் நீர், பூமாலை சகிதமா கிடுகிடுத்து வேண்டுதல்கள் வரிசை நின்றன. கோவிந்தா...கோவிந்தான்னு ஜனக் கூட்டம் அலை மோத, வீதி உலா வந்த கோவிந்தாவும் சங்கமிக்க...

எங்கும் ஏக கால, கோல,கோசம்...தலைப்பூசாரி திரு நீர் பூச, ஒருவர் பின் ஒருவராக தனல் விரிப்பில், நடந்து ஓடினர். பாதி ஓடி குறுக்கே பாய்ந்தனர். ஓடோடி விழுந்தனர்....அவரவர் உறவு அவரவருக்கு பாரபட்சம் பாராமல் நெருப்பு மிதித்த கால்களுக்கு

பால் ஊற்று, தோல் மீது அமர்த்தி இடம் அகல...

ஓடி விழுந்தவர்களுக்காக 'கோவிந்த' கோசம். சுதி கூடவோ, குறையவோ இல்லை.இக்காட்சியை நேரில் கண்ட சிலர் கண்மூடி மௌனித்தனர்.

ஒரு கிழவனும், கிழவியும், பத்து வயது சிறுமி ஒருத்தியும் நடக்க, ஜன கோசம் ஒத்திசைய, தனல் நெருப்பு 'பூ' விரித்தது. 'கோவிந்தா...கோவிந்தா.."

தார் ரோடு, குட்டிச்சுவர், கித்தான், காகிதம் என சகல விதமான படப்பு - படப்பாளிகளோடு அவரவர் ரசனை, கைக்காசு நிலைக்குத் தகுந்தவாறு

பொது ஜனம் கை கோர்த்து பயணிக்கிறது.

படம் 1. பென்சில் சீவப்பட்ட பொழுது

*ஆள்காட்டி விரல் கீறி-நுண் துளி கனத்து பிடி கழன்று ...வடிவாகி...

*குருவி கூட்டில் முட்டை

சிற்றோடையில் கூழாங்கல்

அம்பு நுனி

மயில் தோகை கண்

இதய வடிவம்...

*எண்ணற்ற விரல்கள் பரவ

வேம்பு கிளை-இலை அசைந்து- ஒளி புகுந்து திரை விலக-தாளமிடும் சீவப்படாத பென்சில்.

படம் 2.

* பாட்டி கதையில்.,

'ஆண் வாடை வீசுது, பெண் வாடை வீசுது' என பேரண்ட பட்சிகள் தாளாட்ட...

* தூற்றிய தானியம் நிலம் பரவ

சுடலை வந்தாடுது காற்று...

* அம்மாவின் அம்மணம் கண்டது

நாலு வயது சுவர்...இருள்...

* விலா வெடித்து, சானம் புரிந்து

நெஞ்சுக்குழை கருக...

* நீலவானம் கண் திறக்க

குன்றின் மேல்

நிர்மூலமாய் நின்றது பேரண்டபட்சி..

மட ஆலயங்களில் பாதுகாப்பாய் இருக்கிறது புனிதம்.

அடி மாந்தை சுற்றிலும், கார்ச்சாலையில் வளாகத்தை சுற்றிலும், கிணற்றுச் சுவரில் பூந்தொட்டியில், கழிவறை கோப்பைக்கு இடையில்..துளிர்த்து நிற்கிறது மாம். வெட்டப்பட்ட பன்னீர்பூ மரத்தின் சல்லி வேர்களிலிருந்து...

அஞ்சலி

சுந்தர ராமசாமி என்றொரு இயக்கம்

முத்துச்செல்வம்

வசீகரமானவர் சுந்தர ராமசாமி. அவரைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் இருந்துகொண்டேயிருந்தது. அதில் பெரும்பாலானவர்கள் எழுத்தாளர்கள் என்பதுதான் ஆச்சர்யம். புதுப்புது வாசகர்களும் அவரைத் தேடி வருவார்கள். அவரிடம் கற்றுக்கொள்வதற்கு ஏராள மான விஷயங்கள் இருந்தன.

நவீன இலக்கியத்தில் அவரளவுக்கு எழுத்தில் சாதித்தவர்கள் மிகக்குறைவு. தனக்கென எந்த ஒரு முன்மாதிரியான எழுத்தையும் கொண்டிராதவர். அதேசமயம் தன் புதுமையான எழுத்தின் வழியாக தன்னைப் பின்பற்றுபவர்கள் என ஏராளமானவர்களை உருவாக்கினார்.

முன்னூறு பேர் கொண்ட நவீன இயக்கம் என்ற கேலிப்பேச்சு இப்போதும் தொடர்கிறது. ஆனால் உண்மையில் இந்த எண்ணிக்கை சில ஆயிரங் களைத் தொட்டிருக்கிறது. இதற்கு நேரிடையாகவோ அல்லது மறைமுக மாகவோ சு.ரா ஒரு முக்கியமான காரணி. இப்போது பல வணிக இதழ் களில் நவீன இயக்கத்தின் சில விஷயங்கள் வெளிவருகின்றதென்றால் அதற்கும் சு.ராவே காரணம். அவரிடம், அவர் எழுத்துகளின்மேல் மரியாதை கொண்ட சிலர் வெகுஜன இதழ்களில் பணியாற்றுவதும், அவர்களின் நவீன எழுத்துப் பயிற்சியும் வாசிப்பும்தான் இதற்குக் காரணம்.

சு.ராவின் படைப்புகள் பல - திரும்பத் திரும்ப மறுபதிப்பு கண்டுள்ளன. குறிப்பாக 'ஒரு புளிய மரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள்' - நாவல்கள்.

உலகின் பல பகுதிகளிலும் சு.ராவின் வாசகர்கள் பரந்துள்ளார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை. தமிழ்நாட்டின் கடைக்கோடி ஊரிலிருந்துகொண்டு, தன் எழுத்துகளின் வசீகரத்தால் பலரையும் தன்னை நோக்கி ஈர்த்தார். அவரின் விரிவான உரையாடல்களும் அன்பான வரவேற்பும் பலருக்கு இதமான கதகதப்பை வழங்கியது. அவர்மீது கடுமையான விமர்சனங்களைச செய்து வந்தவர்களும் நாகர் கோவிலில் அவரை நேரில் சந்தித்தார்கள். அதேபோல அவருக்கு எதிரான கருத்து நிலைப் பாடுகள் கொண்டிருந்த எழுத்தாளர்களும்கூட தங்களது நூல்களின் பிரதிகளை அவருக்கு அனுப்பி வைத்து அவரின்

கருத்தை அறியக் காத்திருந்தார்கள்.

சு.ரா அளவிற்கு இளம் எழுத்தாளர்களை உருவாக்கியவர்கள் இல்லையென்றே கூறலாம். அவர்களின் ஆர்வமான துறையில் மேலதிகமாக வாசிக்க வேண்டிய நூல்களின் பட்டியலும், அதில் சில நூல்களையாவது அவரின் நூலகத்திலிருந்து கொடுத்துதவினார். இளம் படைப்பாளிகளின் செழுமைக்குப் பல வகைகளில் காரணியாக இருந்தவர்.

நவீன இலக்கியத்தை வளர்த்தெடுக்கும் ஒரு இயக்கமாகவே சு.ரா. தன் வாழ்நாளைச் செலவழித்தார். சு.ரா. மதித்த எழுத்தாளர் க.நா.சு. க.நா.சுவின் நூல் பெயர் 'இலக்கியத்திற்கு ஒரு இயக்கம்'. அதை நடைமுறையில் வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டியவர் சுந்தர ராமசாமி. அந்த மட்டில் அவர் ஒரு இலக்கிய இயக்கம். ◆

அமிர்தா ப்ரிதம்

(1919-2005)

2002லிருந்து இடுப்பு எலும்பு முறிவினால் படுத்த படுக்கையாயிருந்து வந்த ப்ரிதம், சமீபத்தில் தூக்கத்திலேயே இறந்துபோனார், 35 ஆண்டுகளாக இவர் நடத்தி வந்த பஞ்சாபி பத்திரிகை 'நாகமணி' 2002இல் நின்றுபோனது. பிரிவினை குறித்தும் பெண்கள் நிலை குறித்தும் இவர் எழுதியவை முக்கிய எழுத்துக்களாகும். இந்தியிலும் எழுதி வந்த ப்ரிதம் 24 நாவல்கள், 15 சிறுகதைத் தொகுதிகள் மற்றும் 23 உரைநடைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார், சாகித்ய அகாடெமி, ஞானபீடம், பத்ம விபூஷன், டாக்டர் பட்டங்கள் என எண்ணற்ற விருதுகளும் பரிசுகளும் பெற்றவர்.

தமிழ் மொழிபெயர்ப்பில் வந்துள்ள இவரது நாவல் 'ராதையுமில்லை ருக்மணி யுமில்லை' (நேஷனல் புக் ட்ரஸ்ட், 1995) ஒவ்வொரு வாசகனுக்கும் அக்கறை கொள்ள வேண்டிய பிரதியாகும். "...ஃபிராய்டோ யுங்கோ இன்னமும் மனித மனத்தின் ஏழாவழ பாதாளத்தில் இறங்க முடியவில்லை, மனிதனின் 'சுயம்' தன்னைத் தானே ஃபிராய்டாகவோ, யுங்காகவோ ஆக்கிக்கொண்டால், ஒருக்கால் இந்த ஏழாவது பாதாளத்தின் ஆழத்தை அறியக்கூடும், இதனால் இந்த ஏழாவது கேள்வி உங்களது உள்ளத்தின் ஏழாவது பாதாளத்திலிருந்து எழும்பட்டும், அதற்கான பதிலையும் அந்தப் பாதாளத்திலிருந்து தேடிக்கொணருட்டும் என நான் விரும்புகிறேன்" (பக். 107-108) என்று அதில் ஓர் இடம் வருகின்றது.

சா. தேவதாஸ்

அஞ்சலி

நிர்மல் வர்மா

இந்தி மொழிச் சிறுகதை வளர்ச்சிக்கு நிர்மல் வர்மாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது, Kaivey aur kala pani என்னும் சிறுகதைத் தொகுப்பிற்காக 1986இல் சாகித்ய அகாடெமி பரிசு பெற்றவர், நான்கு நாவல்களும் ஐந்து சிறுகதைத் தொகுதிகளும் வெளியிட்டுள்ள இவர், சிறந்த விமர்சகரும் சிந்தனையாளரும் கூட. செக்கோஸ்லாகியாவில் சிறிதுகாலம் இருந்த இவர் சில செக் மொழி நாவல்களை இந்தியில் மொழிபெயர்த்துள்ளார்.

"The Burning Bough" (Yatra (4), 1994) என்னும் தலைப்பில் கும்பமேளா குறித்து இவர் எழுதியுள்ள ஒரு பயணக் கட்டுரையில், திடீரென்று குடும்ப வாழ்வைத் துறந்து, சந்நியாசம் மேற்கொள்ளும் ஒருவரைச் சந்தித்துவிட்டு, இப்படிக் குறிப்பிடுகிறார்: "...இத்தருணத்தைத் தாண்டிச் சென்று ஒருவன் புதிதாய் வாழ முடிவது சாத்தியமா... கங்கைக் கரை மணலின் கீழே தன் பழைய வாழ்க்கை, நினைவு, தவறுகள் மற்றும் வருத்தங்களை அவன் புதைத்துவிட்டு, புதிதாய் தொடங்கிட, எங்கேனும் செல்லக்கூடுமா? ஆனால் அவனை இங்கே இன்று இழுத்து வந்த அதே தவறுகளை, குற்றங்களை மற்றும் பாவங்களை அவன் திரும்பச் செய்ய மாட்டான் என்பதற்கான நிச்சயத்தன்மை ஏதேனும் உள்ளதா? வாழ்க்கை குறித்து 'மாதிரி'வரைவும் 'திருத்தமான' வரைவும் ஒருவர் பெற முடியுமா?"

இந்தச் சிக்கலை அடிப்படையாக வைத்து ஒரு சிறுகதையும் எழுதியுள்ளார்.

சேதன உலகத்தை அசேதன உலகத்திடமிருந்து பிரித்துவிட்டதுதான் ஐரோப்பிய நாகரிகத்தின் மிகவும் துயரகரமான அம்சம் என்று கருதும் வர்மா, கதேயின் மேற்கோள் ஒன்றை எடுத்துக்காட்டுவார், "ஒவ்வொரு பாரிய பிரிவினையிலும் பைத்தியன் வித்து பொதிந்துள்ளது; அதன் வளர்ச்சியை அதிகப்படுத்திவிடாதிருப்பதில் ஒருவர் கவனமாக இருக்க வேண்டும்."

நிர்மல் வர்மாவின் பிரிவு இந்தி இலக்கியத்திற்கு மட்டுமல்லாது, இந்திய துணைக் கண்ட இலக்கியங்களுக்கும் பேரிழப்பாகும்.

சா. தேவதாஸ்


தி.நகரில்
ஒரு நவீன புத்தக
நகைக்கடை
New Book Lands
FOREIGN & INDIAN BOOKS
52-C, North Usman Road, T.Nagar
Chennai-600 017 Ph: 28158171
28156006 Fax:24336312
www.newbooklands.com

வளமையின் வாயிலாக வல்லமை பெற உங்களுக்கு வழிகாட்டுகிறது ஸ்ரீராம் சிட்ஸ்!



வளமைக்கு வல்லமை

உங்கள் பணத்தேவைகளைச் சமாளிக்க, வட்டிக்குக் கடன் வாங்க ஆயிரம் வழிகள் உண்டு. ஆனால், முறையான சேமிப்பின் மூலமாக வளமையை வளர்க்கவும், தேவைப்படும் போது, அதிலிருந்தே நிதியுதவி பெறும் வல்லமை பெறவும் வகைசெய்யும் சீட்டுத் திட்டங்களை உங்களுக்கு வழங்குகிறது ஸ்ரீராம் சிட்ஸ்.

முடிவுகள் யாவும் உங்கள் கையில்!

அனுபவ அறிவு நிறைந்த நம் முன்னோர்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உருவாக்கிய சீட்டுத் திட்டத்தில் சேமிக்கும் தொகை, காலம், கடன்பெறும் தொகை, வட்டி விகிதம் யாவும் உறுப்பினர்களாலேயே முடிவு செய்யப் படுகின்றன. வேறு யாரும் இதில் தலையிடவோ, பணத்தைக் கையாளவோ வாய்ப்பு இல்லை.

சமமான லாபம் எல்லோருக்கும்!

தேவைப்படும்போது, உறுப்பினர்கள் ஏல முறையில் சீட்டுத் தொகையைப் பெற்றுப் பயனடையும் அதே சமயத்தில், அனைத்து உறுப்பினர்களும் கசறுத் தொகை (Dividend) சமமாகப் பெறுவது இத்திட்டத்தின் தனிச் சிறப்பு அம்சம். ஏலத்தொகை உயர உயர, லாபமும் உயரும்.

ஸ்ரீராம் சிட்ஸ் சிறப்புகள்:

- 30 ஆண்டுகளாக பல லட்சம் குடும்பங்களின் வளமைக்கு வழிகாட்டி
- நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏராளமானவர்க்கு வேலை வாய்ப்பு
- சீட்டுத் தொகையாக இதுவரை ரூ.14,000 கோடிக்கு மேல் பட்டுவாடா
- சீட்டுப் பரிசுத் தொகையாக தினந்தோறும் சுமார் ரூ.10 கோடி பட்டுவாடா
- தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களில் 465க்கும் மேற்பட்ட கிளைகள்.

வளமைப் பாதைக்கு வருக!

இந்தியாவின் தலைசிறந்த சீட்டு நிதி நிறுவனமான ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு வாருங்கள். உங்களது பொருளாதார வளமைக்கு வல்லமை சேர்க்கும் சேமிப்புக் கலையையும், எளிதாக நிதியுதவி பெறும் வழிமுறையையும் அறிந்து கொள்ளுங்கள். வளமான வாழ்க்கைப் பாதைக்கு வாருங்கள்!

ஸ்ரீராம் சிட்ஸ்
தமிழ்நாடு (பி) லிமிடெட்

கிரீம்ஸ் துகார்
149 கிரீம்ஸ் சாலை
சென்னை 600 006. போன்: 52236000

WORD/SCT/T2/MAR05